R. C. 3623

Vol. I

R. R. No. 19.2.1979

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

DIGITIZED

Q6wM28
M99
117892

# LIFE OF
# REV. V. VETHANAYAGAM

BY

HIS DAUGHTER

## ANNE PETER.

---

கனம். வீரவாகு வேதநாயகம் ஐயரின்

# ஜீவிய விருத்தாந்தம்.

---

"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதைத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்புகிற யாவருக்கும் தந்தருளுவார்."

---

FIRST EDITION, 1,000 COPIES.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.

S. P. C. K. PRESS, VEPERY.

*Price, 2 Annas.* 1890. விலை, ௨ அணா.

Qbw M28
M99



REV. V. VETHANAYAGAM.
கனம்: வீரவாகு வேதநாயகம் ஐயர்.

# LIFE OF
# REV. V. VETHANAYAGAM

BY

HIS DAUGHTER

ANNE PETER.

---

## கனம்: வீரவாகு வேதநாயகம் ஐயரின்
# ஜீவிய விருத்தாந்தம்.

"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதைத் தந்தருளுவார். எனக்குமாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்புகிற யாவருக்கும் தந்தருளுவார்."

FIRST EDITION, 1,000 COPIES.

MADRAS:
THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.
S. P. C. K. PRESS, VEPERY.

1899.

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS—1899.



# PREFACE.

There will be *many* who will rejoice that the following brief Memoir of the late Rev. V. Vedhanayagam has been written. "The memory of the just is blessed." It was my privilege to enjoy the friendship of our late departed brother from my first arrival in Tinnevelly in 1865, till the day of his death. His was a cheery, whole-hearted friendship. In many ways he was a gifted, and, in all respects, a devoted "Servant of our Lord and Saviour Jesus Christ." He was a preacher above the ordinary type. The last time I heard him preach was at Palamcottah, on the occasion of the celebration of the Jubilee of the late revered Bishop Sargent. Taking for his text the words of St. James—"Every good gift, and every perfect gift is from above, and cometh down from the Father of lights, with whom is no variableness neither shadow of turning," he delivered a most able and appropriate address, which was listened to with wrapt attention, by all who heard it. His voice is now silent. We have known his loss, a loss still felt by the Tinnevelly Church. Yet, surely, "he being dead, yet speaketh"—in the life he lived for Christ—in the example he set of devoted service,—and in the faithful declaration of the truths of the Gospel which characterized his whole service in the Christian Church, and among the heathen. May the perusal

of this loving, simple, faithful record of the life-work of this devoted servant of God, be blessed to the souls of all who read it! And, may the Master graciously condescend to use it to stir up many to follow him as he followed Christ—to the everlasting praise of that same blessed Saviour!

PALAMCOTTAH, 15th December, 1898. } T. KEMBER.

# முகவுரை.

காலஞ்சென்ற கனம்: வீ. வேதநாயகம் ஐயரவர்களுடைய சுருக்கமான ஜீவிய சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறதென்பது அநேகருக்குச் சந்தோஷமாயிருக்கும். நீதிமானுடைய ஞாபகம் பாக்கியமுள்ளது. நான் 1865-ஆம் திருநெல்வேலி மிஷனுக்கு வந்த ஆரம்பமுதல் காலஞ்சென்றுபோன நம்முடைய சகோதரருடைய சிநேகத்தை அவர் மரணபரியந்தம் பெற்றுக் கொள்ளும்படியான சிலாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவரது சிநேகம் எவரையும் சந்தோஷிப்பிக்கிறதும் பூரண இருதயத்தோடு பொருந்தினதாகவும் இருந்தது. அநேக விஷயங்களில் விசேஷித்த வரம் பெற்றவராகவும், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து நாதருக்கு பக்தி சிரத்தையுள்ள ஊழியக்காரனாகவுமிருந்தார். அவர் சாதாரண பிரசங்கிகளுக்கு மேற்பட்ட பிரசங்க வல்லமையுள்ளவராயிருந்தார். காலஞ்சென்ற சார்ஜன்ட் அத்தியக்ஷருடைய ஜூபிலி உற்சவதினத்தில் பாளையங்கோட்டையில் அவர் செய்த பிரசங்கம் நான் கடைசியாகக் கேட்டது. "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமை நிழலுமில்லை" என்று பரி. யாக்கோபு எழுதிய வசனத்தின்பேரிலே மிகவும் திறமையும், சமயோசிதமுமான பிரசங்கம் செய்தார். சபை கூடிவந்த யாவரும் மனம் பரவசப்பட்டவர்களாய் அதிகக் கவனத்தோடு கேட்டார்கள். அவருடைய சத்தமானது இப்பொழுது அமைதலாயிருக்கிறது. அவரை இழந்துபோன நஷ்டத்துக்காக துக்கித்துக்கொண்டிருக்கிறோம். இந்த நஷ்டம் திருநெல்வேலி சபையினால் இன்னும் உணரப்படுகிறது. கிறிஸ்துவுக்காக அவர் செய்த ஜீவியத்தினாலும் பக்தி வைராக்கியத்தோடு செய்யப்படும் ஊழியத்துக்கு அவர் காண்பித்த மாதிரியினாலும் கிறிஸ்து சபையிலும் புறமதஸ்தர் நடுவிலும் அவர் ஊழியஞ்செய்த காலம் முழுவதும் சுவிசேஷத்தின்

சத்தியங்களை எதார்த்தப்படி கூறி அறிவித்ததினாலும், அவர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று உண்மையாகவே சொல்லலாம். பக்தி நிறைந்தவரான இந்த தேவ ஊழியக்காரர் தமது ஜீவகாலமுழுவதும் நடத்திய வேலையைப்பற்றி அன்புடன் எளிதான நடையில் எதார்த்தமாய் எழுதப்பட்டிருக்கிற இந்த பிரபந்தத்தை வாசிப்போர் யாவருடைய ஆத்துமாக்களுக்கும் ஆசீர்வாதமுள்ளதாயிருப்பதாக. அவர் கிறிஸ்துவைப் பின்பற்றினவண்ணம் அவரைப் பின்பற்றும்படி அநேகரை எழுப்பி விடுவதற்கும் நமது இரட்சண்ணிய பெருமானது நித்திய மகிமைக்கென்றும் இச்சிறு பிரபந்தத்தை நமது பரம எஜமான் தமது கிருபையினால் இதை கருவியாகப் பிரயோகிப்பாராக.

பாளையங்கோட்டை,<br>1898-௵ டிசெம்பர்மீ 15உ. } T. கெம்பர்.

---

## பொருள் அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| 1. இளமைப் பிராயம் .... .... .... .... .... | 1 |
| 2. தகப்பனார் செய்த தேவ ஊழியமும், சபைக்காகவும் மிஷனுக்காகவும் எடுத்துக்கொண்ட பிரயாசமும் .... .... .... .... .... .... | 13 |
| 3. அந்திய காலம் .... .... .... .... .... | 55 |
| 4. மற்றவர்கள் தகப்பனாரைப்பற்றிக் கொடுத்த சாட்சி.... | 75 |
| 5. முடிவுரை.... .... .... .... .... .... | 117 |


---

# LIFE OF REV. V. VETHANAYAGAM.

## கனம்: வீரவாகு வேதநாயகம் ஐயரின் ஜீவிய விருத்தாந்தம்.

### 1. இளமைப் பிராயம்.

இனம்: வீ. வேதநாயகம் ஐயரவர்கள் 1828-௵ திருநெல்வேலி ஜில்லாவில் இடையன்குடி என்ற ஒரு கிராமத்தில் பிறந்தார்கள். இது தற்காலத்தில் திருநெல்வேலி நாட்டிற்கு முக்கிய ஸ்தானமாகிய பாளையங்கோட்டைக்கு சுமார் 39 மைல் தூரத்தில் தென்கிழக்காயுள்ளதும் ஹிந்துக்களால் நிறைந்ததுமான ஒரு சிறு கிராமம். இடையன்குடி ஏறக்குறைய 40 வருஷக் காலமாய் கால்ட்வெல் அத்தியக்ஷரவர்களால் முக்கிய மிஷன் ஸ்தானமாக ஏற்படுத்தப்பட்டுத் தற்காலத்தில் பலவிஷயத்திலும் விசேஷித்த இடமாயிருக்கிறது. இதுதான் தகப்பனாரின் பிறந்த இடமும் அவர்கள் நிலங்களை இருந்த கிராமமாயும் இருந்தது. கிறிஸ்துமார்க்கம் அந்தப் பக்கங்களில் பிரவேசிக்கு முன்னதாக தகப்பனாரைச் சேர்ந்த பெயர்குலத்தார் தாழ்ந்த ஜாதியாரான ஜனங்களை அடிமைகளாக வாங்கி அவர்களை வேலைகொள்வது வழக்கம். அவ்விடங்களில் நிலங்களை எப்படி ஆஸ்தியாக எண்ணப்படுகின்றனவோ அப்படியே இந்த அடிமைகளையும்

னைத் தாக்கொள்வதுண்டு. இந்தவிதமாய்த் தகப்பனு
டைய பெற்றோருக்கும் சில அடிமைகளிருந்தார்கள்.
அந்த அடிமைகளை இவர்கள் கிறிஸ்துமார்க்கத்திற்
வந்த சில வருஷங்களுக்குப்பின் இவர்கள் சகோதர
ரெல்லாரும் போய் விடுதலையாக்கி விட்டுவிட்டார்கள்.
என் பாட்டனார் இந்துமார்க்கத்தில் அதிக வைராக்கி
யமுள்ளவராயிருந்தார். இருபத்தொரு பிட்டபோட்
விக்கிரகங்களுக்குப் பூசை செய்துவந்தார். இவ்வள
வைராக்கியமாயிருந்த அவர்கள் பிள்ளைகளை ஆண்ட
வர் ஆதிகாலமை பக்ஷத்ததுபோல தமக்கென்று தெரி
ந்துகொண்டார். என்னுடைய தகப்பனார் நாலுவயதுப் பி
ள்ளையாயிருக்கும்போதே அவர்களுடைய தகப்பனாரு
க்கு ஆறு வருஷத்திற்குப்பின் அவர்கள் தாயா
ரும் இருவரும் இந்துக்களாயிருக்கும்போதே மரித்துப்
போனார்கள். ஆதலால் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்
த நாலு ஆண்மக்களும் இரண்டு பெண்மக்களும் வெகு
சீக்கிரம் தாய்தகப்பனை இழந்த அநாதப் பிள்ளைகளாகு
ம்படி நேரிட்டது. இந்த விஷயம் துவக்கத்தில் விப
ரீதமாய்த் தோன்றினாலும் முடிவிலே அது தேவ ம
னமாய் நடந்ததாகக் காணப்பட்டது: எனென்றால்
என் தகப்பனாரின் மூத்த சகோதரன் தன் தகப்
பனுடைய ஜீவகாலத்திலேயே எஸ். பி. ஜி. மிஷனை
சேர்ந்த பாடசாலை ஒன்றில் படித்து கிறிஸ்துமார்க்க
சத்தியங்களை நன்றாய் உணர்ந்து தனக்கு அஞ்ஞானத்தி
லொரு நம்பிக்கையும் இல்லையென்று கண்டு தான் வாசித்தறிந்த
சத்தியங்களை வெளிப்படையாய் அறிக்கையிட்டு தக
தகப்பனார் இறந்த சொற்பகாலத்திற்குள்ளாகத் தா
மாத்திரம் ஞானஸ்நானம் பெற்றார்கள். பெயர்போன தஞ்சா
புரம் சேகரத்தில் வெகுகாலம் தேவ ஊழியம்பார்த்த
வர்களுடைய இருபத்தொரு உபதேசப் போதகன்மாருக்
கு தலைமையாயிருந்து 1885-ல் மரித்துப்போன உ
ஸ்ரீ ராவொரு ஐயர் என்ற இந்த தேவ ஊழியக்காரன் பி
யான தன் மூன்று சகோதரர்களையும் இரண்டு சகோதரி
களையும் கிறிஸ்துவின் மந்தையில் சேர்ப்பதற்கு நல்



ருவியாயிருந்தார்கள். இவர்களில் ஒரு சகோதரன்
இவர்களுடைய மாதிரியைப் பின்பற்றி உடனே கிறிஸ்
தவர்கள் ஆனார்கள். மற்றவர்களோ தங்கள் தாயா
ருடைய மரணத்திற்குப்பின் கிறிஸ்தவர்களானார்கள்.
இவர்களின் இளமைப் பிராயத்தில் இவர்கள் பெற்றோர்
மரித்திராவிட்டால் ஒருவேளை இவர்கள் குணப்படவும்
இவர்களால் குணப்பட்ட அனேக ஆத்துமாக்கள் இந்த
இரட்சிப்பைக் கண்டடையவும் ஏதுவிராது. என் தகப்ப
னார் எஸ். பி. ஜி. மிஷனைச் சேர்ந்த ஒரு குருவினால்
810-ல் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களுடைய
இந்துப் பேர் வேலுமயில். அதற்குப் பதிலாக ஞானஸ்
நானத்தில் வேதநாயகம் என்று பெயர் கொடுக்கப்பட்
டது. அவர்கள் மூத்த தமையனார் அக்காலத்திலுள்ள
கிராம பள்ளிக்கூடங்களில் முதலாவது பாடுக்காரரும்
அதற்குப்பின் உபாத்தியாயராகவும் இருந்து அந்தக்
காலத்து ஏற்பாட்டின்படி கிடைத்த சொற்ப வருமானத்
தைக்கொண்டு தாய்தகப்பனை யிழந்த தன் சகோதரர்
சகோதரிகளுக்குத் தகப்பனைப்போலிருந்து அவர்களை
ஆதரித்து முன்னுக்குக் கொண்டுவந்தார்கள். இப்படியிரு
க்குங்காலத்தில் என் தகப்பனார் சிறுபிராயத்தில் செய்
த துஷ்டத்தனமும், விளையாட்டுப்போல் மற்றவர்களுக்
கொடுக்கும் கஷ்டமும் இவ்வளவென்று சொல்லிமுடி
யாது. இவ்விதம் துஷ்டத்தனம் செய்துவந்த இவர்களைக்
கவனித்தவர்கள் பிற்காலத்தில் மெத்த சாதுவான குண
முடையவர்களாய்ப் போய்விட்டதைப் பார்த்தபோது
மிகுந்த ஆச்சரியத்தை யடைந்திருப்பார்கள் என்பதற்
குச் சந்தேகமில்லை. இதுகாரியங்களில் மூத்த தமைய
னார் எடுத்துக்கொண்ட பிரயாசமும், கஷ்டமும் அதிகம்.
அவர்களுக்கு விவாகமானபின்னும் இருவரும் இவர்க
ளுக்குத் தாயைப்போலவும், தகப்பனைப்போலவும் இரு
ந்து நடத்திவந்திருக்கிறார்கள். அந்த நன்றியை அவர்கள்
மறக்கவில்லை யென்பதற்கு அடையாளமாக 1880-ல்
தம் மூத்த சகோதரனுடைய கலியாணத்துக்கென்று
குளத்துக்கு இவர்கள் வந்து வண்டியைவிட்டு

இறங்கினவுடன் என் தகப்பனார் சந்தோஷம் பொறுக்
மாட்டாமல் என்னுடைய பெரிய தாயாரை ஒரு மையா
அழைத்துக்கொண்டு "இவர்கள் என்னை வளர்த்த தா
யென்று" அங்கிருந்த எல்லாருக்குமுன்பாகச் சொல்லி
தன் நன்றியை வெளிப்படுத்தினார்கள். அந்த நன்றியை
யும் அன்பையும் கடைசிவரையும் காண்பித்ததோ
இவர்கள் தன் தமையனாரின்பேரிலிருந்த பாசத்துக்கு
அறிகுறியாக அவர்கள் இருவருடைய அந்நியோந்
யமும் இரண்டுமாசத்திற்குள் முன்பின்னாகவேயிருந்தது
தகப்பனாருடைய இளமைப் பிராய சங்கதி என
னுக்கு அதிகமாய்த் தெரியாது. பொதுவாய் அவர்க
தன் மூத்த தமையனார் வீட்டிலிருந்து அவர்கள் மூ
மாய்ப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டு அந்தக் கால
த்தில் அவர்களிடத்தில் காணப்பட்ட புத்திக்கூர்மையை
யும் நற்குணங்களையும் கவனித்த ஐரோப்பிய மிஷனெரி
கள் அவர்களை சென்னபட்டணத்துக்கு அனுப்பிப் படி
பிக்கும்படி யோசித்தார்கள். அதைப்பற்றி அவர்கள்
தமையனாருடன் யோசிக்கவே, அவர்களுக்குத் தூ
மான இடத்துக்கு அனுப்பப் பிரியமில்லாதிருந்தும்
இவர்களுடைய நன்மையை விரும்பி அதற்குச் சம்
மதித்து 1846-௵த்தில் இவர்களும் இவர்களோடு கூ
க்கப்பட்ட இரண்டொரு வாலிபரும் பட்டணம் போ
பிஷப் காரிஸ் கிராமர் ஸ்கூலில் படித்துவந்தார்கள். அ
காலத்தில் சென்னபட்டணத்துக்கும் திருநெல்வே
லுக்கும் பிரயாணஞ்செய்வது வெகு கஷ்டமாயும் தற்கா
லத்திலிருப்பதற்கு மிக வித்தியாசமாயுமிருந்தது. ஏறக்
குறைய ஒரு மாதம் கால்நடையாய் மாட்டுவண்டியி
தான் பிரயாணம் செய்யவேண்டும். அப்போது புகை
வண்டி கிடையாது. திருநெல்வேலிக்கும் சென்னைக்கு
ஏறக்குறைய 500 மைல். ஆனால் இப்போதோ ஒரு இ
ராத்திரிக்குள் போய்ச் சேர்ந்துவிடும்படியான மா
றுதலாகிவிட்டது. அப்படியே 8,000 மைல் தூரமான இ
ங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் செல்லுகிற 3 மாதப் பி
ரயாணம் தற்காலத்தில் 3 வாரத்துக்குள் போய்ச்சேரு



படிக்கான மாறுதலாகிவிட்டது. ஏறக்குறைய சென்ற
50 வருஷத்துக்குள்ளாக உலகத்தில் அநேக ஆச்சரிய
மான காரியங்கள் நடந்து வந்திருக்கின்றனவென்று நாம்
பார்க்கிறோம். இப்படித் தண்ணீரிலும் தரையிலும் அதி
சயமான கிரியைகளைத் தங்களுடைய புத்தியினாலும்
யுக்தியினாலும் நடப்பித்து வருகிற எத்தனையோ மனுமக்
கள் தங்கள் ஆத்தும இரட்சிப்புக்கேற்ற நல்வழியைப்
பற்றி ஏனோதானோவென்றிருப்பது எவ்வளவு துக்க
மான காரியம்! ஆனாலும் ஒருவனும் தன் சகோதர
னுக்கு "நீ கர்த்தரை யறிந்துகொள் என்று போதிக்க
வேண்டுவதில்லை" என்று சொன்னதுபோல அப்படிப்
பட்ட காலத்தை தேவன் உலகத்தில் சீக்கிரம் வரப்
பண்ணுவாராக. தகப்பனார் சென்னபட்டணத்தில்
பிஷப் காரிஸ் கிராமர் ஸ்கூலில் ஏறக்குறைய 3 வரு
ஷம் படித்து அவர்களோடு சேர்ந்த மற்ற இருவ
ரும் இவர்களுமாகப் பரீட்சையில் தேற, அந்தக் காலம்
சர்ச்மிஷன் செக்ரெற்றேரியாக இருந்த கனம்: டாக்
லெண்ட் ஐயர் என் தகப்பனாரைமட்டும் பட்டணத்தில்
இருக்கும்படி ஒழுங்குசெய்து தான் சீமைக்குப் போக
வே, தகப்பனார் தன்னோடு படித்த மற்றவர்கள் அலுவல்
பார்க்கப்போகவும் தான் பின்னும் சிலகாலம் பட்டணத்
திலிருக்கவும் நேரிட்ட முகாந்தரம் இன்னதென்று அறி
யாமல் மனவருத்தமுடையவர்களாய் அந்தக் காலம் அவர்
களை மேல்பார்த்துக்கொண்டிருந்த கனம்: ஞானமுத்து
ஐயரிடம் இதன் காரணத்தைப்பற்றி விசாரித்தபோது,
அவர் உமக்கேற்ற தகுந்த இடம் குறிக்கப்படாதபடியால்
தற்சமயத்தில் உம்மை தெற்கே அனுப்பவில்லையென்று
சொன்னதின்பின்தான் அவர்கள் மனதுக்குச் சமா
தானமாயிருந்தது. அதன்பின் 1848-௵க் கடைசி
யில் இவர்கள் தன் சொந்த இடமாகிய திருநெல்
வேலிக்கு அனுப்பப்பட்டு அங்கே பாளையங்கோட்டை
யில் கனம்: கிளார்க் ஐயர் விசாரணைக்குள்ளிருந்த
கல்விச்சாலையில் சிலகாலம் உபாத்தியாயராய் நியமிக்கப்
பட்டார்கள். அப்போது அவர்களுக்குக் கொடுக்கப்

பட்ட சம்பளம் வெகு சொற்பம். ஏறக்குறைய 50 வருஷத்துக்குள் நம்முடைய தேசம் கல்வியிலும் நாகரீகத்திலும் மற்றும் தேர்ச்சியிலும் எவ்வளவு மாறுதலடைந்திருக்கிறதென்று இதனால் விளங்குகிறது. முதலில் 7 ரூபா அவர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது. 1850-ஆம் அவர்கள் கலியாணஞ் செய்தபின் 10 ரூபாய் கொடுத்தார்கள். அவர்களுக்கு விவாகமான 5 மாதங்களுக்குப்பின் அவர்களுக்கு ஒரு பெரிய ஆபத்து நேரிட்டது. அதாவது காய்ச்சலினால் ஏறக்குறைய 1½ மாதம் அதிகக் கஷ்டப்பட்டு இவர்கள் பிழைப்பார்களென்கிற நம்பிக்கையும் அற்றுப்போயிற்று. இப்படி இவர்கள் நம்பிக்கையற்றிருந்த சமயத்தில் இவர்களை விசாரித்துவந்த கிளார்க் ஐயர் வழக்கப்பிரகாரம் தன் காரியத்துக்காக வசந்தபுரம் என்ற இடத்துக்குப் போகவேண்டியதிருந்தபடியால் புறப்படுமுன் தகப்பனாரை வந்து பார்த்துப்போகவும் ஒருவேளை தான் இனிமேல் காணமாட்டோமென்ற சந்தேகமுமிருந்தபடியால் அனுப்பிக்கொள்ளவும் வந்து தகப்பனார் பக்கத்தில் நின்றுகொண்டு சற்றுநேரம் பொறுத்து அவர்களைப் பார்த்து நீர் ஆயத்தமாயிருக்கிறீரா? உமக்கு மரிக்கப் பயம் இல்லையா? என்று கேட்க, உடனே தகப்பனார் "எனக்குச் சற்றும் பயம் இல்லை; ஆயத்தமாயிருக்கிறேன். ஆனால் எனக்கு ஒரு கவலைமட்டும் இருக்கிறது. நான் விவாகம் செய்யாதிருந்தால் நன்மையாயிருந்திருக்கும்" என்னவே, உடனே பக்கத்தில் நின்ற இவருடைய தகப்பனாருடைய சகோதரர்களும் கண்ணீர்விட்டார்கள். அதன்பின் அவர்களுக்குத் தைரியமுண்டாகப் புத்திசொல்லி ஜெபம்பண்ணி ஆண்டவர் கையில் ஒப்புக்கொடுத்துப்போனார். அதன்பின் தேவ இரக்கத்தால் வியாதி படிப்படியாய்க் குணமாகவந்தது. அந்த வியாதியிலே தேவன் அவர்களை யழைத்துக்கொண்டால் பின்பு அவர்களால் குணப்பட்ட அனேக ஆத்துமாக்களைப் பரலோகத்திலே காணமாட்டார்களே. தேவன் தம்முடைய பிள்ளைகளை ஆச்சரியமான விதமாய் நடத்துகிறார். இந்த



வியாதி வந்து சுகப்பட்டபின் பெலனடைந்து அவர்கள் அலுவலுக்குப் போக ஏறக்குறைய 6 மாதம் சென்றது. உபாத்தியாயராயிருந்த அந்தக் காலத்திலுங்கூட அங்கிருந்த சில மிஷன் உத்தியோகஸ்தரோடும், சிநேகிதர்களோடும், பக்கத்திலுள்ள சில கிராமங்களுக்குப் போய் அடிக்கடி சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வருவது தகப்பனாருக்கு வழக்கமாயிருந்தது. அதோடு அந்தப் பள்ளிக்கூடத்தின் சகல பொறுப்பும் இவர்கள் மேலிருந்தது. இப்படி ஏறக்குறைய 5 வருஷம் அங்கிருந்து உபாத்திவேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள். 1854-ஆம் வருஷத்தில் வட திருநெல்வேலியில் கூடாரப் பிரசங்கவேலைக்கு கனம்: ராக்லெண்ட், பென், மெடோஸ் ஐயன்மார்கள் ஆயத்தப்பட்டு வேலை ஆரம்பமாகவே தெற்கேயிருந்து சில சுதேச வாலிபரோடு இவர்களையும் வரும்படி கனம்: ராக்லெண்ட் ஐயர் விரும்பிக் கேட்டுக்கொண்டார். அப்போது தகப்பனார் சமுசாரக்காரனாயிருந்தபடியால் அவர்களை யனுப்புகிறது சகோதரர்களுக்கும் இனத்தார்களுக்கும் அவ்வளவு பிரியமில்லை. தகப்பனாருக்கு இது ஒரு பெரிய சோதனையான காலமாயிருந்தது. ஏனென்றால் கூடாரப் பிரசங்கவேலையில் இருக்கிற கஷ்டமின்னதென்று அதைச் செய்கிறவர்களுக்குத்தான் தெரியும். இதனால் அவர்கள் மனதில் கலக்கம் அதிகமாயிருந்தபடியால் அவர்கள் கவலையை என் தாயார் கவனித்து அதின் காரணத்தை விசாரித்தபோது உடனே வெளியிடாமல் தாயாரின் மனதையறிந்து அதன்பின் சொல்லும்படியாய் எண்ணங்கொண்டு முதலில் ஒரு கேள்வி கேட்டார்கள். அதாவது: "நான் ஒரு காரியம் கேட்கிறேன். அதற்குச் சம்மதிப்பாயானால் காரியத்தைச் சொல்வேன்" என்க, தாயார் உடனே: தகப்பனாரின் குணத்தை யறிந்து நல்லது சம்மதிக்கிறேன் என்று சொல்லவும், அதன்பின் சங்கதியை வெளியிட்டார்கள். தாயார் அதைக் கேட்டவுடனே தடைசொல்லாமல் சந்தோஷமாய் சம்மதித்தபடியால் தகப்பனார் அந்த ஊழியஞ்செய்ய ஒப்புக்கொண்டார்கள். அந்தச் சமயத்தில்

சகோதரியின் தைரியமே தகப்பனாருக்கு அதிகத் தைரியத்தைக் கொடுத்தது. அதைப்பற்றி 1872-ல் தகப்பனார் அவர்களைப்பற்றி கி. ஏம். கால். வெக்கார்டில் எழுதின அவர்கள் ஜீவிய சரித்திரத்தில் வாசித்தால் தெரியும். அதாவது: "இந்த வேலைக்கு அநேகர் என்னைத் தடுக்கப் பிரயாசப்பட்டார்கள். ஆனால் என் சகோதரியோ இது தேவ அழைப்பு, இதை ஒருவரும் தடைசெய்யக்கூடாது, நான் உங்களோடு கூட இருந்து வேண்டிய ஒத்தாசை செய்வேன் என்று சொன்னாள். அப்படியே நாங்கள் 1854-ல் வட திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டபோது சிரிவில்லிபுத்தூருக்கும் சிவகாசிக்கும் இடையிலுள்ள காத்தியாபட்டி என்னப்பட்ட அஞ்ஞான கிராமத்தில்மட்டும் ஏறக்குறைய இரண்டு வருஷம் இருந்தோம். அந்தக் காலத்தில் என்னுடைய ஒரே குழந்தையையும் மனைவியையும் இந்தச் சகோதரியையும் அஞ்ஞானிகள் நடுவில் நான் தனிமையாய் வைத்துவிட்டு பிரசங்கவேலை நடத்தும்படி ஒரே மட்டாய் 6 வாரம் வெளி ஊர்களுக்குப் போய் பிரசங்கம் செய்துவிட்டு வீட்டில் வந்து மூன்றே மூன்று நாள் மட்டும் தங்கி பின்னும் ஒரே தொடர்ச்சியாய் 6 வாரம் போய் கிராமப் பிரசங்கவேலை நடத்துவது எங்கள் வழக்கமாயிருந்தது. அப்படிப்பட்ட சமயங்களில் என் சகோதரியின் ஆதரவு எங்களுக்கு இல்லாவிட்டால் அதிகக் கஷ்டப்பட்டிருப்போம்" என்று எழுதியிருந்தார்கள். ஆனால் அவர்களைச் சுற்றியிருந்த அஞ்ஞானிகள் எல்லாரும் திருடராயிருந்தும் இவர்கள் விஷயத்தில் அதிக அன்பு காட்டி இனஜனத்தாரைப்போல் நேசித்துவந்தார்கள். இவர்கள் இருந்த காத்தியாபட்டி என்ற ஊரிலும், பக்கத்து ஊரிலுமிருந்த ஜனங்கள் திருட்டுக்குப் பேர்போனவர்களாயிருந்தார்கள். ஒருவிசை தகப்பனார் இல்லாத சமயத்தில் இவர்கள் இருந்த ஊருக்கு அதிக சமீபத்திலிருந்த ஊரில் கொள்ளை நடந்தபோது பெண்கள் இருவர்மட்டும் தனிமையா



யிருந்தபடியால் அதிகமாய்க் கலங்கிக்கொண்டிருந்ததை அந்த ஜனங்கள் பார்த்து இவர்களிருந்த வீட்டைச் சுற்றிலும் வந்திருந்து காவல் காத்துக்கொண்டிருந்து நீங்கள் பயப்படவேண்டாம், எங்கள் உயிருக்கு ஒரு மோசம் வந்தால்தான் உங்களுக்கு மோசம் வரும், பயப்படாதேயுங்கள் என்று தைரியஞ் சொல்லிக்கொண்டிருந்தார்கள். தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்பட்டவர்களுக்குள்ளும் இவ்வளவு சுயவெறுப்பும் ஐக்யமும் காண்பது அபூர்வம். உன் வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் உன் சத்துருவும் உன்னோடு சிநேகமாவான் என்று சொல்லியிருக்கிறபடி அவருடைய ஊழியத்தை நடத்தப் போயிருந்த அவருடைய தாசனுடைய குடும்பத்துக்கு இவர்களைக் காவலாய் வைத்திருந்தார். உன்னை "என் கண்ணின் கருப்பு விழியைப்போல் காப்பேனென்றும்," "என் உள்ளங்கையில் உன்னை வரைந்திருக்கிறேனென்றும்" தமது பிள்ளைகளுக்குச் சொன்னவர் தமது திருவாக்கை மாற்றுவாரா? அவர்களை சரீர ஆத்தும சத்துராதிகளுக்கு விலக்கிக் காக்க வல்லவராயிருக்கிறார். தகப்பனார் கூடாரப் பிரசங்கம் செய்த காலங்களில் இவர்களும் இவர்களோடிருந்தவர்களும் அநேக கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். இவர்களோடு கூடாரப் பிரசங்கவேலை செய்த ஐரோப்பியரில் கனம்: ராக்லெண்ட், பெள், மெடோஸ் ஐயன்மார்களும், சுதேசிகளில் கனம்: சத்தியநாதன் ஐயரும், யோசேப்பு கொர்நேலியு ஐயரும் சேர்ந்து வேலைசெய்து வந்தார்கள். இவர்கள் ஆரம்பமுதல் ஜெபத்தின் ஆவியால் நிரப்பப்பட்டிருந்த கனம்: ராக்லெண்ட் ஐயரோடு சகவாசம் செய்ய நேரிட்டதே பின்னுக்கு இவர்களுக்கு ஆசீர்வாதமாகவிருந்தது. எந்தக் காரியத்தையும் ஜெபத்தில் பேசுகிறதுபோல சொல்வார்கள். கனம்: ராக்லெண்ட் ஐயருடைய விசுவாசமுள்ள ஜெபத்துக்கும், அதினால் அவர் அடைந்த ஜெயத்துக்கும் அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு. இவர்கள் பிரசங்கம் பண்ணிக்கொண்டு திரியும்போதே அடிக்கடி கிராமங்களிலுள்ள ஏழைக

ளான வியாதிக்காரர் வந்து இவர்களிடம் மருந்து கேட்டுச் சாப்பிடுவது வழக்கம். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் அவரிடம் மருந்து கேட்ட ஒரு வியாதிக்காரனுக்கு மருந்து கொடுக்கப்போன அவசரத்தில் தப்பிதமாய் விஷமான மருந்தைக் கொடுத்துவிட்டு சற்று நேரத்துக்கப்புறம் பார்த்து அது தப்பென்றறிந்து, என்ன செய்வதென்று அறியாமல் கலங்கி உடனே முழங்காலில் நின்று ஆண்டவரே! நான் தெரியாமல் கொடுத்துவிட்ட இந்த நஞ்சு மருந்து அந்த உயிருக்கு மோசத்தை உண்டாக்காமல் அவன் வியாதிக்கேற்ற ஔஷதமாயிருக்கும்படி அதை ஆசீர்வதிக்கவேண்டுமென்று போராட்டமாய் ஜெபம் செய்து முடித்தார். மருந்து சாப்பிட்டபின் அவன் மயக்கமாய் வந்து தனக்கு வியாதி சுகமாயிருப்பதாக ஐயரிடம் வந்து சொல்லவே, சந்தோஷத்தினால் உடனே ஆண்டவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினார். அவன் பிழைப்பான் என்கிற நம்பிக்கைகூட இல்லாமல் கவலையாயிருந்த அவருக்கு அவனை உயிருள்ளவனாகக் கண்டமாத்திரத்தில் அவர் விசுவாசம் எவ்வளவாய் ஸ்திரப்பட்டிருக்கும்? இவ்வித அநேக திருஷ்டாந்தங்களை இவர்களும் கூடயிருந்து கண்ணாரக் கண்டிருந்தபடியால் இவர்களுடைய விசுவாசமும் பலப்பட ஏதுகரமாயிருந்தது. தகப்பனார் தன்னுடைய ஜீவிகாலத்தில் தனக்குப் பிரயோசனமாக இவைகளை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ளுவதோடுகூட மற்றவர்களுக்கும் நன்மையுண்டாக அடிக்கடி சொல்லுவதுமுண்டு.

சகாம்: ராக்லெண்ட் ஐயர் தகப்பனாரை அதிகமாய் நேசித்துவந்தார். அதற்கு திருஷ்டாந்தமாக, ஐயரும் அவர்களோடு சமுசாரக்காரரல்லாத மற்றவர்களும் பிரசங்கவேலையாய்ப் போயிருந்தகாலத்தில் அவர்கள் சில இடங்களைக் குறித்துக்கொண்டு அங்கே கூடாரங்கள் அடித்துப் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வருவது வழக்கம். இந்த 5 பேரில் தகப்பனார்தான் சமுசாரக்காரராயிருந்தார்கள். தகப்பனார் பிரசங்கம் பண்ணிக்



கொண்டிருந்த இடங்களைச் சுற்றியும் விஷபேதி நடமாடினது. தகப்பனார் தன் உபயோகத்துக்கென்று கொண்டுபோயிருந்த மருந்தை வியாதிக்காரருக்குக் கொடுத்து அநேகர் சுகப்பட்டார்கள். கடைசியில் மருந்தெல்லாம் செலவாகிவிட்டது. அப்படி யிருக்கும்போது இது விஷயத்தைப்பற்றித் தகப்பனார் ராக்லெண்ட் ஐயருக்கு எங்களைச் சுற்றிலும் விஷபேதி அதிகமாய் நடக்கிறது. என் கையிலிருந்த மருந்தெல்லாம் செலவாகிவிட்டது. இம்மட்டும் ஆண்டவர் என்னைக் காத்துவந்திருக்கிறார். எனக்காக ஜெபம் பண்ணுங்கள் என்று எழுதியிருந்தார்கள். அந்தக் காகிதத்தை வாசித்தவுடனே தகப்பனாருக்கு எழுதியிருந்த பதில் என்னவென்றால்: பிரியமுள்ள வேதநாயகத்துக்கு, உம்முடைய காகிதத்தை வாசித்து அதிக துக்கப்பட்டேன்; உடனே நாங்கள் முழங்காலிலிருந்து ஆண்டவரை நோக்கி மன்றாடுகிறோம். எப்படியென்றால், "ஆண்டவரே நாங்கள் நாலு பேரில் ஒருவனை நீர் எடுத்துக்கொண்டாலும் வேதநாயகத்தைக் காப்பாற்றும்; அவர் சமுசாரக்காரன் என்று மன்றாடுகிறோம்" என்று பதில் அனுப்பினாராம். எவ்வளவு ஆச்சரியமான அன்பு இதில் விளங்குகின்றது! கர்த்தருடைய உத்தம பிள்ளைகள் எப்பொழுதும் தங்களை வெறுத்து மற்றவர்கள் நன்றாயிருக்க முயன்று அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைத் தங்களுடையதாகப் பாவித்துக்கொள்ளுவார்கள். இந்த விசேஷித்த ஆவியைக்கொண்டிருந்த உத்தம பக்தரின் நடுவில் அவர்கள் சகவாசம் செய்துவந்ததே, பின்னுக்கு இவர்களும் அப்படிப்பட்ட ஆவியையுடையவர்களாய் இருந்து அதன்படி நடந்துவர ஏதுவாயிருந்ததென்று சந்தேகமறச் சொல்லலாம். "நல்லோரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க நல்லோர் சொல் கேட்பதுவும் நன்றே; நல்லோர் குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோ டிணங்கி யிருப்பதுவும் நன்றே."

அவர்கள் கூடாரப் பிரசங்கம் செய்தபோது நடந்த விசேஷங்களில் அநேகம் நமக்குப் பிரயோசனத்தைக்

கொடுக்கத் தக்கவைகள். அதில் முக்கியமான விஷயத்தை எடுத்துக் காட்டுகிறேன். அவர்கள் வாகைக்குளத்திற்கு ஏறக்குறைய 10 மைலுக்கு அப்பாலிருந்த ஒரு கிராமத்தில் கூடாரம் அடித்துப் பிரசங்கித்துக் கொண்டிருந்த காலத்தில், ஒருநாள் அவர்கள் பிரசங்கத்தைக் கேட்கக் கூட்டமாய்க் கூடிவந்திருந்த ஜனங்களில் சற்று வயதுசென்ற ஒரு மனுஷன் இவர்கள் வார்த்தையை அதிக கவனமாயும் ஆவலாயும் கேட்கிறதைத் தகப்பனுர் கவனித்து அவனைப்பார்த்து, உமக்கு இரட்சிப்படைய மனமில்லையா, சுவாமியை யறிந்து அவரைத் தொழுதுகொள்ள வேண்டாமா என்று அவரைக் குறிப்பிட்டுக் கேட்டவுடன், அந்த மனுஷன் ஐயா நீங்கள் சொல்லுகிறதெல்லாம் சரிதான், உங்கள் மார்க்கமே சத்தியம், எனக்கும் வெகு பிரியந்தான்; ஆனால் இன்னும் இரண்டே இரண்டு வருஷம் பொறுத்துக் கொள்ளுங்கள். அதற்குள் என்னுடைய வீட்டுக்காரியத்தையும் பிள்ளைகளின் சம்பந்த காரியத்தையும் முடித்துவிட்டு எப்படியும் உங்கள் மார்க்கத்தாரோடே வந்துவிடுகிறேன் என்று சொன்னுர். அதற்குத் தகப்பனுர் அப்படிச் சொல்லாதேயும், இரண்டுவருஷம் என்று சொல்லுகிறீரே இரண்டு வருஷம் உலகத்தில் இருப்போமென்று என்ன நிச்சயம், இரண்டு நாளிருப்போமென்று கூட நிச்சயமில்லையே, அடுத்த நிமிஷம் நம்முடையதல்லவே என்று வற்புறுத்திச் சொன்னதற்கு, இல்லை ஐயா, இரண்டு வருஷந்தான், அதன் பின்பு எப்படியும் வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டு வீட்டுக்குப் போய்விட்டான். தகப்பனுர் அந்த ஊரில்தானிருந்தார்கள். சரியாய் இரண்டுநாளைக்குப்பின் ஒரு கிணற்றங்கரைச் சமீபமாய் ஜனங்கள் கூட்டமாய் நிற்கிறதைக் கண்டு அதென்னவென்று விசாரித்தபோது மேற்சொன்ன அந்த மனுஷனே தண்ணீர் சாப்பிடக் கிணற்றுக்குள் இறங்குகையில் தவறி விழுந்து இறந்துபோனுனென்று அறிந்து திடுக்கிட்டு இவர்கள் சொன்ன வார்த்தையையும் அவன் சொன்ன மறுமொழியையும் நினைத்து



மனுஷனுடைய ஜீவன் எவ்வளவு நிலையற்றதென்பதையும் இந்த நிமிஷமாத்திரம் தன்னுடையதென்பதையும், உலகம் எவ்வளவு மாறுத லுள்ளதென்பதையும் அதிகமாய் உணர்ந்து அவன் ஆத்தும இரட்சிப்படையாமல் மரித்ததைப்பற்றி அதிக விசனப்பட்டார்கள்.

இதை வாசிக்கிற சிநேகிதரே! இது நம்மெவ்வொருவருக்கும் எச்சரிக்கையைக் கொடுக்கத்தக்க முக்கியமான விஷயமாயிருக்கிறது. அநேகமாயிரம் ஆத்துமாக்கள் பேலிக்ஸைப்போல் இந்தவிதமாகவே மெதுவாய்ப் பார்த்துக்கொள்ளலாமென்ற தைரியங்கொண்டு தங்கள் விலையுயர்ந்த ஆத்துமாவைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். நம்முடைய கண்களுக்கு முன்பாகப் பாலகரும் இளைஞரும் வாலிபரும் முதியோரும் நினையாதநேரத்தில் நம்மைவிட்டுத் திடீரென்று மறைந்துபோகிறார்கள். இதைக் கவனித்து நாம் சீர்பட்டுக் குணப்படுகிறதற்கு ஒரு காலம் இருக்கிறதென்கிற வீண் தைரியத்தை விட்டுவிட்டு, நினையாத நேரத்தில் வந்து தட்டும் வீட்டெஜமானுக்குக் கதவைத் திறக்கிற உண்மையுள்ள வேலைக்காரனைப்போல் நம்முடைய பரம எஜமானுடைய வருகைக்கு நாம் எப்பொழுதும் ஆயத்தப்பட்டவர்களாய்க் காணப்படுவோமாக.

## 2. தகப்பனுர் செய்த தேவ ஊழியமும், சபைக்காகவும் மிஷனுக்காகவும் எடுத்துக்கொண்ட பிரயாசமும்.

தகப்பனுர் தேவ ஊழியம் ஆரம்பித்த காலமுதல் அவர்களுடைய அந்தியகாலமட்டுமுள்ள சரித்திரத்தை விபரமா யெழுதினுல் அதிக விரிவாகிறதோடுகூட வாசிக்கிறவர்களுக்கு அதிக எழுப்புதலாயும் பிரயோஜனமாயிருக்கும். அவர்கள் கூடாரப்பிரசங்கவேலையை மேற்சொல்லிய ஐரோப்பிய மிஷனெரிகளோடும் சுதேச சகோதரரோடும் ஏறக்குறைய 5 வருஷம் செய்து, அதற்

குப் பிற்பாடு தேவ ஊழியத்துக்கென்று சில இட ங்களைக் குறித்துக்கொண்டு சபைவேலை செய்யும்படி கேட் டார்கள். அப்படியே அவரவர் தங்களுக்குப் பிரியமான இடங்களைத் தெரிந்துகொள்ளவே, தகப்பனாரும் தான் சுற்றிவந்த காலங்களில் பார்த்த அநேக இடங்கள் சுகத் திற் கேற்றதாய்க் காணப்பட்டாலும் அவைகளையெல்லாந் தெரிந்துகொள்ளாமல் வாகைக்குளமென்னும் ஒரு சி றூரைத்தான் தனக்கேற்றதாகத் தெரிந்துகொண்டார்கள். அந்த ஊரையே கடைசிபரியந்தம் தனக்குச் சொந்த ஊராகவும் அந்த இடத்திலிருந்த ஜனங்களையே தன் சொந்த ஆடுகளும் ஆட்டுக்குட்டிகளுமாகவும் எண்ணி வந்தார்கள். ஜனங்கள் சில சமயங்களில் பணமில்லாக்குறித் துப் போதத்தக்கவிதமாய் நடந்துகொண்டபோதிலும் அவைகளையெல்லாம் சகித்துத் தன் சுகத்தையும் சுகத் தையும் பெரிதென்று பாராமல் ஆத்துமாக்கள் இரட்சிக் கப்படவேண்டுமென்ற கவலைகொண்டவர்களாயும் அநே கர் அந்த ஊரைவிட்டு தகப்பனார் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று பலவிதமாய்ச் சொல்லிக்கொடுத்தபோதி லும், அவர்கள் சம்மதியாமல் நான் இந்த ஏழை ஜனங்களி னடுவில் இவ்வளவு காலம் இருந்து உழைத்தேன். யோசேப் பின் எலும்பு கானானில் அடக்கம் பண்ணப்பட்டதுபோல் என்னுடைய எலும்பும் இந்தக் கிராமத்திலேயே வைக் கப்படவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் விருப்பத்தின்படியே ஏறக்குறைய முப்பது வருஷம் அவர்கள் நடுவிலுழைத்து அவர்களுக்குச் சாட்சியாக மரித்தோர் உயிர்த்தெழும்பும் காலம்வரை கேயே இளைப்பாறுகிறார்கள்.

தகப்பனார் தேவ ஊழியத்தைச் செய்யும்படியாய் தெரிந்துகொண்ட இடத்தைப் பார்த்தவர்கள் ஆச்சரியப் டக் கூடியதாயிருந்தது. கல்வியும் நாகரீகமுமற்ற ந்த ஜாதியார் என்று சொல்லப்பட்டவர்களிருந்த கைக்குளம் என்ற ஓர் சிற்றூரின் தெருவிலே கூட ர்குலத்தார் என்று சொல்லிக்கொள்ளுகிற பிராமணர் ள்ளாளர் முதலானவர்கள் போகமாட்டார்கள். அதி



சரீரப் போஷிப்புக்கடுத்த விஷயத்திலாவது சுகத்திற் கடுத்த எந்த வகையிலாவது உபயோகமற்ற ஊராகவே இருந்தது. அப்பேர்ப்பட்ட அந்த ஊரைப் பின்னால் நந்தவனமென்று அழைக்கப்படத் தக்கவிதமாய் தகப் பனார் முன்னுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். ஆனால் பிற்காலத்தில் தாழ்ந்த ஜாதியார்மட்டுமல்ல, பிராமணர் வெள்ளாளர் மறவர் செட்டிகள் முதலிய பல்ஜாதியாரும் அதில் குடியேறும்படியாகிவிட்டது. 1858-ல் தகப்ப னார் முதல்முதல் அங்கே போனார்கள். அங்கே போகும் பொழுது முதலில் ஐந்து வீட்டுக் கிறிஸ்தவர்களும் அவர் களுக்கு ஒரு உபதேசியாரும் அவர்களுக்குப் புல்லால் வேய்ந்த ஒரு சிறு கோவில்மட்டு மிருந்தது. அந்தக் கிறிஸ்தவர்களிலும் இரண்டொரு பேர்தான் சரியான கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். கனம் ராக்லெண்ட் ஐயர் முதலில் தகப்பனாருக்கு 25 ரூபாய் கொடுத்து வசிப்ப தற்கு ஒரு சிறு வீடுகட்டிக் கொடுக்கும்படி செய்தார். அதன்பின் படிப்படியாய் நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கி மிஷன் பங்களா ஒன்று அங்கே கட்டப்பட்டது. அப்பால் 1861-ல் பாளையங்கோட்டையிலுள்ள பெரிய ஆலயத்தின் மாதிரியின்படி ஒரு நேர்த்தியான கோபுர முள்ள ஆலயத்தைத் தகப்பனார் வாகைக்குளத்தில் கட்டி முடித்தார்கள். 1859-ல் டிசெம்பர் 18-ம் தேதியில் டீக்கன் பட்டமும், 1862-ல்த்தில் குருப்பட்டாபிஷே மும் பெற்று முதலாவது அந்தக்காலத்தில் கிரிவில் னாரிலிருந்த கனம் கிரே ஐயருக்கும், அதன்பின் ச ம் மடோஸ் ஐயருக்கும் உதவியாக வாகைக்குளத்தி லே இருந்து தங்கள் வேலையை உண்மையாய்ப் பார் கள். முதலில் 5 வீடு கிறிஸ்தவர்களாயிருந்த ஊரில், தகப்பனார் மரிக்கும் காலத்தில் ஏறக்கு 50 வீடு கிறிஸ்தவர்களிருந்தார்கள். துவக்கத்தில் அந்த ஒரு சிறு கிராமப் பள்ளிக்கூடமட்டும் இரு அதன்பின் பஞ்சகாலத்தில் ஏழைகளுக்கென்று பணம் அனுப்பப்பட்டபோது அநேக அநாத கள் சேர்க்கப்பட்டுப் படிப்பிக்கப்பட்டார்கள்

ஆண்களும் பெண்களுமாக ஏறக்குறைய 60 பிள்ளைகள் வரை சேர்ந்து கல்வி கற்றுவந்தார்கள். அவர்களுக்கென்று ஆண்பாடசாலை ஒன்று பெண்பாடசாலை ஒன்று கட்டப்பட்டன. இது மாத்திரமல்ல சாட்சியாபுரத்தில் இவர்களின் கையின்கீழ் வேறே இரண்டு போர்டிங் பள்ளிக்கூடங்களும் ஏறக்குறைய 52 கிராமப் பள்ளிக்கூடங்களும் இருந்தன. மிஷன் அலுவற்காரருக்காகச் சில வீடுகள் கட்டப்பட்டன. அப்புறம் பாசாங்குக் கூட்டத்திற்கும் வருஷாந்தரக் கூட்டத்திற்கும் அங்கே வருகிறவர்கள் தங்கும்படி ஒரு சத்திரமும் கட்டப்பட்டது. அதுவுமல்லாமல் அநாதப் பிள்ளைகள் பல தொழிலும் கற்றுப் பிழைத்துக்கொள்ளும்படியாக கைத்தொழில் சாலை ஒன்று ஏற்பட்டு அப்படியே நடந்துவந்தது. இவ்வளவு முக்கியமாயிருக்கப்பட்ட இவ்வூருக்குத் தபாலாபீஸ் இல்லாத குறைவை நிவிர்த்திக்கும்பொருட்டு ஒரு தபாலாபீஸ் ஸ்தாபிக்கவேண்டுமென்று பிரயாசமெடுத்து அக்காரியத்திலும் சித்திபெற்றார்கள். அந்த ஊருக்கு வந்துபோயிருக்கிற ஜனங்களுக்குத் தண்ணீர்க் கஷ்டம் இராதபடி ஒரு குளமும் வெட்டி முடித்தது. அவர்களிருந்த ஊருக்கும் ரெயில்வே ஸ்டேஷனுக்கும் 15 மைல் தூரம். பாதை காட்டுப்பாதையாயிருந்தபடியால் அதை ஒழுங்கு செய்யும்படியாக யோசித்து ...டியே சங்கர நாயினார் கோவிலிலிருந்து கோவில் ... ஸ்டேஷன் வரையும் ராஜபாதை போடும்படி கலெக் ...முதலானவர்களிடம் வேண்டிய ஏற்பாடுகள் செய்து ...ர் விரும்பத்தின்படியே ரஸ்தாவும் போட்டு ...தது. எப்பேர்ப்பட்ட ஜமீன்கள், தாசில்தார், ...ர்களானாலும் இவர்கள் பேசும் அருமையான ...தைகளுக்கு யாதொரு தடையும் சொல்லாமல் ...க்கொள்வார்கள். கடைசியாய் எட்டயபுரம் ...ர் முதலாய்த் தகப்பனார் போனவுடன் அவர்களும் ...லும் ஒருவர் வீட்டுக்கும் போகாதவர். தகப்ப... ...ன்று கண்டுபோனார். அவரைத் தகப் ...ண்ணியத்திற்கேற்றவிதமாய் பரி



யாகைசெய்து ஏற்றுக்கொண்டதோடு அவர் திரும்பிப் போகும்பொழுது அவர் கையில் பரம பொக்கிஷமாகிய ஒரு வேதாகமப் பக்கையும் கொடுத்தனுப்பினார்கள். அப்படிப்பட்டவர்களோடு இஷ்டமாயிருந்து அவர்களுடைய ஆத்தும காரியங்களுக்காகக் கவலைப்படுகிறதோடு சபைக்குப் பிரயோஜனமான காரியங்களுக்காகவும் வழி தேடிக்கொண்டிருப்பார்கள். இந்தவிதமாய் மிஷன்கோவிலுக்காக இரண்டு துண்டு நிலம் அவரால் மிஷனுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டன. தகப்பனாருடைய எண்ணமுஞ் சிந்தையும் எப்பொழுதும் சபையைப்பற்றியும் வேலையைப்பற்றியுமே இருந்தது. அவர்கள் வேலை பார்த்துவந்த கிராமங்களுக்கு ரஸ்தாப்பாதைகள் காண்பது அபூர்வம். இப்பேர்ப்பட்ட பாதைகளில் மழைகாலங்களில் பிரயாணஞ்செய்வது அதிகக் கஷ்டம். இப்படிப் பிரயாணஞ் செய்கதில் அநேகதடவை வண்டி சாய்ந்து கஷ்டப்பட்டதுண்டு. ஒருதடவை வண்டி சாய்ந்தபோது இது பதினேழாவது தடவையென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் தகப்பனாரின் காரை எலும்பு கொஞ்சம் சேதப்பட்டு அதினால் இரண்டுமாதம் அதிகக் கஷ்டப்பட்டார்கள். அப்படியிருந்தும் இதையெல்லாம் பெரிதாக எண்ணாமல் இரவையும் பகலையும் ஒன்றுபோல் நினைத்துப் பகலைவிட இரவில்தான் அதிகமாய்ப் பிரயாணஞ்செய்ய விரும்புவார்கள். தகப்பனார் மாதத்தில் இரண்டுவாரத்திற்கதிகமாய் கிராமத்திலிருப்பார்கள். வேலையினால் அவர்கள் மிக இளைப்பாயிருக்கிறதை வீட்டிலுள்ளவர்கள் கவனித்து அவர்கள் சுகத்தைக் கருதி ஏதாவது சொல்லுகிறபோது தகப்பனாருக்குச் சற்றுவது பிரியமாது. ஆண்டவருக்கு ஊழியஞ்செய்கிற விஷயத்தில் அப்படிச் சொல்லக்கூடாது. துருப்பிடிக்கிறதைப் பார்க்கிலும் தேய்கிறதே நலமென்பார்கள். வீட்டின் காரியங்கள் சுகவீனம் ஒன்றும் பாராமல் தன் வேலையையே பெரிதாக எண்ணி நடத்துவார்கள். வீட்டில் பிள்ளைகள் முதலானவர்களுக்கு அதிகச் சுகவீனமா

ஆண்களும் பெண்களுமாக ஏறக்குறைய 60 பிள்ளைகள் வரை சேர்ந்து கல்வி கற்றுவந்தார்கள். அவர்களுக் கென்று ஆண்பாடசாலை ஒன்று பெண்பாடசாலை ஒன்று கட்டப்பட்டன. இது மாத்திரமல்ல சாட்சியாபுரத்தில் இவர்கள் கையினின்றே வேறே இரண்டு போர்டிங் பள்ளிக் கூடங்களும் ஏறக்குறைய 52 கிராமப் பள்ளிக்கூடங் களும் இருந்தன. மிஷன் அலுவற்காரருக்காகச் சில வீடுகள் கட்டப்பட்டன. அப்புறம் பாளையங்கோட்டைக் கிற்கும் ஒருதாந்தாக் கூட்டத்திற்கும் அங்கே வருகிற வர்கள் தங்கும்படி ஒரு சத்திரமும் கட்டப்பட்டது. அதுவுமல்லாமல் அநாதப் பிள்ளைகள் பல தொழிலும் கற்றுப் பிழைத்துக்கொள்ளும்படியாக வைத்தொழிற் சாலை ஒன்று ஏற்பட்டு அப்படியே நடந்துவந்தது. இவ் வளவு முக்கியமாயிருக்கப்பட்ட இவ்வூருக்குத் தபா லாபீஸ் இல்லாத குறையை நிவிர்த்திக்கும்பொருட்டு ஒரு தபாலாபீஸ் ஸ்தாபிக்கவேண்டுமென்று பிரயாசப் பட்டு அக்காரியத்திலும் சித்திபெற்றார்கள். அந்த ஊருக்கு வந்துபோயிருக்கிற ஜனங்களுக்குத் தண்ணீர்க் கஷ்டம் இராதபடி ஒரு குளமும் வெட்டி முடித்தார். அவர்களிருந்த ஊருக்கும் ரெயில்வே ஸ்டேஷனுக்கும் 15 மைல் தூரம். பாதை காட்டுப்பாதையாயிருந்தபடி யால் அதை ஒழுங்கு செய்யும்படியாக போதித்து அப்படியே சங்கர நாயினார் கோவிலிலிருந்து கோயில் ஸ்டேஷன்வரையும் ராஜபாதை போகும்படி கலெக் டர் முதலானவர்களிடம் வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். [illegible] விருப்பத்தின்படியே ரஸ்தாவும் போட்டு [illegible] இப்பேர்ப்பட்ட ஜமீன்கள், தாசில்தார், [illegible]ர்களும் இவர்கள் பேசும் அருமையான வார்த்தைகளுக்கு யாதொரு தடையும் சொல்லாமல் ஒப்புக்கொள்வார்கள். மேட்டியாய் எட்டையபுரம் [illegible]ர் முதலாய்த் தகப்பனார் பேரிலுள்ள அன்பினாலும் [illegible] ஒருவர் வீட்டிற்கும் போகாதவரான தகப்ப னாரிடம் வந்து கண்டுபோனார். அவரைத் தவிர [illegible] தன்னிமித்தம் [illegible] பரி



[illegible]னைசெய்து ஏற்றுக்கொண்டதோடு அவர் திரும்பிப் போகும்பொழுது அவர் கையில் பாம போக்கிற் காகிய ஒரு வேதாகமப் பிரதியையும் கொடுத்தனுப்பினார் கள். அப்படிப்பட்டவர்களோடு இஷ்டமாயிருந்து அவர் களுடைய ஆத்தும காரியங்களுக்காகக் கவலைப்படுகிற தோடு சபைக்குப் பிரயோஜனமான காரியங்களுக்காக நல்ல வழி தேடிக்கொண்டிருப்பார்கள். இந்த விதமாய் [illegible]க்காக இரண்டு ஏர்கோடு நிலம் அவரால் சபையுக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டன. தகப்பனா ருடைய எண்ணமுஞ் சிந்தையும் எப்பொழுதும் சபை யைப்பற்றியும் வேலையைப்பற்றியுமே இருந்தது. அவர் கள் வேலைபார்த்துவந்த கிராமங்களுக்கு ரஸ்தாப்பாதை கள் சொல்லப்படும் அபூர்வம். இப்பேர்ப்பட்ட பாதைகளில் மழைகாலங்களில் பிரயாணஞ்செய்வது அதிகக் கஷ்டம். இப்படிப் பிரயாணஞ் செய்ததில் அநேகதடவை வண்டி சாய்ந்து கஷ்டப்பட்டதுண்டு. ஒருதடவை வண்டி சாய்ந்தபோது இது பதினேழாவது தடவையென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஒரு சமயத்தில் தகப்ப னாரின் ஒரு எலும்பு கொஞ்சம் சேதப்பட்டு அதினால் இரண்டுமாதம் அதிகக் கஷ்டப்பட்டார்கள். அப்படி யிருந்தும் இதையெல்லாம் பெரிதாக எண்ணாமல் இரவையும் பகலையும் ஒன்றுபோல் நினைத்துப் பகலைவிட இரவில்தான் அதிகமாய்ப் பிரயாணஞ்செய்ய விருப்பு வார்கள். தகப்பனார் மாதத்தில் இரண்டுவாரத்திற்கதிக மாய் கிராமத்திலிருப்பார்கள். வேலையினால் அவர்கள் அதிக இளைப்பாயிருக்கிறதை வீட்டிலுள்ளவர்கள் கவனித்து அவர்கள் சுகத்தைக் குறித்து ஏதாவது சொல்லுகிறபோது தகப்பனாருக்குச் சற்றுவதும் பிரிய மிராது. ஆண்டவருக்கு ஊழியஞ்செய்கிற விஷயத் தில் அப்படிச் சொல்லக்கூடாது. துருப்பிடிக்கிறதைப் பார்க்கிலும் தேய்கிறதே நலமென்பார்கள். வீட்டின் காரியங்கள் சுகவீனம் ஒன்றும் பாராமல் தன் வேலை யையே பெரிதாக எண்ணி நடத்திவருவார்கள். வீட்டில் பிள்ளைகள் முதலானவர்களுக்கு அதிகச் சுகவீனமா

யிருக்கும்போதுகூட இதைத் தடையாக எண்ணி நிறு
த்திவிடாமல் இதற்காக தேவனுடைய ஊழியத்திற்குத்
தடை யுண்டுபண்ணக்கூடாது. நாம் ஆண்டவருடைய
பணியைப் பார்த்தால் அவர் நம்முடைய காரியங்க
ளைப் பார்த்துக்கொள்வாரென்று சொல்லி யாரார் என்ன
தடை சொன்னபோதிலும் தன்னுடைய வேலையைச்
செய்து முடிப்பார்கள். ஒருதடவை அவர்கள் பெண்
மக்களில் ஒருவர் சுகவீனமாயிருக்கும்போது தகப்ப
னார் கிராமத்திற்குப் போக அவசியமாயிருக்கிறதை மகள்
அறிந்து சிலநாள் தாமதித்துப்போகும்படி அவர்களை
கேட்டபோதுங்கூட இந்த வார்த்தையையே சொல்லி
விட்டு அவர்கள் புறப்படுஞ் சமயத்தில் ஜெபம்பண்ணி
ஆண்டவருடைய கரத்தில் ஒப்புவித்துவிட்டுப் போனா
ர்கள். அப்படியே திரும்பி வந்தபோது சுகமான பெண்
சுகமாகி யிருந்ததைக் கண்டு ஆண்டவருக்கு ஸ்தோத்
திரஞ் செலுத்தினார்கள். தகப்பனாருடைய ஜெபத்தைப்
பிள்ளைகளாகிய நாங்கள் எப்பொழுதும் அதிக விசேஷ
மாக எண்ணிக்கொள்ளுகிறதுண்டு. வருத்தமான வியாதி
காலங்களிலும் அதை ஒரு ஆசீர்வாதமாக எண்ணிக்
கொண்டிருக்குங்காலத்தில் தகப்பனாருடைய ஜெபம் நமக்கு
இருக்கிறது. அவர்கள் எங்களுக்காகப் பண்ணுகிற
ஜெபத்தினால் சுகமாகுமென்ற விசேஷித்த நம்பிக்கை
எங்களுக்கு இருந்தது. இது என் அருமைத் தகப்பனா
ரைப்பற்றியும் நான் கொண்டிருந்த முக்கிய எண்
ணம். நான்மட்டுமல்ல, அவர்கள் ஜெபத்தின் பலனை
கண்ட அவர்களுடைய ஒரு சகோதரியின் மகள் இப்
போது சிலநாட்களுக்கு முன்கூடச் சொன்னார்கள்.
அதாவது, தென் திருநெல்வேலியில் ஒரு ஊரிலிருந்தபோ
தில் சில நாட்களினால் அவர்களுக்கு பணச்சம
தானமில்லாதபடியிட்டுத் திடீரென்று ஒருவிதப் புதிய
கலக்கம்போவோண்டாய் அங்கிருந்த ஐரோப்பிய மிஷ
னெரியும் பின்னும் அங்கிருந்த அவர்களுடைய சிநேகித
ர்களும் எவ்வளவோ பிரயாசப்பட்டும் சுகத்திற்கு வழி
யில்லை. பிற்பாடு அவர்களுக்குத் தகப்பனாருடைய



ஞாபகத்தில் வரவே, தன் காரியங்களெல்லாவற்றையும்
விபரித்து எழுதி நான் சாகத்தக்க நிலைமையிலிருக்கி
றேன், எனக்காக ஜெபம்பண்ணுங்கள் என்று எழுதி
யிருந்தார்களாம். ஒரு குறைய ஒருவாரத்திற்குள் தகப்
பனாரிடமிருந்து இவர்களுக்குப் பதில் வந்தது. அதில்
"என் அருமை பிள்ளாய்! உன் பரிதாபமான காகிதம்
வந்தது. உடனே இந்தக் காகிதத்தைச் சன்னிதானத்தில்
ஆண்டவருடைய பாதத்தில் வைத்து உனக்காக மன்று
டினேன். ஆண்டவர் உனக்குச் சுகம் கொடுப்பார்"
என்று எழுதியிருந்தார்கள். அப்படியே அந்தக் காகி
தம் இவர்கள் கையில் சேர்ந்த அன்றே சுகம் காணப்
பட்டதாக ஆச்சரியப்பட்டுத் [illegible] எனக்கு
எழுதியிருந்தார்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான
ஜெபம் மிகவும் பலனுள்ளதாயிருக்கிறதென்றபடி
அவர்கள் விசுவாசத்தோடு செய்யும் ஜெபத்தின் பலனை
நாங்கள் அநேக விஷயங்களில் அநுபோகத்தால் அறிந்
திருக்கிறோம். அவர்கள் ஜெபத்தைக் கையாடினவிதமு
ம் எங்கள் மனதில் கல்லில் எழுதின எழுத்தைப்
போல் நன்றாய்ப் பதிந்திருக்கிறது.

சபைக்கடுத்த விஷயத்தில் அவர்கள் பட்ட பிரயா
சத்தை அந்தக் காலத்தில் அவர்கள் இருந்த இடத்
திற்கு வந்துபோன ஐரோப்பிய மிஷனெரிகளும் சுதேசி
களும் அநேகமாய் இதைப்பற்றி நற்சாட்சி பகர்ந்திருக்
கிறார்கள். மனுஷர் புகழ்ச்சிக்காகவும் கடமைக்காகவும்
செய்யவில்லையென்று யாவருக்கும் தெரியும். சுதேச
சபையை ஸ்வதந்திரமாய் முன்னுக்குக் கொண்டுவரவே
ண்டுமென்றும் தூரதேசமான இங்கிலாந்திலுள்ளவர்களின்
உபகாரத்தை எதிர்பாராமல் சுயபரிபாலனமுண்டாக
என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாமென்றும் எண்ண
மும் கவலையும் அதிகமாயிருந்தபடியால், மிஷனுக்காக
சாத்தப் கிராமத்தில் சில நிலங்களை வாங்கி அதைப் பயிர்
செய்து அதின் வரும்படியைக்கொண்டு மிஷனுக்கு
வரும்படியுண்டாக்கும்படி அரும்பிரயாசை எடுத்தார்கள்.
அதற்கு ஏதுவாய் அவர்களிருந்த ஸ்டேஷனுக்கு ஒன்

ர்ரை மைலுக்கு அப்பால் ஒரு கிராமம் ச... கிடைத்தபடியால் அதை மிஷனுக்காக வாங்... தோட்டங்களும் வயல்களு முண்டாக்கி அதை... பிடிக்கும்படி சில ஜனங்களையும் குடியேற்றி, அ... "பென்னேயர் புரம்" என்று பெயரிட்டு, அந்த... டத்தில் பெங்களூர் முதலான இடங்களிலிருந்து... கிய கனிவர்க்கங்களாகிய ஓட்டுமா, சீமை அ... கொய்யா, முந்திரி, தென்னை, பனை முதலிய அநேக... கனிமரங்களை யுண்டாக்கி, அதை முக்கியப்படுத்தின... மல்லாமல் பின்னும் மிஷனுக்கு அதிக லாபமுண்டா... வேண்டுமென்ற ஆசையினால் அவுரித் தொட்டி யொன்... கட்டி அதிலும் லாபமெடுக்கப் பிரயாசப்பட்டார்க... இதற்காக அவர்கள் பட்ட பிரயாசம் இவ்வளவென்... நான் அறிந்தமட்டும் எழுத முடியாது. ஆனால் கடை... யாக அவர்கள் எடுத்த வேலையாகிய அந்த அவுரி... தொட்டியில் கண்டிராக்ட்டு எடுத்த இவர் நம்பிக்கை... மோசம் செய்துவிட்டபடியால் அவர்கள் அதிகஞ் ச... டப்பட நேரிட்டது. அதைவிட்டு மிஷனுக்கும் கொ... சப் பணம் நஷ்டமுண்டாகிவிட்டது. அவர்கள் நன்... மைக்காகச் செய்யப்போன காரியம் கடைசியில் அவ... களுக்குத் துன்பமாய் முடிந்தது. அதைவிட்டுத் தாம... கடைசிக்காலத்தில் அவர்களுக்கு அதிக மனவருத்தம... இருந்தது. அவர்கள் இன்னுஞ் சிலகாலம் உயிரோ... டிருந்திருப்பார்களானால் அந்த நஷ்டத்தைச் சரிப்படு... த்தியிருப்பார்கள். அது ஆண்டவருக்குச் சித்தமில்லை... இந்த வேலையினால் அவர்கள் செய்த தேவ ஊழிய... திற்கு இடையூறு நேரிட்டிருக்குமென்று அநேகருக்கு... எண்ணமிருக்கலாம். ஆனால் இதற்கும் அவர்களு... டைய வேலைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்... யம் இதனால் சபையிலுள்ள தேவ ஊழியம் குறைவு... படாமல் அதிகப்பட்டுக்கொண்டு வந்ததோடு சபையி... லுள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்குப் பிழைப்புக்கேற்ற ஒரு இடமாயிருந்ததென்றும் சந்தேகமறச் சொல்லலாம். பின்னும் பணங்களை நிலங்களில் போட்டிருனால் நஷ்ட...



மென்றும் அதைவிட வட்டிக்குவிட்டால் இவ்வளவு தொல்லையும் நஷ்டமும் இருந்திருக்கமாட்டாதென்ற எண்ணமு மிருந்திருக்கலாம். ஆனால் அந்தப் பக்கங்களில் எப்பேர்ப்பட்ட சமுசாரிகளும் பணக்காரரும் தங்கள் பணங்களை வட்டிக்கு விடுகிறதைவிட நிலங்களாயில் போடுகிறதினால்மட்டுமே அதிக லாபமடைவது வழக்கமாயிருந்தபடியால்தான் தகப்பனாரும் அந்த வழியில் பிரவேசிக்க நேரிட்டது. ஆனாலும் மனுஷருடைய பார்வைக்கு அவர்களுடைய நல்நோக்கமும் முயற்சியும் விபரீதமாய்க் காணப்பட்டபோதிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது அவர்கள் மாசற்ற பரிசுத்தராய் மகிமையோடு உயிர்த்தெழும்புவார்கள். அவர்கள் பட்ட பிரயாசத்திற்கு மகிமையும் கீர்த்தியும் இவ்வுலகத்தில் இல்லாவிட்டாலும் வானோரின் சேனையில் அவர்கள் மகிமை அலாம்பரமாய் வெளிப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை.

அந்தப் பென்னேயர் புரத்திற்கும் அவர்கள் இருந்த இடத்துக்கும் 1½ மைல் தூர முழுவதும் காட்டுப் பாதையுமாயிருந்தபடியால் அடிக்கடி அவர்களாவது அல்லது அங்கு வருகிற ஐரோப்பிய மிஷனெரிகளாவது போய்ப் பார்த்து வருவது கஷ்டமாயிருக்குமென்று யோசித்து, அங்குள்ள தாசில்தார் கலெக்டரிடம் பேசிக் கடைசியாய் சென்னை அத்தியக்ஷர் வரும் சமயத்தில் ஒரே நாளில் ரோட்டுப்போட்டு முடித்தார்கள். அவர்கள் மரித்த இரண்டு மாசத்துக்குமுன்தான் பெப்ரவரி மாசத்தில் கடைசியாய் அத்தியக்ஷர் அங்கு வந்து டெ திருநெல்வேலியில் சபையைப் பார்த்துவிட்டுப் போனார்கள். பிஷப் அங்கு வந்திருக்கும் சமயத்தில் அவர்களையும் பென்னேயர் புரம் கூட்டிக்கொண்டு போய்க் காண்பித்து வந்தபின் ஒரே நாளில் ரோட்டு போடச் செய்த ஏற்பாட்டைக் கவனித்து சந்தோஷத்தினால் தகப்பனாரைத் தட்டிக்கொடுத்து, நீர் ஒரு டெட்டி ஜமீன்தார் என்று சொன்னார். அப்போது அவர் வந்திருந்த சமயத்தில் சபையின் காரியங்களையும் அவர்களு

டைய வேலையையும் அவர்கள் கையின்கீழ் உள்ள குருமார் எஜென்றுகள் ஒன்றாக ஆலயத்துக்குப் போகும் அலங்காரத்தையும் கவனித்து ஆலயத்தை விட்டு வீட்டுக்கு வந்தபின் தகப்பனாரைக் கூப்பிட்டு அவர்களிடத்தில் நான் வந்த இரண்டுநாளும் என் இருதயம் சந்தோஷத்தால் நிறைந்திருக்கிறது. எத்தனையோ தேசங்களைச் சுற்றிப்பார்த்து வந்திருக்கிறேன்; ஆனால் இந்த தேசத்தைப்போல் சபையில் சமாதானமும் ஐக்கியமும் மற்ற இடங்களில் பார்த்ததில்லை. அதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சந்தோஷப் பூரிப்போடு சொன்னார். உடனே தகப்பனாரும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி, தான் அந்த மகிமையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்குத் திருஷ்டாந்தமாக அவர் புறப்பட்டுப்போன இரண்டொரு நாளைக்குப்பின் எனக்கெழுதின கடிதத்தில் பட்டணம் பிஷப் வந்து சபைகளிலுள்ள இடங்களையெல்லாம் பார்த்து அதிக சந்தோஷப்பட்டுக் கொண்டு போனார். ஆண்டவருக்கே எல்லா கனமும் மகிமையும் துதியும் உண்டாவதாக என்று எழுதினார்கள். அந்த மகிமையையும் சந்தோஷத்தையும் நாங்கள் இன்னும் சிலகாலம் அனுபவிக்க ஆண்டவருக்குச் சித்தமில்லை. தகப்பனார் வேலைவிஷயத்தில் தன் சுகவீனத்தைக்கூட ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்கள். நான் தகப்பனாருடைய வீட்டுக்குப் போயிருந்த ஒரு சமயத்தில் தகப்பனார் சிலநாள் சுகவீனமாயிருந்து பூரண சுகமாகுமுன்னதாக முன் சொன்ன பென்னையபுரத்தைப் பார்த்துவிட்டு வரும்படியாக ஊருக்குப் போவதுபோல் நடந்து போய்விட்டு வந்தார்கள். திரும்பி வந்தவுடனே அவர்களுக்கு மறுபடியும் சுகவீனம் தாக்கி அன்று அதிகச் சங்கடப்பட்டார்கள். அந்த நாள் அவர்களுக்குக் கடைசிநாளாயிருக்குமோ என்று அவர்களும் நாங்களும் நினைக்க நேரிட்டது. தேவ இரக்கத்தால் மறுநாள் சற்று சுகம் காணப்பட்டது. அன்று காலையில் தகப்பனார் எங்களிடம் நான் இன்று சூரியனுடைய வெளிச்சத்தைக் காண்பேனென்று நினைக்க



வில்லை என்றும் அந்த இரவில்தான் ஒரு சொற்பனம் கண்டு விழித்தவுடன் சுகமானதாகவும் சொன்னார்கள். அதாவது தான் அதிக சுகவீனமாயிருந்ததுபோலவும் கனம் ராக்லென்ட் ஐயர் தன் கட்டில் சமீபத்தில் வந்து இவர்களிடம் ஒன்றும் பேசாமல் முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணினபின் எழுந்திருந்து உமக்கு என்ன செய்கிறதென்க, எனக்குச் சுகமில்லை என்று தகப்பனார் சொல்லவும் உடனே அவர் குளிக்கிற அறைக்குப் போய் ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் கொண்டுவந்து குடிக்கச் சொன்னபோது தகப்பனார் ஐயா எனக்குத் தாகமில்லையே என்று சொல்லவும், அப்படியா நல்லதென்று போய்விட்டாராம். அவர் போனவுடன் திடீரென்று நித்திரையை விட்டு விழிக்கவும் இவர்களுக்குச் சுகம் காணப்பட்டது. அந்தத் தடவை ஆண்டவர் எங்களுக்கு இரங்கி அவர்களுக்குச் சுகம் கொடுத்தார். கிறிஸ்துவின் அன்பு அவர்களை நெருக்கி ஏவினபடியால் அவருடைய ஊழியம் அவர்களுக்கு வருத்தமாய்க் காணப்படவில்லை. பட்டணம் பிஷப் தானே ஒருதரம் அவர்களுக்கு எழுதின கடிதத்தில், உம்மைப்போல் உண்மையாய்க் கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிறவர்கள் இந்தியாவில் வெகு சொற்பம் என்று எழுதியிருக்கிறார். அவர்கள் மரித்தபின் அவர் என் தாயாருக்கு எழுதின துக்க கடிதத்தில் அவர் எவ்வளவாய் அவர்களைப்பற்றி நல்லெண்ணம் கொண்டிருந்தார் என்று வாசிக்கிறவர்கள் அறிந்துகொள்வார்கள். ஒரு நிமிஷமாவது வீட்டில் பேசாமல் இருக்கமாட்டார்கள். அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்து தன் அறையில் விளக்கு ஏற்றி வேதவாசிப்பு தனிஜெபம் முடித்து ஐந்துமணிக்குமேல் வீட்டிலுள்ள எல்லாரையும் எழுப்பிப் பிள்ளைகளைக்கொண்டு இன்னாம் வாசித்துப் பாட்டுப்பாடி காலைக் குடும்ப ஜெபம் செய்வார்கள். அந்த வேளையில் பாட்டுபாடி ஜெபம் பண்ணுகிறபோது தூக்கமெல்லாம் ஓடிப்போகிறதோடு மனதில் ஆனந்தப் பரவசம் உண்டாகிறதுண்டு. அதை நான் அனுபோகத்தில் உணர்ந்த காரியம். அதன்

பின் சமீப கிராமத்துக்குப் போகிறதாயிருந்தால் காலை போஜனம் சாப்பிடு முன்னதாகப் போய் அங்கு காண்கிற ஆண்களுக்கும் பெண்களுக்கும் போதித்துவிட்டு வருவார்கள். அப்பால் சுமார் 9 மணிக்கு மறுபடியும் வாசிப்பு எழுத்து வேலைகள் முதலானவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். மாலை மூன்றுமணிக்குமேல் மறுபடியும் தனி வாசிப்புக்கென்று தன் அறையை அடைத்துக்கொண்டபின் எப்பேர்ப்பட்டவர்கள் வந்து காத்திருந்தபோதிலும் தன் அலுவலை முடித்துத்தான் வெளியே வருவார்கள். தகப்பனாருடைய வீட்டில் நாங்கள் பின்னிட்ட நாட்கள் எங்கள் ஆத்துமாவுக்கு அதிக எழுப்புதலான நாட்களாயிருந்தன. இந்தவிஷயத்தில் தகப்பனாரிடத்தில், நாங்கள் கண்ட ஒழுங்கும் உறுதியும் கவனிக்கப்படத்தக்கதாகவேயிருந்தது. அவர்களுடைய ஜெபத்தில் அநேகம் நாங்களும் தற்காலம் வரைக்கும் சொல்லி ஜெபிக்கும்படியான அருமையான பொருட்க ளடங்கினவைகளாயிருக்கிறது. "அதாவது ஆண்டவரே! எங்கள் ஜெபங்களிலுங்கூட பாவம் கலந்திருக்கிறது. நாங்கள் செய்யும் நற்கிரியைகளிலும் பாவம் கலந்திருக்கிறது. நாங்கள் பாவத்திற்காக விடும் கண்ணீரும் இரட்சகருடைய இரத்தத்தால் கழுவப்பட வேண்டியதாயிருக்கிறதென்று ஜெபிப்பார்கள். அதோடு பிள்ளைகளுக்காக அவர்கள் செய்யும் ஜெபமும் அதிக உருக்கமுள்ளதாயிருக்கும். ஆண்டவரே! நாங்களும் எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும் தப்பாமல் உமது இராஜ்யம் சேரும்படியான பாக்கியத்தைக் கட்டளையிடுமென்று கண்ணீரோடு ஜெபிப்பார்கள். அப்படிப்பட்ட உருக்கமான ஜெபத்தை நிச்சயமாகவே ஆண்டவர் கேட்டு அவர்கள் அடைந்த அந்தப் பாக்கியத்தை அவர்கள் பிள்ளைகள் எல்லாரும் அடைய அவர் கிருபை செய்வாரென்று அவருக்குள் நம்பியிருக்கிறோம். தேவனுடைய திருப்பார்வையில் விலையுயர்ந்ததாயிருக்கிற சாந்தம் அமைதல் என்கிற ஆபரணத்தைத் தகப்பனார் பூரணமாய் அணிந்திருந்தார்கள் என்று சொல்லலாம்.



ஆண்கள் பெண்கள் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும் அவர்கள் அதிக மரியாதையாய் ஏற்றுக்கொள்ளுகிறதோடு அன்பான வார்த்தைகளால் அவர்களிடம் பேசியனுப்புவார்கள். ஆனால் தன் விஷயத்திலோ, மற்றவர்கள் தன்னை மதிப்பாய்க் கனப்படுத்தவோ தான் மற்றவர்களுக்கு முன்பாகக் கண்ணியமாய் எண்ணப்படவோ விரும்பமாட்டார்கள். அப்படிப்பட்ட விருப்பம் இருந்திருக்குமானால் அவர்களை அதிகமாய் நேசித்து வந்த ஜமீன்கள் உத்தியோகஸ்தர்களுக்கு முன்பாக அவர்கள் கண்ணியத்துக்கு ஏற்றவிதமான நன்மைகளைப் பெற்றிருப்பார்கள். திருஷ்டாந்தமாக ஒரு தடவை எட்டயாபுரம் ஜமீன்தாரிடம் ஒரு அவசரமான காரியத்தையிட்டுப் போய் அவரைக் கண்டு போன காரியத்தை முடித்துத் திரும்பி வரும்படி வண்டியில் ஏறின போது தன் வண்டியின்படி ஒடிந்துபோனதை ஜமீன்தார் கண்டு உடனே அந்த வண்டியைத் தன் லாயத்தில் விட்டு விட்டுத் தன் பெரிய வண்டியைத் தகப்பனாருக்குக் கொடுத்து அதில் ஏறிப்போகும்படியாய்ச் சொல்லவே தகப்பனாருக்குச் சற்று மனமில்லாமல் வேண்டாமென்று சொன்னபோதிலும் ஜமீன்தார் பிடிவாதமாய்ப் பக்கத்திலிருந்தவர்களுக்கு வண்டியைத் தயார்பண்ண உத்தரவு பண்ணினதைத் தகப்பனார் கவனித்து, மனதில் வருத்தமுண்டாகித் தயவுசெய்து நீங்கள் என்னைக் கட்டாயம் பண்ணவேண்டாம். என்னைப்போலொத்த பரதேசிக்கு இந்த வண்டியே போதுமானதென்று வருந்திக் கேட்டுக்கொண்டபின்பேரில் தகப்பனாரின் விருப்பத்திற்கிசைந்து அவர்கள் மனம்போல் சம்மதித்து அனுப்பிவிட்டார்.

யாருக்காவது அநியாயம் நேரிட்டால் தன் சொந்தப் பிள்ளைகளுக்கு அநியாயம் நேரிட்டதுபோலெண்ணி நியாயம் கிடைக்குமட்டும் தகப்பனார் அந்த விஷயத்தில் இளைப்பாறவேமாட்டார்கள். தன் சேகரத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு ஜமீனுக்கும் தன் சபையிலுள்ள கில குடிகளுக்கும் விரோதமாயிருந்த ஒருசமயத்தில் தற்செய

லாய்த் தகப்பனாரும் அந்த ஜமீன்தாரும் பாளை
கோட்டைக்குப் போகும் மார்க்கத்தில் கோவில்பட்டி
ஸ்டேஷனில் சந்திக்கும்படி நேரிட்டது. அந்த ஜமீன்தார்
தகப்பனாரைக் கண்டவுடன் மறைந்துகொள்ளப் பார்த்
தும் அது கூடாதகாரியமா யிருந்தபடியால் ஸ்டேஷனில்
இருவரும் சந்தித்துக்கொண்டார்கள். தகப்பனாரைக்
கண்டவுடன் அவர் வெட்கத்தினால் தலைகவிழ்ந்துகொண்
டார். இதற்குமுன் அவர் ஒருவிசை, தான் இனிமேல்
குடிகளுக்கு இப்படிப்பட்ட அநியாயம் செய்வதில்லை
யென்று வாக்குக் கொடுத்திருந்தார். அதை நிறைவேற்றாத
படியால் தான் அவர்கள் முகத்தில் விழிக்க வெட்கப்
பட்டு மறைந்துகொள்ளப் பிரயாசப்பட்டிருக்கிறார். தகப்
பனார் இதுதான் சமயமென்று அவருடைய தப்பிதத்தை
யெடுத்துக்காட்டி ஆதரவற்ற ஏழைக் குடிகளுக்கு அப்
படிப்பட்ட அநியாயம் செய்து அவர்களுடைய பொருளை
யபகரித்தால் அவருக்கு ஆசீர்வாதமா யிருக்கமாட்டா
தென்று அவருக்கு உணர்த்தி அவர் பதில்பேச இட
மில்லாமல் இவர்கள் பேசின சாமர்த்தியத்தைக் கூட்ட
நின்ற ஜனங்களெல்லாரும் கேட்டு ஆச்சரியப்பட்டார்
கள். கடைசியாய்த் தகப்பனாருடைய வார்த்தைக்
கிணங்கி இணக்கமான உத்தரவு சொன்னார். அவர்
இவ்வளவாய் இணங்கி நடந்துகொள்ளப் பண்ணின
தென்ன? அவர்களுடைய அதிகாரமா? அல்லது அவர்
களுடைய தன்மையை அவர் எதிர்நோக்கி யிருந்
தாரோ? அவர் ஒரு ஜமீன்தாரும் இவர்கள் ஒரு குருவு
மாக இருந்தாலும் ஆண்டவர் இஸ்ரவேலைப்பற்றிய
பயத்தை சிகேம் ஊராருக்குக் கொடுத்ததுபோல இவர்
களைப்பற்றிய பயத்தை யெல்லாருக்கும் கொடுத்திருந்
தார். இத்தன்மையாய்ச் சபைக்காகக் கவலையெடுத்து
நோய்கொண்டதும் நசல்கொண்டதுமான ஆடுகளைப்போ
லொத்த அந்த ஏழை ஜனங்களை அதற்கு ஏற்றவித
மாய்த் தாங்கித் தாங்கிச் சுமந்து இரட்சித்து தன் மரண
காலபரியந்தம் தன் முழுக்கவலையை யவர்கள்பேரில்
செலுத்தினார்கள். இந்த சபையையும் ஜனங்களை



விட்டு அவர்களுக்கு இருந்த இந்த அன்பினாலேயே
நான் முன் சொன்னதுபோல எந்த ஏழை ஜனங்களையும்
அற்பமாக எண்ணமாட்டார்கள். அதுதான் அவர்க
ளிடம் காணப்பட்ட விசேஷித்த லட்சணம். அப்ப
டிப்பட்ட குணம் எல்லாரிடத்திலும் இருக்கமாட்டாது.
அப்படிப்பட்டவர்களை அசட்டைபண்ணாமல் அவர்க
ளிடத்தில் அன்புபாராட்டி அவர்களுக்கு இரட்சகரைப்
பற்றிப் போதிப்பார்கள். அறிவீனருக்கு அவர்களுக்கு
ஏற்றவிதமாயும் இன்னும் அறிவாளிகளுக்கும் உயர்
குலத்தாருக்கும் அவர்களுக்கு இசைவாக இரட்சிப்
பின் சத்தியத்தை விளக்கிக்காட்டிப் புத்தி சொல்லு
கிறது அவர்களுக்கு வழக்கமாயிருந்தது. அவர்கள்
சபையைப் பார்க்கப்போன ஒரு சமயத்தில் அவர்க
ளோடு போயிருந்த புதிதாய்க் குணப்பட்ட ஒரு வாலி
பன் தான் அவர்களோடு பின்னிட்ட நாட்களில் தன்
கண்ணால் கண்டுணர்ந்த சங்கதியைப்பற்றிச் சில நாட்
களுக்குமுன் எங்களிடம் சொன்னதென்னவென்றால்,
நான் ஐயரவர்களோடு பின்னிட்ட நாட்கள் எனக்கு
அதிக எழுப்புதலும் அவர்கள் காரியங்களில் அனே
கம் எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதுமா
யிருந்தது. நாங்கள் கிராமங்கள்தோறுஞ் சுற்றிவிட்டு
வரும்போது அந்த ஊர் ஜனங்கள் வெகுதூரம் வண்
டியின் பின்னால் வந்து வழியனுப்பிக்கொண்டு போவார்
கள். அப்படியே ஒரு கிராமத்துக்கு நாங்கள் போய்த்
திரும்புங்கால் அந்த ஜனங்களும் சற்றுத்தூரம்வரை
வந்து வழியனுப்பிக்கொண்டு போனார்கள். அந்த ஜனங்
களைப் பார்த்தால் அதிக ஏழைகளும் பார்வைக்குக் கேவ
லமுமாய்க் காணப்பட்டார்கள். ஐயரவர்கள் அவர்களி
டம் பேசின அன்பான விதத்தையும் அருமையான
வார்த்தைகளையும் நான் பார்த்ததில் எனக்கு அதிக ஆச்
சரியமுண்டாயிற்று. அதினால் அந்த ஜனங்கள் போகு
மட்டும் நான் பொறுத்திருந்து அதன்பின் ஐயா தங்க
ளிடம் ஒரு காரியம் கேட்கவேணுமென்றிருக்கிறேன்.
இந்த ஜனங்கள் அதிக ஏழைகளும் பார்ப்பதற்கு முத

லாய்க் கேவலமாயிருந்தும் தாங்கள் அவர்களை மதித்து அவர்களிடம் அன்பு பாராட்டி வெகு அருமையாய்ப் பேசுகிறீர்களே. அதின் முகாந்தரம் என்ன என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்ன மறுமொழி என்னவென்றால், ஆம் அப்பா நான் அவர்களையா நேசிக்கிறேன், அவர்களுக்குள்ளிருக்கும் விலையுயர்ந்த ஆத்துமாவை நேசித்து இப்படி அவர்களோடு பேசுகிறேன் என்றார்களாம். இதுமட்டுமல்ல இன்னும் அநேக காரியங்களையும் சிலநாள் கூட இருந்து கவனித்துத் தகப்பனாரின்பேரிலுள்ள பிரியத்தினால் அவர்களுடைய மூக்குப் பட்டொன்று தனக்கு வேண்டுமென்று விரும்பி ஒன்றை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டார். இக்கிருபையாய்ப் பெரியோருக்கும் சிறியோருக்கும் எளியோருக்கும் வலியோருக்கும் அவரவருக்கேற்றவிதமான அன்பு பாராட்டி அப்போஸ்தலன் பாலகருக்குப் பாலையும் பெரியோருக்கு உணவையும் கொடுத்தவிதமாய் இரட்சகரைப்பற்றிய அறிவை யுணர்த்திவந்தார்கள். கிறிஸ்துவின் அன்பு யார் யாரை நெருக்கி ஏவுமோ அவர்கள் தேவனுக்கென்று தங்களைப் பிரதிஷ்டை செய்கிறதோடுகூட தங்களுடைய சரீர அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக அவருக்கென்று ஒப்புக்கொடுக்கிறார்கள். தங்கள் சுகத்தையும் கனத்தையும் மகிமையையும் விரும்பாமல் தங்களை மீட்ட இரட்சகருடைய திருவடிகளைப் பின்பற்றி அவருக்கொப்பாய் நடக்கப் பிரயாசப்படுவார்கள். கிறிஸ்துவின் ஆவியையுடையவர்கள் பவுல் அப்போஸ்தலன் சொன்னதுபோல அவருக்காகச் சகலத்தையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணித் தள்ளுகிறார்கள். தகப்பனார் வட திருநெல்வேலியில் கனம் மெடோஸ் ஐயரவர்களோடு ஏறக்குறைய 33 வருஷம் தேவ ஊழியம் பார்த்துவந்தகாலத்தில் கனம் ஜெ. கார்நேலியஸ் ஐயர் பனையடிப்பட்டியிலும், கனம் தானியேல் ஐயர் சிவிலிப்புத்தூரிலும் தகப்பனார் வாகைக்குளத்திலுமாக இருந்து வேலைபார்த்து வரும்போது மெடோஸ் ஐயரவர்கள் சாட்சியாபுரத்தில் இவர்களுக்கு மேல்பார்க்கிறவராகவுமிருந்து பேர்



சொன்ன நாலு சேகரங்களையும் நடத்திவந்தார்கள். 1877-ல் மெடோஸ் ஐயரவர்கள் சீமைக்குப் போனபின் தகப்பனாரே சுயாதீனமாய் வட திருநெல்வேலியிலுள்ள இரண்டு பாஸ்டரேற்றையும் அடுத்த நாலு சேகரத்தையும் நடத்திவரும்படி ஏற்பாடாயிற்று. இப்பொறுப்பான வேலை தகப்பனார் கையில் வந்தபிற்பாடு அவர்களுக்கு எப்போதும் அதிகக் கவலையும் தொல்லையும் இருந்தபோதிலும் ஆண்டவருடைய உதவியை முன்னிட்டு இதிலும் ஞானமாயும் விவேகமாயும் இந்தப் பெரிய வேலையை நடத்திவந்தார்கள். ஒரு குடும்பத்தில் தலைவராயிருக்கிறவர்களுக்கு அந்தக் குடும்பத்தைப் பற்றிய கவலையும் பொறுப்பும் அதிகப்படுகிறதுபோல் சபையின் தலைவர்களாக இருக்கிறவர்களுக்கும் சபையைப்பற்றிய கவலையும் பொறுப்பும் அவர்கள்மேல் விழுவதுண்டு. அவர்களை நடத்துகிற விஷயத்திலும் அவரவருக்கேற்றவிதமாய் நடந்துகொள்ளுகிறவிஷயத்திலும் விசேஷித்த ஞானம் வேண்டியதவசியம். அதினால்தான் ஆண்டவர் சாலொமோனுக்கு ஐசுவரியத்தையும் நீண்ட ஆயுசையும் கொடுத்ததோடுகூட முக்கியமாய் அந்த ஏராளமான ஜனங்களை நடத்தத்தக்க ஞானத்தை உனக்குத் தருவோமென்று வாக்களித்து அப்படியே விசேஷித்த ஞானத்தையும் அருளினார். இப்படியிருக்கும்போதே தகப்பனாரை இதைவிட இன்னொரு முக்கியமான தேவ ஊழியத்துக்கென்று நியமிக்கும்படி கமிற்றிமார் எண்ணங்கொண்டு தகப்பனாருடைய அபிப்பிராயத்தைக் கேட்டபோது, தான் அதற்குத் தகுந்தவன் அல்ல என்பதுபோல் தடுத்தும், சிலகாலம் பொறுத்து மறுபடியும் இந்த முக்கியமான தேவ ஊழியத்திற்கு இவர்கள் சம்மதிக்கும்படி சீமைக் கமிற்றியார் கேட்டுக்கொண்டதின்பேரில் "கர்த்தருக்குச் சித்தமானால் அந்த ஊழியத்திற்கு என்னை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று கடைசியாய்க் கொஞ்சம் சம்மதம்போல் காட்டினார்கள். ஆனால் அப்படிப்பட்ட உயர்ந்த நிலைமையில் பிரவேசிக்குமுன் அவருடைய இரகசியமான நடத்துதலின்படி ஆட்டுக்

குட்டியானவரின் சமூகத்தில் எப்போதும் அவரை மகிமையாய்த் துதிக்கும் அந்த விசேஷித்த ஊழியத்தில் பங்குபெற ஆண்டவர் அவர்களை யழைத்துக்கொள்ளச் சித்தமானார். என் வழிகள் உங்கள் வழிகளுமல்ல, உங்கள் நினைவுகள் என் நினைவுகளுமல்ல என்ற அவருடைய திருவாக்கின்படி அவருடைய இரகசியம் நமக்கு விளங்கமாட்டாது. அவர்களுடைய பொறுப்பான இந்த வேலையைப்பற்றிய கவலை அதிகம் இருந்ததோடு சபையின் ஊழியர்களுக்குத் தகுந்தபடி சவரட்சணை செய்வதற்கேற்ற பணம் போதாமலிருந்த கவலையும் அதிகம். அதைப்பற்றிச் சில வேளைகளில் அவர்களுடைய ரெக்கார்டுகளில் கவலையாய் எழுதியிருக்கிறார்கள். அந்தப் பக்கங்களில் உள்ள சபைகளுக்கும் பட்டணக்கரையிலுள்ள இவ்விரு சபைகளுக்கும் சிற்சில காரியங்களில் அதிக வித்தியாசமுண்டு. அந்த இடங்களிலுள்ளவர்களில் முக்கியமாய்ப் பயிரிடும் குடிகள்தான் அதிக மழைபெய்து அதினால் நஞ்சை புஞ்சைகள் விளைந்தால் மட்டும் ஜனங்களுக்கு க்ஷேமம். மற்றப்படி அவர்கள் ஜீவனஞ் சகிப்பது அதிகக் கஷ்டம். பட்டணக்கரையில் உள்ள ஜனங்களோ பலவிதமான ஜீவனஞ்செய்து பிழைத்துக்கொள்வார்கள். நாட்டுப்புறங்களில் உள்ளவர்களோ இந்தக் காடுகரைகளில் உள்ள வேலைகள்தவிர மற்ற வேலைகளில் பழகாதவர்களாயிருந்தார்கள். அதனால் மழைத்தாழ்ச்சியுள்ள காலங்களில் அவர்களுக்கு வேலை கிடையாமல் அவர்கள் சாப்பாட்டுக்குப் படுகிற கஷ்டமதிகம். அப்படிப்பட்ட சமயங்களில் கிறிஸ்தவர்களான ஏழைகளுடைய பரிதாபத்தைப் பார்த்து அவர்களுக்குப் பலவிதமான உபகாரஞ் செய்யும்படி அடிக்கடி நேரிடுகிறதுண்டு. அவர்களுடைய சபையாராவது மற்றவர்களாவது தங்கள் கஷ்டங்களைச் சொல்லும் பொழுது சகிக்கமாட்டாமல் இந்த விஷயங்களுக்காகத் தன் சொந்தப் பணத்திலும்கூட எவ்வளவோ நாங்களறிந்தமட்டும் செலவழித்திருக்கிறார்கள். அவர்களுடைய சரீரக் கஷ்டத்தை நிவிர்த்தி செய்யாவிட்டால்,



அவர்களின் அழியாத ஆத்துமாவுக்கு நஷ்டமுண்டாகுமே என்ற எண்ணத்தினால் தர்மம் செய்ய அவர்கள் முந்திக்கொண்டார்கள். ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடையவனாயிருந்து தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டும் தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்வதெப்படி? (1 யோவா. 3. 17.). சபையினால் இப்படிப்பட்ட பலவிதக் கவலைகள் அவர்களை நெருக்கும் பொழுது தேவ வசனத்திலுள்ள சில ஆறுதலான வசனங்களை அடிக்கடி சொல்லி ஜெபம் பண்ணுவார்கள். அதாவது, நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன், என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர், உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி முடிவிலே என்னை மகிமையிலே ஏற்றுக்கொள்வீர். பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு. பூலோகத்தில் உம்மைத்தவிர வேறே எனக்கு விருப்பமில்லை (சங். 73. 23-25.). அனேகர் தேவ ஊழியத்தை அதிக சுளுவான ஊழியமென்று நினைத்துச் சரியானபடி ஆயத்தப்படாமலும் தங்களை முற்றிலும் ஆண்டவருக்குப் பிரதிஷ்டை பண்ணாமலும் அதில் பிரவேசித்துக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சபையின் ஆத்தும வளர்ச்சியைக் கவனியாமல் அதற்கு இடறுதலாயிருக்கிறதோடு கஷ்டகாலங்களில் தங்களுடைய ஊழியத்தில் இளைத்தும் போகிறார்கள். ஆனால் சபையின் நன்மையை விரும்பி ஊழியஞ்செய்யும் உத்தம பக்தர்களோ, முதலாவது தங்களையே முழுவதுமாய் அவருக்குப் பிரதிஷ்டை செய்கிறதோடு, தங்களுடைய ஊழியத்தில் எவ்வளவு கஷ்டம், சங்கடம், இளக்கரிப்பும் வந்தபோதிலும் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஒரு சமுசாரி எவ்விதமாய் தன்னுடைய நஞ்சை, புஞ்சையிலிருக்கிற காடு, முரடு, குன்று வழியை எல்லாம் என்ன செலவு நஷ்டம் வந்தாலும் பெரிதாகப் பாராமல் அதைச் சீர்ப்படுத்தி சரியான சீருக்குக் கொண்டுவந்து அதின் பலனைக் கண்டு அநுபவிக்கப் பிரயாசப்படுகிறானோ, அவ்வித

மாய் இவர்களும் தாங்கள் முயற்சித்த காரியங்களில் என்ன மாறுதல் நேரிட்டாலும் அவைகளைச் சகித்துக் கொண்டு தங்கள் மீட்பரின் பரிசுத்த நாமம் மாட்சிமைப் பட அபேட்சைகொண்டு உழைக்கிறார்கள். கர்த்தரு டைய ஊழியக்காரர்களுக்கு இருக்கவேண்டிய ஊக்கம் விசுவாசம், விடாமுயற்சியாகிய இவை குறைவற இருந் தால் மட்டும் அவர்களுடைய வேலை ஆசீர்வதிக்கப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை. அவர்கள் தங்களுக்குப் புகழை நாட்டவேண்டுமென்றல்ல, ஆத்துமாக்களை ஆதா யப்படுத்தவேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு இந் முக்கியமான எண்ணத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக் வேண்டும். இப்படியாக அந்த இடத்தில் ஏறக்குறைய 30 வருஷமிருந்து அதிகப் பிரயாசப்பட்டு பாலை மாகக்கிடந்த அந்த ஊரைச் சோலைவனமாக்கி அ நல்ல கட்டடங்களைக் கட்டியும், தோட்டங்களை வை தும் முன்னுக்குக் கொண்டுவந்தபோதிலும் தனக்கு பிற்காலம் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து கர்த்தருடை ஊழியத்தைப் பார்க்கும்படி தன் பிள்ளைகளில் ஒன்று வது ஆயத்தப்படவில்லையே என்ற விசாரம் அவர்களுக்கு அதிகமாயிருந்தது. அதைத் தன் வாயினால் இரண் டொருவரிடம் சொல்லியு மிருந்திருக்கிறார்கள். அடிக் கடி நம்முடைய விருப்பம்போல சகலமும் நடந்தேறி வருகிறதில்லை. தகப்பனார் தன் வீடும், தோட்டமும் எப்போதும் சுசியாயும், பார்வைக்கு நேர்த்தியாயுமிருக் கும்படி விரும்புவார்கள். பக்திக்கடுத்தது சுத்தியென்று சொல்வார்கள். அதினால்தான் தன் சொந்தத்தில் அதிக செலவு செய்து அந்தத் தோட்டத்தை ஒரு நந்தவனம் போலாக்கியிருந்தார்கள். அந்தத் தோட்டத்தில் சகல வித கனிவர்க்கமுள்ள செடிகளும், மரங்களும் இருந் தன. மா, கொய்யா, சீத்தா, மாதளை, வாழை, தென்னை, முந்திரிகை, முதலியவைகளை வைத்து உண்டாக்கியிருந் தார்கள். திராட்சப்பழக் கனியை முதலில் அவர்கள் ருசிபார்க்கும்போது, பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்



கிற வேதவாக்கியத்தை நினைவுகூர்ந்தார்கள். இந்தப் பழவர்க்கங்கள் அந்தப் பக்கங்களில் செலவாகிவந்த தோடுகூட, கொடிக்கானல், சென்னை, திருநெல்வேலி முதலான இடங்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டன.

ஓர்தடவை கலெக்டர் லீவானர் வீட்டிற்கு வந்த சமயத்தில் தோட்டத்தின் சிறப்பைப் பார்த்து தகப்ப னாரிடத்தில் நீர் இவ்வளவு நேர்த்தியாய்த் தோட்டத் தைச் சிறப்பிக்க எங்கே கற்றுக்கொண்டீர் என்று கேட் டார். அந்த நாட்டுப்புறத்திலுள்ள இத்தோட்டம் சரீர விஷயத்திற்கு மட்டுமல்ல ஆத்துமவிஷயமாகவும் அதி கப் பிரயோஜனத்தையும் உணர்வையும் கொடுத்துக் கொண்டிருந்ததென்று அடிக்கடி அவர்கள் சொன்ன வார்த்தைகளினால் தெரியவந்தது. கடைசியில் அவர் கள் வியாதிப்படுக்கையி லிருக்கும்போதுகூட அவர்கள் படுக்கைக்கு முன்னதாக தோட்டத்தில் சில ரோஜா புஷ்பங்கள் விரிந்து பார்வைக்கு அழகாயிருக்கையில் வீட்டிலிருந்த சிறு பிள்ளைகளிலொன்று அவற்றைப் பறித்துவிட்டதைக் கண்டு துக்கப்பட்டு, பிள்ளைகளைக் கூப்பிட்டு "என் புஷ்பங்களைப் பறித்தீர்களென்று விசா ரித்து அந்தப் புஷ்பங்கள் மலர்ந்திருக்கிறபோதும், அவைகள் வாடி உதிருகிறபோதும் எனக்கு அதிக உணர்வையும், நல்ல படிப்பினைகளையும் கொடுத்துக் கொண்டிருக்கிறதே என்று சொன்னார்கள்.

## பிரசங்கம்.

தகப்பனார் சபையிலும் மிஷனிலும் செய்த ஊழியத் தில் அவர்களுக்குக் கிடைத்த பலனுக்குக் காரணம், முதலாவது, தேவாசீர்வாதமும், இரண்டாவது அவர் களுடைய அருட்பிரயாசமுமென்றே சொல்லலாம். அவர் களுடைய பிரசங்கம் கருகலான வார்த்தையும் உயர்ந்த நடையுமுள்ளதாயிராமல் எந்த அறிவினர்க்கும், சிறு

குழந்தைகளுக்குங்கூட விளங்கத்தக்கதாயும், கேட்க
இனிமையும், மனம் உருகத்தக்கதாயு மிருக்கும். அவர்
களுடைய பிரசங்கம் கேட்கிறவர்களுக்கு வருத்தத்
தையும் மனச்சலிப்பையும் கொடுக்கமாட்டாது. அதை
எப்போதாவது கேட்டவர்கட்குமட்டும் அதின் உண்மை
விளங்கும். அவர்கள் பிரசங்கிக்கும் விதமும் கவனி
க்கப்படத்தக்க விதமாயிருக்கும். நல்ல சிறு சரித்திர
ங்களைக்கொண்டும், பக்திக்கடுத்த திருஷ்டாந்தங்களை
க்கொண்டும், மனதில் பதியத்தக்கவிதமாய்ப் பேசுவார்
கள். அதை அடிக்கடி கேட்டுவந்த ஒரு ஐரோப்பி
யமாசானி ஒருதடவை, வேதநாயகம் ஐயருடைய பிர
சங்கத்தைக் கேட்கிறது எனக்கு அதிகச் சந்தோஷமாயும்
ஆசையாயுமிருக்கிறது என்று சொன்னார்கள். பின்னும்
ஏறக்குறைய 20 வருஷங்களுக்குமுன், சென்னபட்ட
ணத்தில் ஓர்தடவை அவர்களுடைய பிரசங்கத்தைக்
கேட்ட ஓர் சகோதரி, சிலநாட்களுக்கு முன் தகப்பனு
ருடைய பேச்சவந்த ஓர் சபையத்தில் அவர்களுடைய
பிரசங்கம் இப்போதும் இன்று செய்ததுபோல் தெளி
வாய் என் ஞாபகத்தில் வருகிறது என்றார்கள். தகப்ப
னார் தன் சபையிலுள்ள ஜனங்களுக்கு இவ்விதமான
பிரசங்கம் செய்கிறது மாத்திரமல்ல பிரசங்கம் செய்ய
வருகிற மற்றவர்களிடத்திலும் இந்த ஜனங்களுக்குக்
கல்வி சாமர்த்தியமாயல்ல, குழந்தைகளுக்கு செய்வது
போல இலேசான நடையில் பிரசங்கம் செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்வார்கள். அவர்கள் ஆலயத்தில்
பண்ணுகிற பிரசங்கமட்டுமல்ல தான் போய்ச் சந்திக்
கும் கிராமங்களிலுள்ள ஏழைஜனங்களிடத்திலும், அஞ்ஞா
னிகளிடத்திலும், ஐயர்களிடத்திலும் தேவனைப்பற்றி
யும், இரட்சிப்பை யடையவேண்டிய வழியைப்பற்றி
யும் அவர்கள் பேசும்விதம் ஆச்சரியமாயிருக்கும். அந்தக்
காலத்தில் அவர்களோடு சபையைப்போய் பார்த்துவந்த
ஒரு ஐரோப்பிய மிஷனெரி ஜனங்களுக்குப் போதிக்கிற
விஷயத்தில் அவர்களிடம் காணப்பட்ட விசேஷித்த
வசத்தைக் கவனித்துப் புகழ்ந்து பேசியிருக்கிறார்.



வடதேசங்களிலுள்ள ஏழை ஜனங்கள் படியாதவர்
களாயிருந்தாலும் அவர்களுக்குள் சற்று நாகரீகமுண்டு.
ஆனால் தகப்பனார் தெரிந்துகொண்ட இடத்திலுள்ள
ஜனங்களோ அதிக ஆஸ்திக்காரராயும், உயர்குலத்தா
ருமா யிருந்தபோதிலும் அவர்களுக்குள் நாகரீகம் காண்
பதரிது. அதிலும் கூலிவேலை செய்கிற ஏழை ஜனங்
களிடத்திலோ அதிகக் குறைவைக் காணலாம். இப்ப
டிப்பட்டவர்களிடத்திலே சட்சகளைப்பற்றிப் போதிப்
பதற்காக சாதாரணப் பேச்சுகளைக்கொண்டு துவக்கி
அதின் மூலமாய் வேத உபமானங்களைக்கொண்டும்,
சரித்திரங்களைக்கொண்டும் அவர்கள் விளங்கிக்கொள்
ளத் தக்கவிதமாய் வேத அறிவை அவர்களுக்குப் போ
தித்துவந்தார்கள். இந்தவிதமான இரையைப்போட்டு
அநேக மீன்களைத் திருச்சபையாகிய வலையில் இழுத்துக்
கொண்டார்கள். இரட்சகர் தமது சீஷருக்கு உபமா
னங்களாலும் அடையாளங்களாலும் விளக்கிக் காட்டிய
விதமாய் இவர்களும் அவருடைய அடியைப் பின்
பற்றிவந்தார்கள். நம்முடைய அருமையரட்சகர் இந்த
உலகத்திலிருந்தகாலத்தில் நன்மை செய்கிறவராய் சுற்றித்
திரிந்தார். அவருடைய போதனைகளைவிட அவருடைய
நடக்கை செய்கைகள் விசேஷித்தவைகளா யிருந்தபடி
யால் அந்தக் காட்சிகளைப் பார்க்கும்படியாக ஆயிரக்
கணக்கான ஜனங்கள் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்து
கொண்டிருந்தார்கள். அந்தக் காலங்களில் அவர் யார்
யாருக்காக பரிதாபப்பட்டு மனதுருகிக் கண்ணீர் விட்டா
ரோ, அவரவர்களுக்கெல்லாம் உடனுக்குடனே அதற்கு
வேண்டிய நிவிர்த்தியையும் கட்டளையிட்டார். ஆண்
டவர் இந்த உலகத்திலிருந்த காலத்தில் செய்த அற்புத
அதிசயங்களைப் பார்க்கவும் அவர் போதனைகளைக் கேட்
கவும் கூடிவந்திருந்த திரளான ஜனங்கள் மூன்றுநாளாய்
சாப்பிடாமலிருந்ததை யறிந்து இவர்களுக்காகப் பரித
பிக்கிறேன் என்று சொன்னது மாத்திரமல்ல, நாலாயிரம்
பேருக்கும் போஜனத்தை அளித்து, அவர்களைத் திருப்தி
யாக்கியும் அனுப்பினார் (மத். 16, 32.). பின்னும் நாலி

ஊர் விதவையின் ஒரே மகன் இறந்து அவனைப் பாடையில் கொண்டுபோனபோது அவளுடைய பரிதாபத்தைப் பார்த்து மனதுருகி பாடையை நிறுத்தச் சொல்லி அவனை உயிரோடே எழுப்பினார் என்று வாசிக்கிறோம் (லூக். 7. 13.). அப்படியே லாசருவின் சகோதரிகளின் கண்ணீரையும் பார்த்து இவரும் கண்ணீர்விட்டு அவனையும் உயிரோடே எழுப்பினார் என்று, யோவான், 11-ம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறது. இந்தவிதமாய் அவருடைய போதனையை சாதனையினால் உறுதிப்படுத்தினார். கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். (1 பேது. 2. 21.)

அப்படியே அவருடைய பரிசுத்த மாதிரியைப் பின்பற்றிவரும் அவருடைய உத்தம தாசர்கள் இக்காலத்திலுங்கூடத் தங்களுடைய போதகத்தின்படி தாங்களுடைய நடக்கையையும் காண்பிக்கிறார்கள். இந்த விஷயத்தில் தகப்பனாரும் தான் அந்த இடங்களில் போதித்துவந்த சத்தியத்திற்கேற்றவிதமாய் நடந்துவந்தாரென்றும், அதின் மூலமாய் ஒரு ஆத்துமா குணப்பட ஏதுவாயிருந்ததென்றும், அவர்கள் கூடாரப் பிரசங்கம் செய்துவந்தகாலத்தில் நடந்த ஒரு சரித்திரத்தினால் அறிந்துகொள்ளலாம். கனம். ராக்லெண்ட், பென், மெடோஸ் ஐயன்மாரோடு ஊர் ஊராய் பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்தபோது, செட்டி ஜாதியில் ஒரு மனுஷன் மார்க்கத்துக்கு வர ஆசைப்பட்டு மேற்சொன்ன பாதிரிமார்களிடம் போய் தன் மனவிருப்பத்தைச் சொன்னான். தகப்பனாருடைய போதகத்தையும் அவன் நாளடைவில் கவனித்துவந்தபடியால் அவர்கள் பிரசங்கத்தை மட்டுமல்ல நடக்கையையுங் கூட கவனிக்கவேண்டுமென்கிற நோக்கமுடையவாய், ஒருநாள் தகப்பனாரிடம் வந்து நான் உங்களோடு ஒரு மாசம் பின்னிட ஆசையாயிருக்கிறேனென்க, அவர்கள் உடனே சம்மதித்தபடியால் ஒரு மாசம் அவன்



அவர்களுடன் கூடவிருந்து அவர்களின் ஜெபதபம், பேச்சு, பிரசங்கம், நடக்கைகள் எல்லாவற்றையும் நன்றாய்க் கவனித்து அவனுடைய விசுவாசம் உறுதிப்பட்டபடியால் உடனே பாதிரிமார்களிடம் வந்து எனக்கு இப்போது கிறிஸ்துமார்க்கத்தின் சாரமும் அதின் அருமையும் தெரிகிறது. என்னைப்போலொத்த சுதேசியாயிருக்கிற பிரசங்கத்தைப்போல் அவர்கள் நடக்கையுமிருக்குமா என்று சோதித்துப்பார்த்ததில் அவருடைய வார்த்தையைப் போலவே இந்த குருவானவரின் செய்கையுமிருந்தது; ஆகையால் எனக்கு இப்போது ஞானஸ்நானம் கொடுங்களென்று கேட்டு அப்படியே பெற்று நாளதுவரையும் உண்மையுள்ள கிறிஸ்தவனாயிருக்கிறான். தகப்பனார் மரிக்குமட்டும் அவர் எங்கள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் தகப்பனாருக்கு அவர்மேலுள்ள பிரியத்தினால் அவரை சபையிலுள்ள ஒருவராக எண்ணாமல் ஒரு இனத்தானைப்போல் அவரை ஏற்றுக்கொள்வார்கள். "சொல்லுதல் யார்க்கு மெளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்றபடி நாம் லேசாக ஒரு காரியத்தை மற்றவர்கள் செய்யும்படி சொல்லிவிடலாம். ஆனால் அதன்படி நடந்து காட்டுவதே முக்கியம். தகப்பனார் செய்த பிரசங்கங்களில் சிலவற்றை இதோடு அச்சிட்டு பிரசித்தம் பண்ணுவது வாசிப்பவர்களுக்கு எழுப்புதலாயிருக்குமென்ற நோக்கமாய் இரண்டொரு முக்கியமான பிரசங்கங்களை இங்கே எடுத்துக் காட்டுகிறேன். 1869-ம் வருஷத்தில் பாளையங்கோட்டையில் குருப்பட்டாபிஷேகம் நடந்தபோது தகப்பனார் செய்த முக்கியமான ஒரு பிரசங்கம் சென்னை அத்தியட்சரவர்களின் கேட்டுக்கொள்ளுதலின்பேரில் அச்சிடப்பட்டிருக்கிறது. அது அச்சிடப்பட்டிருந்தபோதிலும் அந்தப் பிரசங்கம் தவறிவிடாதபடி அதையும் இதோடு சேர்த்து அச்சிட்டிருக்கிறது. அதோடு சேர்த்திருக்கிற 3-வது பிரசங்கமும் இன்னொரு சமையத்தில் அந்த ஆலயத்திலேயே ஒரு முக்கியமான விஷயத்தின்பேரில் செய்து சேர்க்கையாய் செய்யப்பட்டபடியால் அதுவும் இதோடு

சேர்க்கப்பட்டிருக்கிறது. இதைக் கவனித்து வாசிப்போருக்கு இந்தப் பிரசங்கம் எவ்வளவு தெளிவாயும் சாரமுள்ளதாயுமிருக்கிறதென்பது லேசில் தெரியவரும்.

---

## II. கொரிந்தியர், 5. 20.

“நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்களென்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.”

பாவி யீடேற்றமடைந்து பரமகதி சேரவேணுமென்பது திரியேக தேவனுடைய தீர்மானம். இதினால் விளங்கிய அவரினது அன்பு, அவருளிய வேதம் முழுவதிலும் மங்கா வெளிச்சம்போல பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் அந்த அன்பினால் ஏவப்பட்டு குமாரனாகிய தேவனைத் தம்முடைய சொந்தப் பிள்ளையென்றும் பாராமல் தத்தம்பண்ணினார். குமாரனும் தமது கனத்தையும் மகத்தையும் பாராமல் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்துவிட்டார். மகத்தான விண்ணுலகை விட்டு மண்ணுலகுக்கு வந்தார். மனுஷனானார். மனுஷன்பேரில் போடப்பட்ட சாபத்தைத் தந்தலைமேல் போட்டுக்கொண்டார். சபிக்கப்பட்ட மரத்தில் தொங்கி, உயிரைவிட்டு நரகத்தின் கதவை யடைத்து, மோட்சவழியைத் திறந்து “நானே வழியுஞ் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்” என்று விளம்பினார்.

“புதிதும் ஜீவனுமான இந்த மார்க்கத்தை” யாவரும் அறிந்து அதின் வழியாய் மோக்ஷகதி சேர தேவபணிவிடையை ஸ்தாபித்தார்.

முதலாவது அத்தியக்ஷரும், முதலாவது பட்டம் கட்டினவரும், முதலாவது பட்டப் பிரசங்கம் பண்ணினவரும் இவரே. அன்றுமுதல் இன்றுவரை தேவ பணிவிடைக்காரர் தொன்றுதொட்டு தேவ நியமிப்பின்படி ஏற்பட்டுவருகிறார்கள். அந்த விஷயமாகவே இன்று நாம் ஒன்றாகக்கூடி வந்திருக்கிறோம். அந்தப் பணிவிடைக்கென்றே இந்தச் சகோதரரும் அபிஷேகம் பெறவந்தி



ருக்கிறார்கள். இந்தச் சமயத்திற்கென்று தெரிந்தெடுத்திருக்கும் இந்த வசனத்தை மூன்று பங்காகப் பகுத்துப் பேசக்கடவோம்.

I. தேவ ஊழியக்காரருக்குக் கொடுத்திருக்கும் பேர்.
II. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தொழில்.
III. அவர்கள் அதை நிறைவேற்றும் முறை.

### I. ஸ்தானாபதிகளென்று அழைக்கப்படுகிறார்கள்.

இந்த ஊழியத்தின் சிறப்பையும், மகத்துவத்தையும், அதனால் விளையும் அளவற்ற ஐசுவரியத்தையும் தெளிவிக்கும்பொருட்டு அவர்கள் இந்தப் பேரும் இதைப் போலொத்த சிறந்த நாமதேயங்களாகிய, அப்போஸ்தலர், மேய்ப்பர், சுவிசேஷகர், சாமக்காரர், தூதர் என்னப்பட்ட பேர்களால் அழைக்கப்படுகிறார்கள். இந்தக் கனமான ஊழியத்திற்கு நிகரான ஊழியம் உலகிலெங்குமில்லை. இவர்களால் விளையும் நன்மைக்கும் மட்டுமில்லை, லக்குமில்லை. இயேசுநாதரால் ஏற்படுத்தப்பட்ட அந்தப் பன்னிரண்டு செம்படவர்கள் உலகமெங்கும் அறியப்பட்டிருப்பதுபோல எந்தத் தளகர்த்தர்களும், எந்த வித்துவான்களும், எந்த சக்கிரவர்த்திகளும் அறியப்படவுமில்லை. நேசிக்கப்படவுமில்லை. உலகில் கோடிக்கணக்காயுள்ளவர்கள் இவர்கள் நாமத்தை அன்பாய் நினைத்து, ஆவலாய் அங்கிகரித்து, அவர்கள் உபதேசங்களைப் பற்றிக்கொண்டு, ஆத்மலாபத்தை யடைந்திருக்கிறார்கள். ஆத்மலாபத்தை வருவிக்கிறவர்களே உபகாரிகளிலும் உபகாரிகள். “நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்.”

பிரான்சு சக்கிரவர்த்தியாயிருந்த நெப்போலியன் போனபார்த்து ஜெயிக்கப்பட்டுத் தீவாந்தர மேற்றப்பட்டிருந்தகாலத்தில் தன் அந்தியகாலஞ் சமீபித்தபோது தன்னைச் சூழ்ந்திருந்த பிரபுக்கள், பெரியோர்கள் முதலானவர்களைப் பார்த்து அலெக்சந்தர் ஷார்லமேன் நெப்போலியன் முதலான யுத்தவீரர் சேனைகளைச் சேர்த்து யுத்தங்களை நடப்பித்து உலகத்தைக் கலங்கப்பண்ணித்

தங்கள் பேர்களை நாட்டப்பார்த்தார்கள். இப்போது அவர்கள் பேரெங்கே? ஊரெங்கே? அவர்கள் சேனைத் தளமெங்கே? சிறப்பெங்கே? எல்லா மொழிந்தது.

இயேசுநாதரென்ற ஒருவரிருந்தார். அவர் ஒரு சிற்றூரிலே பிறந்து ஒரு சிற்றூரிலே வளர்ந்து பன்னிரண்டு செம்படவர்களைச் சீஷர்களாகச் சேர்த்துத் தம்மை உலகத்தார்க்கு ரக்ஷண மூர்த்தியாகப் பிரசங்கித்தார். அவருடைய பேர் இப்போது நாட்டப்படாத நாடுமில்லை, இராஜ்யமுமில்லை; அவருடைய சீஷரின் பேர் தெரியப்படாத திக்குமில்லை, திசையுமில்லை என்றாராம்.

ஸ்தானாபதிகளுக்கிருக்கவேண்டிய குணசீலங்களைக் கவனிக்கவேணும்.

1. ஸ்தானாபதி திறமையுடையவனாயிருக்கவேணும்.—அப்படியில்லாவிட்டால் தன் எஜமானுக்கு அனுகூலத்தையல்ல பிரதிகூலத்தை யுண்டுபண்ணுகிறவனாயிருப்பான். கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் கிறிஸ்துவோடு சஞ்சரித்து அவரிடத்தில் கற்றவர்களாயிருக்கவேணும். கிறிஸ்துநாதர் அந்தப் பன்னிரண்டு பேரை அப்போஸ்தலராக நியமித்தபோது அவர்கள் முன்னமே அவரோடு பழகினவர்களாகவும் அவரோடிருந்தவர்களாகவும் இருந்தார்கள்.

அதுபோலவே இக்காலத்திலுள்ள தேவ பணிவிடைக்காரராகிய அவருடைய ஸ்தானாபதிகளும் அவரோடு சஞ்சரித்து அவருடைய குணாதிசயங்களிலெல்லாம் பங்குபெற்று அவருடைய நடை, உடை, பாவனைகளிலெல்லாம் அவருடைய திருமுக வெளிச்சம் ஜொலிக்கவேணும். அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம். அவர்களைப் பார்க்கிறவர்களும் கேட்கிறவர்களும் "இவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்க"ளென்று அறிந்துகொள்ளவேணும். (அப். 4. 13.)

2. அவர்கள் தன்னயத்தை வெறுத்தவர்களாயிருக்கவேணும்.—சுகத்தையும், பெருமையையும், கனத்தையும், தனத்தையும், நாடுகிறவர்கள் இந்த அலுவலுக்கு உதவார்கள். ஸ்தானாபதியாகிய ஆசகேலைப்போலிருக்கக்



கூடாது. அவன் வியாதிப்பட்டிருந்த தன் இராஜன் பிழைக்கிறதற்கேற்ற வகையைத் தீர்க்கதரிசியினிடத்தில் கேட்கும்படி அனுப்பப்பட்டிருக்க அவன் சாகிறதற்கேற்ற வகையைத் தேடி அவன் பட்டத்தைத் தான் அபகரித்துக்கொண்டான்.

கிறிஸ்துவின் பாடசாலையிற் கற்றவர்கள் அப்படியிரார்கள். யோவான்ஸ்நானன் தனக்கு வந்த மேன்மையைத் தள்ளி அவருடைய பாதரக்ஷையின் வாரை தான் குனிந்து அவிழ்ப்பதற்கு முதலாய் அபாத்திரன் என்றும் "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்றுஞ் சொன்னான். பேதுரு நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றியிருக்கிறோமென்றும், கொர்னேலியு அவன் பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டபோது அவன் அவனைத் தூக்கியெடுத்து எழுந்திரும் நானும் ஒரு மனுஷன்தான் என்றான். பவுலப்போஸ்தலனும் எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் என்கிறான்.

3. ஸ்தானாபதிகள் தங்கள் எஜமான்களுடைய சித்தத்தை யறிந்து அதற்குத் தக்கதாய் எங்கெங்கே அனுப்பப்பட்டார்களோ அங்கங்கே புத்தியோடும் விவேகத்தோடும் நடந்துகொள்ளப் பார்ப்பார்கள். அதுபோல கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளும் அவருடைய சித்தமாகிய தேவ சட்டங்களை நன்றாய்ப் படித்து அதற்கேற்ற வகையாய் நடக்கிறவர்களாயிருக்கவேணும்.—"சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போல கபடற்றவர்களுமாயிருங்கள்" என்று இரக்ஷகர் அவர்களுக்குப் பண்ணின பட்டப் பிரசங்கத்தில் போதித்தார். அவர் தாமும், தம்மை வார்த்தையில் அகப்படுத்தப் பார்த்த வேதபாரகர் பரிசேயருக்கு அவர்கள் ஆச்சரியப்பட்டு வெட்கத்தோடு போகத்தக்கதாகப் பேசினார். ஒரு சுல்த்தானிடத்தில் கொஞ்சக்காலத்துக்கு ஸ்தானாபதியாய் அனுப்பப்பட்ட ஒரு போதகர் அவன் கேட்ட ஒரு கேள்விக்கு வெகு விவேகமாய் மறுமொழி சொன்ன

ராம். அவன் குமாரனை இழக்கக் கொடுத்து துக்க சாகரத்தில் அமிழ்ந்திப்போயிருந்த நாட்களில் ஒரு நாள் அவன் ஐயரைப் பார்த்து என் மகன் இப்போது எங்கேயிருப்பான் என்று இடீரென கேட்டதாகவும், அவரும் இடீரென்று மோமது இருக்குமிடத்தில் உமது மகனுமிருப்பாரென்று விவேகமாய் மறுமொழி கொடுத்ததாகவும் கேள்வி.

## II. ஸ்தானாபதிகளின் ஊழியம்.

உலகத்தாரை தேவனோடு ஒப்புரவாக்குதல்.—இதைப் பற்றிப் பேசுமுன் 1857-ம் வருஷத்தில் இந்த தேசத்தில் நடந்த சங்கதியை மனதில் வைத்துக்கொண்டால் நாம் பேசப்போகிற காரியத்திற்கு ஏற்ற திருஷ்டாந்தமயிருக்கும்.

அப்போது எழும்பின கலகக்காரரையும் அவர்களால் நடந்த நிஷ்டூரங்களையும் அறிந்திருக்கிறோமே. அந்தக் கலகக்கார ரெல்லாரையும் அதம்பண்ணி யிருந்தாலும் நீதியே. அப்படியிருக்க மகாராணியவர்கள் அவர்கள் அழிவை விரும்பாமல் அவர்களுக்கு மன்னிப்பளிக்க மனங்கொண்டு ஸ்தானாபதிகள் மூலமாய் சமாதான உடம்படிக்கை பண்ணினார்கள். இதையவர்கள் நம்பி தங்கள் யுத்த ஆயுதங்களை யெறிந்துவிட்டு ராஜாங்கத்தாரோடே ஒப்புரவாகிப் போனார்கள். இப்படியே சர்வலோகத்தாரும் தேவ சட்டத்தை மீறி கலகக்காரராய்ப் போனார்கள். இந்தக் கலகம் மூல புருஷனாகிய ஆதாம்முதல் அவன் வழியாய் அவன் பின்னடியாராகிய மனுப்புத்திரர் அனைவரும் கலகக்காரராகி தேவனுக்கு எதிர்த்து நின்று அவர் சட்டத்திற்கு விரோதமாய் வேறு வஸ்துக்களைத் தங்களுக்குத் தேவர்களாகப் படைத்துக் கொண்டு தேவ கோபாக்கினையாகிய சகலவித நிர்ப்பந்தத்திற்கும், நித்திய கேட்டிற்கும் உள்ளாய்ப்போனார்கள். சூரியனுக்கும் பூமிக்கும் தொந்தமிருப்பதால் பூமி செழித்தோங்கி வருகிறது. அந்தத் தொந்தம் அற்றுப் போகும்போது அது சூரியனை விட்டு விலகி அதமாகிக்



காய்ந்து, கருகிக் கமர்வெடித்துப்போவது எவ்வளவு வாஸ்தவமோ, அதுபோலவே தேவனை விட்டுப் பாவ தோஷத்தால் விலகின மனுப்புத்திரரும் அக்கிரமத்தாலும் பாவத்தாலும் செத்தவர்களாகிப் போனார்கள். தொடரற்ற பூமி திரும்ப சூரியனண்டை வருவது எவ்வளவு அசாத்தியமோ அதுபோலவே செத்த பிணமாகிய மனுஷன் தானாய் உயிரடைந்து தேவனண்டை திரும்புவதும் அசாத்தியமே. யூதன் தன் சடங்காசாரங்களினாலும் மகமதியன் தன் ஜெபதபத்தாலும் இந்து தன் புண்ணிய கருமத்தினாலும் நியம நிஷ்டையினாலும் அவர்கள் புரோகிதர்கள் பண்ணுங் கருமாந்தரக் கிரியையினாலும் தேவனைச் சேருவது கூடாத காரியம். "தன் பாவம் தீங்காத தன்மையார் மற்றவன் பாவம் தீர்க்கு வாரோ."

என்னத்தைக்கொண்டு நான் கர்த்தருடைய சந்நிதியில்வந்து உன்னதமான தேவனுக்கு முன்பாகப் பணிந்து கொள்வேன். தகனபலிகளும் ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களும் எண்ணெய் ஓடும் ஆயிரங்களான ஆறுகளும் உமக்குப் பிரியமாயிருக்குமோவென்று தீர்க்கதரிசி பிரலாபிக்கிறார். ஏனென்றால் தேவன் நித்தியர், அவரது சட்டமும் நித்திய தன்மையுள்ளது; அதை மீறுவதால் கிடைக்கும் தண்டனையும் நித்தியமே. இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இந்தத் தண்டனைக்கு விலகுவது அநித்திய வஸ்துவாகிய மனுஷனால் முடியாதகாரியம். ஆகிலும் மனுஷன் ஈடேற்றமில்லாமல், கெட்டுப்போவது தேவனுக்குப் பிரியமில்லை. ஆனால் அவரினுடைய நீதிக்கும் திருப்திகரஞ்செய்யாமல் மன்னிப்பதும் அவருடைய நீதிக்கு வழுவுதலாகும். இந்த விஷயத்தில் நீதியின் கட்கம் மனுஷனைத் தண்டிக்கப் பார்க்கிறது. அவருடைய கருணாகரம் நீட்டப்பட்ட கட்கத்தைத் தடுக்கப் பார்க்கிறது. காரிய மிப்படியிருக்க திரித்துவத்தில் 2-ம் ஆளாகிய இயேசு சுவாமி ஓங்கப்பட்ட பட்டயத்துக்குத் தாம் இரையாகி தேவ நீதிக்குத் திருப்திகரஞ்செய்து போட்டார். இவ்வகையாய் "கிருபையுஞ் சத்தியமும்

ஒன்றையொன்று சந்தித்தது. நீதியுஞ் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ் செய்தது." இப்படியாகத் தேவ கோபம் நீங்கி அடைபட்ட மோட்சவழி திறக்கப்பட்டது. ஒப்புரவாகுதலின் ஸ்தானாபத்தியத்தை ஏற்படுத்தினார். ஸ்தானாபதிகளாகிய தேவ ஊழியக்காரரைத் தேவன் தம்மோடு ஒப்புரவாக்கி ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை அவர்களுக்கு ஒப்புவித்தார்.

ஆகையினாலே தேவ பணிவிடைக்காரராகிய கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள் ஒப்புரவாகுதலின் உபதேசத்தைக் கூறி யறிவிக்கவேண்டியது அவர்கள்பேரில் விழுந்த இன்றியமையாத கடமை. ஒப்புரவாகுதலின் பலனைத் தாங்களே பரீட்சையினால் அநுபவித்தவர்களா யிருக்கவேணும். பன்னிரண்டு அப்போஸ்தலரில் துரோகியான ஒருவன் தவிர மற்றெல்லாரும் அப்போஸ்தலப் பட்டத்திற்கு நியமிக்கப்படுமுன்னமே மெய்யாய்க் குணப்பட்டவர்களாகவே யிருந்திருக்கிறார்கள். இக்காலத்திலுள்ள தேவ பணிவிடைக்காரரும் குணப்பட்டவர்களென்ற நிச்சயத்தின்பேரில் மற்றவர்களுக்குக் குணப்படுதலைப்பற்றிப் போதிக்கவேணும். மற்றப்படி மரித்தவனைக்கொண்டு மரித்தவனை யெழுப்பச் சொல்வது போலிருக்கும். ஆகையால் கிறிஸ்துவின் ஸ்தானாபதி ஒவ்வொருவரும் பாவத்தை வெறுத்து அதற்காகக் கசந்தழுது அதோடெதிர்த்து நின்று அதைத் தள்ளி கிறிஸ்துவை நேசித்து அவரை யெக்காலமும் பற்றிப் பிடித்துக்கொண்டு அவரை யெப்போதும் பின்சென்று அவரினுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களாயிருந்து சுயபரீட்சையினால் மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிறவர்களாயிருக்கவேணும். பாவத்தால் உலகம் துன்பப் பிரளயத்தில் அமிழ்ந்திப்போயிருப்பதையும் அதில் ஒவ்வொருவரும் படும் துன்ப ஆயாசத்தையும் மறுமையிலுண்டாகும் நித்திய வேதனையையும் தெளிவாய் எடுத்துக்காட்டி அது நீங்கும்படி கிறிஸ்துநாதர் சம்பாதித்திருக்கிற பிராயச்சித்தப் புண்ணியங்களாகிய பாவ மன்னிப்பு, இருதய சுத்தம், புத்திர சுவிகாரம், மெய்



சமாதானம், நித்திய ஜீவன், இதுகளைத் தெளிவாயும், திட்டமாயும் எடுத்துப் போதிக்கவேணும். இந்த அரும் பொருட்களாகிய தேவ வரங்களை உலகிலெங்கும் தேடக் கிடையாத திரவியங்களாக எடுத்துக் காட்டவேணும். உலகமுண்டானது முதல் இதுவரையும் தோன்றியிருக்கும் உலக ஞானிகளாலும் சாஸ்திரிகளாலும் கண்டுபிடிக்கப் படாத மறைபொருளொன்று அவர்களுக்குத் தெரிய வேணும். ஏனெனில் "தேவனுடைய சாயலாகிய கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கிப்போட்டான். தவிரவும் பிசாசின் கிரியைகளை யழிக்க வந்தவரும் பாவத்தால் பிரிந்துபோன பாவியைப் பிதாவோடு ஒப்புரவாக்குகிறவருமாகிய சாக்ஷாது இயேசு சுவாமியையே முக்கியமாய் கூறி யறிவிக்கவேணும்." எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படி அவரையே நாங்கள் அறிவிக்கிறோமென்று பவுல் சொன்னார். அவரே நம்முடைய ரட்சிப்பின் அதிபதி, அவராலேயன்றி நமக்கு ரட்சிப்பில்லை. இரட்சிப்படையும்படி மனிதர்களுக்குள் வேறொரு நாமங் கட்டளையிடப்படவுமில்லை. இந்துக்கள் கற்பகவிருக்ஷம் ஒன்றுண்டென்றும் அது கேட்டதெல்லாங் கொடுக்குமென்றும் சொல்லிக்கொள்வார்கள். அப்படிப்பட்ட விருக்ஷமுமில்லை, அவர்கள் கேட்டதெல்லாங் கிடைக்கிறதுமில்லை. ஜீவ விருட்சமாகிய இயேசு தெய்வமே கற்பகவிருக்ஷம்; அவர் நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாய்க் கொடுக்கத் தக்கவர். தேவனும் மனிதனுமாகிய அவரே இச்சிக்கப்படத்தக்கவர். அவரையே நோக்கிப் பார்க்கும்படி போதிக்கவேணும். "பூமியின் எல்லை எங்குமுள்ளவர்களே என்னை நோக்கிப் பாருங்களென்று அவர்தானே கற்பிக்கிறார். உம்முடைய முகத்தையே தேடுவேன், கர்த்தாவே" என்று தாவீதுராஜன் சொல்லுகிறார். அப்படி அவரையல்லாத பிரசங்கம் பிரசங்கமல்ல.

பிரசங்கிக்கிறவர்கள் உயிரெழுத்தில்லாமல் இலக்கணம் படிப்பிக்கும் ஆசானைப்போலும், விதையின்றி மொக்கை மாத்திரம் விதைக்கும் சமுசாரிபோலும், அஸ்திபாரமின்றி மாளிகை யெடுப்பிக்கிற சிற்பாசாரிபோலுமிருப்பார்கள். மேலும் இரக்ஷணியக் கடவுளாகிய இவரையும் இவரிலுள்ளவைகளையும் தனதாக்கிக்கொள்ளும்படி விசுவாசம் அவசியமென்றும் போதிக்கவேணும். பொருளின்றி உலகத்தைக் கடந்து செல்வது எவ்வளவு வருத்தமோ அதுபோல இவ் விசுவாசமாகிய புடமிடப்பட்ட பொன்னின்றிப் பாத்திரங்குரியவர்களாகிறதும் வருத்தம். "பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை; அருளில்லார்க் கவ்வுலக மில்லாகி யாங்கு." இதைக்கொண்டே இரக்ஷகரை நம்முடையவராக்கிக்கொள்ளுகிறோம். அவர் தமது ரத்தத்தால் நம்மைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டது போல நாம் நம்முடைய விசுவாசத்தால் அவரை நம்முடைய சொந்தமாக்கிக்கொள்ளுகிறோம். நீ ஐசுவரியவானாகும்படி நெருப்பில் புடமிடப்பட்ட பொன்னை என்னிடத்தில் வாங்கிக்கொள் என்று அவர்தானே சொல்லுகிறார். மேலும் விசுவாசம் நம்மையும் கிறிஸ்துவையும் இணைக்கிற குழாய்போலிருக்கிறது. ஏரியின் தண்ணீர் குழாய் வழியாய்ப் பட்டணத்துக்கு எப்படிக் கொண்டுவரப்படுகிறதோ, அதுபோல கிறிஸ்துவின் கிருபாநதி விசுவாசமாகிய குழாய்வழியாய் விசுவாசிக்குச் செல்லுகிறது. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று இயேசுநாதர் சொல்லுகிறார்.

### III. கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள்.

ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நிறைவேற்றுகிற விதம். — கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம் என்று வாக்கியத்தில் கண்டிருக்கிறது. வேண்டிக்கொண்டு புத்தி சொல்லவேணும். தேவன் தாமே அவர்களை வேண்டிக்கொள்ளுகிறதாகப் புத்தி சொல்லவேணும். நாம் தேவனுடைய வாயாயிருந்து



பேசுகிறவர்களாயிருக்கவேணும். அப்படிப் பேசும்போது கிறிஸ்துநாதரும் அவருடைய அப்போஸ்தலரும் இந்த ஊழியத்தை எப்படி நிறைவேற்றினார்களோ அப்படியே இக்காலத்திலுள்ளவர்களும் நடப்பிக்கவேணும். எவ்வகை நிலைமையுள்ளவர்களையும் வருந்தி யழைத்து போதிக்கவேணும். ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடரையும் கூட்டிக்கொண்டு வா என்றும், பெருவழிகளிலும் வேலிகளிலும் போய் ஜனங்களை வருந்திக் கூட்டிக்கொண்டு வா என்றும் சொல்லியிருக்கிறது.

1. கண்ணீரோடு வேண்டிக்கொள்ளவேணும். — இயேசுநாதர் எருசலேம் நகரத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டு, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை அறிந்திருந்தாயானால் நலமாயிருக்குமென்று உருக்கத்தோடு புத்தி சொன்னார். பவுலப்போஸ்தலனும் நான் மூன்று வருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டு வந்ததை நினைத்துக்கொள்ளுங்கள் என்று எபேசுவின் மூப்பருக்குச் சொன்னார்.

2. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேணுமென்ற அபேக்ஷையோடு பிரயாசை யெடுத்துக்கொள்ளவேணும்.— செல்வப்பெருக்காலுண்டாகுஞ் சந்தோஷத்திலும் ஒரு ஆத்துமாவை ஆதாயப்படுத்தினேன் என்கிற சந்தோஷம் அதிகப்படவேணும். நான் 70 வருஷகாலமாய் லௌகீக அலுவலும் வைதீக அலுவலும் பார்த்து மேம்பாடடைந்தேன். இதுகளெல்லாவற்றையும்விட என் முயற்சியினால் ஒரு ஆத்துமா கரையேறினது என்று அறிந்தேனானால் இதுவே எனக்குண்டாகும் எல்லாச் சந்தோஷத்திலும் மேலான சந்தோஷமாயிருக்குமென்று ஒரு பெரியவர் சொன்னார்.

3. வருத்தங்களையும் துன்பங்களையும் பாராமல் பிரயாசப்படவேணும்.—அருமை ரக்ஷகருக்கு நேரிடாத துன்பம் மற்றெவருக்கும் நேரிடாது. குதர்க்கம் பேசினார்

கள், வசிஞர்கள், அப்பிரர்கள், அடித்தார்கள், பொறுமையோடு சகித்துக்கொண்டு புத்தி சொன்னார். பவுலப்போஸ்தலனும் காவலிலிருந்தேன் கல்லெறியுண்டேன் என்று தனக்கு நேரிட்ட துன்பங்களையெல்லாம் சோர்வையாக எடுத்துப் பேசுகிறான்.

அப்படியிருந்தும் சந்தோஷத்தோடு விடாமுயற்சியா யுழைத்தான். இப்படியே தற்காலத்துப் போதகர்களும் துன்பத்தைச் சந்தோஷமாய்ச் சகித்து ஆத்துமாக்களை ஈடேற்றத்தின்பேரில் கண்ணாயிருக்கவேணும். நாக லான்று ஐயர் வடதிருநெல்வேலியில் ஒரு அக்கிரா முகப்பில் நின்று பிரசங்கித்தபோது கற்களைக்கொண் டெறிந்து இம்சைப்படுத்தியும் பொறுமையோடும் மலர்ந்த முகத்தோடும் பட்சமுள்ள வார்த்தையோடும் அந்தப் பிராமணருக்குப் போதிக்கப் போனார். அப்பொழுதும் முந்தினபடியே இம்சை செய்தார்கள். அதையும் பொறுமையோடு சகித்து உற்சாகத்தோடு போதித்து வந்தார்.

4. ஜெபத்தினுவியோடு இந்த ஊழியத்தைப் பார்க்க வேணும்.—பாவி குணப்பட தேவ பணிவிடைக்காரர் கையாடும் எல்லாக் கருவிகளையும் கூர்மையாக்குகிற கருவி ஜெபம். வண்டி உருளைக்கு எண்ணெய் அவசியம். அதுபோல தேவ பணிவிடைக்காரரின் காரியாதிகள் குறைவின்றி நிறைவேற்ற ஜெபம் அவசியம். அதை ஓயாமல் கையாடவேண்டியது கடமை. தேவ பிரசன்னத்தை எப்போதுந் தரிசித்துக்கொண்டிருக்கவும் நம்முடைய ஆத்துமா எப்போதும் நீர் வாய்க்காலோரம் நடப்பட்ட மரம்போல செழித்தோங்கவும், சாத்தானுடைய கிரியைகள் மீட்கப்படவும் அவனுடைய கோட்டை அசைந்திடிந்து விழவும் கிறிஸ்துவின் இராஜ்யம் பரவவும் அவருடைய கொடியெங்கும் வீசவும் ஜெபத்தைக் கையாடவேணும். அருமை இரட்சகரும் பகலெல்லாம் உழைத்து இராவெல்லாம் பிதாவோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.



விழித்திருந்து ஜெபம் பண்ணுங்களென்பது அவர் சிஷர்களுக்குச் சொன்ன கடைசியான புத்திமதி.

தேவன் நம்மை எறிட்டுப்பார்த்து நான்தான் பயப்படாதே, நான் உன்னோடிருக்கிறேன், உன்னை விட்டு விலகுவதில்லையென்று நம்மோடு பேசவேணுமென்ற கரிசனை நமக்கிருக்குமாகில் ஜெபத்தியானத்தை நமக்குச் சாதனை வித்தையாக்கிக்கொள்ளவேணும். "தேவனைச் சேருங்கள், அவரும் உங்களைச் சேருவார்." காந்தம் ஊசியை இழுப்பது வாஸ்தவந்தான். ஆனால் காந்தத்துக்கு நேரே ஊசி யிராவிடில் காந்தம் என்ன செய்யக் கூடும். இப்போது பட்டாபிஷேகம் பெறப்போகிறவர்களாகிய சகோதரரே, நீங்கள் பெறப்போகிற உத்தியோகம் எல்லா உத்தியோகங்களிலும் சிறந்தது. மனுஷருக்குப் பணிவிடைக்காரராயிருப்பதிலும் தேவனுக்கு பணிவிடைக்காரராயிருப்பது அதிக உத்தமம். நீங்கள் முடிவுபரியந்தம் உண்மையுள்ள உக்கிராணக்காரராயிருக்கப் பாருங்கள்.

பொருளைச் சம்பாதிப்பதில் மனுஷர் வெகு யூகத்தைக் கையாடுகிறார்கள். அழிந்துபோகாத ஆத்துமாவை ஆதாயப்படுத்துவதில் எவ்வளவோ அதிக யூகத்தைக் கையாட வேண்டியதிருக்கிறது. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவனே ஞானி. எல்லாவிதப் பொறுமையோடும், விடாமுயற்சியோடும், உத்தம பக்தியோடும், பரிசுத்த சிந்தையோடும், தன்னை வெறுத்த குணத்தோடும், ஜெபத்தின் ஆவியோடும் உங்கள் ஊழியத்தை நிறைவேற்றப் பாருங்கள். இதுவே உங்கள் போஜனபானமாயிருப்பதாக. பூர்விகத்திலிருந்த தேவ ஊழியக்காரரைப்பற்றி "கிறிஸ்து அவர்கள் ஜீவநாடி, பரிசுத்தம் அவர்களைச் சுற்றி நின்ற ஆகாயம், தேவன் அவர்கள் வாசஸ்தலம், அவரின் மகிமை அவர்கள் நாட்டம், உலகம் அவர்கள் பின்னாக எறிந்துவிடுங் குப்பை" என்று சொல்லியிருக்கிறது. இதற்குப் பரிசுத்த ஆவியின் ஒத்தாசை வேணும். அவரின் ஒத்தாசையன்னியில் ஒன்றும் நன்றாய் வாய்க்காது. பிதா தம்முடைய குமாரனைத் தந்

ளும், குமாரன் தம்முடைய ஜீவனைத் தந்தும், பரிசுத்த ஆவி தம்முடைய அருளைத் தாரத் விஷயத்தில் என்ன ஆச்சு? அந்த அருளைத் தேடுங்கள், கண்டடைவீர்கள்.

"தேவாவியே வந்தெங்களை
எழுப்பிக் கொண்டிரும்;
இக்கம் ஜீவன் லமே
இவர்களுக்கு அ பும்."

---

## சங்கீதம், 27. 8.

"என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே,
உம்முடைய முகத்தையே தேடுவேன், கர்த்தாவே."

உலகத்தில் மனுஷர் அருமையாய்த் தேடுகிற பல அருமையானவைகள் உண்டு. பொன்னும் பொருளும், கல்வியும் கனமும், சுகமும் இன்பமும், அழகும் ஆஸ்தியும், மனுஷரால் தேடப்படுகிற இன்றியமையாதவைகள். ஆயினும் இவைகள் எல்லாவற்றிலும் அருமையாய் ஒருவனை ஒருவர் தரிசிக்க விரும்புவதே மிகவும் சிறந்தது. பிரஜைகள் தங்கள் அரசனையும், சீஷன் தன் குருவையும், பிள்ளை தன் தாயையும், சிநேகிதன் தன் சிநேகிதனையும் தேடுவதும் முகத்தைக் கண்டு ஆறுதலடைவதுமன்றல்லவா. இங்கே திவ்விய முகத்தைத் தேடுவதைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மனுஷனுடைய முகத்தில் தயாளமும், சமாதானமும், பூரிப்பும், கடுகடுப்பும், சஞ்சலமும், பல சமயங்களில் பலவிதமாய்த் தோன்றுவதை நாம் அநுபோகமாய் அறிவோம். ஆனால் வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற முகமோ அழிவில்லாததும், அழகு குன்றாததும், எந்தப் பாவியையும் ஆற்றத்தக்கதுமான இலட்சணமுடையது. வாக்கியத்தில் இரண்டுபாகம் அடங்கியிருக்கிறது. ஒன்று நாம் அவர் முகத்தைத் தேடும்படி அவர் சொல்வதும், இன்னொன்று நாம் அவர் முகத்தைத் தேடுவதாகச் சொல்வதுந்தான். இப்போது அவர் முகத்தைத் தேடுவதற்கு அது எப்படிப்பட்ட முகமென்றும், ஏன் தேடச்சொன்னாரென்



றும், தேடினால் என்னபலன் நமக்கு உண்டு என்றும், தேடச்சொன்னாரென்றும், எதுவரை தேடவேண்டுமென்றும் ஐந்து பங்காகப் பிரித்துச் சிந்திப்போமாக.

-வது. அது எப்படிப்பட்ட முகம்?

அது:—அநாதி முகம். அண்ட சராசரங்கள் அமைக்கப்படுமுன்னமே அநாதியுள்ள முகம்.

அது:—ஆதி முகம். ஏதேன் வனத்தில் ஆதித்தாய் தகப்பன் முகமுகமாய்த் தரிசித்த முகம்.

அது:—அரூப முகம். அவர் ஆவியாயிருந்தும் ஆபிரகாம் அவரைப் பார்த்து விருந்தழைத்து ஆசீர்வாதத்தைப் பெறச்செய்த முகம்.

அது:—ஜோதி முகம். மோசே அவர் முகத்தைப் பார்க்க விரும்பியும் கூடாமல் பின்புறத்தைக் கண்டான். அந்த ஜோதியையே அவன் தாங்கக் கூடாதிருந்தது. அப்போ முகம் என்ன ஜோதியா யிருந்திருக்கும். அது ஜோதி முகமே.

அது:—ஞான முகம். தேவாலயத்திலும் மற்ற இடங்களிலும் ஞானிகளும் சாஸ்திரிகளும் திகைக்கத் தக்கவிதமாய் சம்பாஷித்த ஞானம் இலங்கின முகம்.

அது:—அதிசய முகம். அற்புதங்களினால் ஜனங்களுக்கு தமது தெய்வீகத்தைக் காட்டியபோது ஜனங்கள் அவரை அதிசயமாய்ப் பார்க்கச் செய்த முகம்.

அது:—நீதி முகம். தேவாலயத்தில் காசுக்கடைக்காரரையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து ஒரு சவுக்கால் அவர்களைத் துரத்தினபோது அவர் முகம் நீதி பிறக்கும் முகமாகவே இருந்திருக்கும்.

அது:—கஸ்தி முகம். கெத்செமனேயிலும் ஆசாரியன் வீட்டிலும் வழியிலும் கொல்கதாவிலும் இரத்த வேர்வையையும் அங்கலாய்ப்பையும்

சவுக்கடிகளையும் முண்முடி உபாதைகளையும் செளிலை விக்கத்தையும் குட்டுகளையும் எச்சிலையும் இகழ்ச்சியையும் சகிக்கப்பட்டு உத்தரித்ததே. ஆ! எத்தனை அகோரம், எத்தனை பரிதாபம். ராஜமுகம் நீசமுகமாய் மாறினதோ, அழகான முகம் கொந்தமுகமானதோ, தங்கமான முகம் பங்கமான முகமானதோ, ஆ இதெல்லாம் நமது பாவத்தினாலேயே. ஆ அது கஸ்தி முகமே.

அது:—வெற்றி சிறந்த முகம். பிசாசையும், அதின் பலத்தையும், மரணத்தையும், சாபத்தையும் ஒழித்து அடியார்களுக்குக் காட்சிகொடுக்க எழுந்த வெற்றிசிறந்த முகம்.

அது:—ஆழ்ந்து பார்க்கிற முகம். நல்லோரையும் பொல்லோரையும் சோதித்து அவரவர்களுக்குரிய பலனை அருளக் காத்துக்கொண்டிருக்கிற முகம். இன்னும் சொல்லப்போனால் விரியும்.

இப்படி நாம் மேலே கவனித்தபடிக்குள்ள இந்த திருமுகத்தை நாம் தேடும்படி சொல்லுகிறார்.

## II-வது. ஏன் தேடச்சொன்னார்?

தாய்முகம் காணாத பிள்ளையும், மழைமுகம் காணாத பயிரும் வாடும் என்ற பழமொழிப்படி நாம் அவரை நோக்கிப் பார்க்காவிட்டால் நம்முடைய காரியங்களெல்லாம் நஷ்டம். ஊழி ஊழிகாலமான நஷ்டம், அவர் முகத்தைக் கண்டாலும் கலி தீரும். பார்த்தாலும் பசி தீரும். நாம் அவரைப் பார்க்கும்படிச் சொல்லுகிற காரியம் இரண்டு. ஒன்று அவருடைய முகத்தின் அருமையை யோசிக்கவும், இன்னொன்று நமது முகத்தின் சிறுமையைக் கவனிக்கவுமே. அவர் சாயலைச் சிருஷ்டிக்கப்பட்ட நமது முகம் பாவத்தினால் பரிசுத்த அழகு நீங்கி விகார சொரூபிகளாய்ப்போய் நமது அவலட்சணத்தை மறைத்திருப்பதால் நாம் [illegible] நமது முகத்தைப்



பார்க்கச் சொல்லுகிறார். கண்ணாடியில் நமது முகத்தைப் பார்க்கும்போது முகத்திலுள்ள குற்றங்குறை காணப்படுகிறதுபோல அவரை நோக்கி ஒப்பிட்டுப் பார்க்கையில் நமது நிலைமையும் தெரிகிறது. அவரது அலங்காரமும் தெரிகிறது. ஆகையால் நாம் தேடவேண்டியது நமது கடமைதான். பிறந்த இடத்தை நோக்கும் பிள்ளை கறந்த இடத்தை நோக்கும் கன்று என்ற ஓர் பழமொழியுமுண்டு.

## III-வது. தேடினால் நமக்குக் கிடைக்கிற பலன் என்ன?

நாம் எத்தனைகாலம் இவ்வுலகத்திலிருந்தாலும் ஓர் சமயம் மரிப்போம். மண்ணால் பிரிக்கப்படுவோம். ஜீவன்போனால் சரீரம் ஒன்றுக்கும் உதவாது. அப்படியே குமாரனை அல்லாதவன் ஜீவன் இல்லாதவன். குமாரனை உடையவனே ஜீவனை உடையவன். நாம் இவ்வுலகத்திலிருக்கையில் மனக்கண்ணினாலும் அங்கேயோ முகமுகமாயும் தரிசிப்போம். அவரையும் அநேக மகாத்துமாக்களையும் தூதர் சேனைகளையும் மோட்ச அலங்காரங்களையும் நித்தியகால சந்தோஷத்தையும் பார்க்கிற அனுபவிக்கிற பாக்கியபலன் அவரைத் தேடுவதினால் நமக்குக் கிடைக்கிறது.

## IV-வது. எங்கே தேடச்சொன்னார்?

வீட்டிலும் வெளியிலும் கூட்டத்திலும் தனித்தும் வேலையிலும் இளைப்பாறுதலிலும் இடுக்கணிலும் ஆலயத்திலும் அன்பர் மத்தியிலும் சுருக்கிச் சொன்னால் இகத்தில் இருக்கும்வரை எங்கும் எவ்வேளையும் அவர் முகத்தைத் தேடவேண்டும்.

## V-வது. எதுவரை தேடவேண்டும்?

உலகத்தில் ஒவ்வொன்றைத் தேடுவதற்கு ஒவ்வொரு காலமும் வேளையுமுண்டு. மிக அருமையான சிலவைகள் அந்தந்தக் காலங் கழிந்தபின்

பிரயோஜனப்படாதவைகளாகும். ஆகையால் ஆதாயப்படுத்தவேண்டுமானால் ஏற்கனவே தேட வேண்டும். அப்படியே நமது கர்த்தாவின் திருமுகத்தை ஒருநாளல்ல, ஒரு வருடமல்ல, சில காலமல்ல நமது ஜீவகாலமெல்லாம் சொல்ல வேண்டுமானால் நமது மூச்சடங்கும்வரை தேட வேண்டும். முடிவுபரியந்தம் அவரைத் தேட வேண்டும். பேதுரு சமுத்திரத்தில் அவருடைய முகத்தை நோக்கினபோது அமிழாமல் நடந்தான். கீழே ஆழத்தைப் பார்த்தபோதோ ஆழ்ந்தான். அப்படி நாமும் அவர் முகத்தை எப்போதும் நோக்கி நடந்தால் நமது முடிவில் முகமுகமாய் அவரைத் தரிசிப்போம். இப்போது நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். இனிமேல் முகமுகமாய்த் தரிசிப்போம் என்றபடி ஆகும்.

என் பிரியமானவர்களே! இதுவரை நீங்கள் திருமுக லட்சணங்களையும் தேவன் அதைத் தேடச்சொன்னதென்பதையும் தேடுவதினாலுண்டாகிற பலன்களையும் கடைசி மூச்சுவரை தேடவேண்டுமென்றும் கேட்டீர்களே. இப்போது என்னயோசனையோடு உங்கள் வீடுகளுக்குப் போகிறீர்கள். இங்கே உங்களில் சிலர் இன்னும் அவர் முகத்தைத் தேடாமலிருக்கலாம். தேடிவிட்டவர்களாயிருக்கலாம். சிலர் அவர் முகத்தைப் பார்க்கப் பயப்பட்டு ஒளிக்கலாம், சிலர் அவரைப் பார்க்க ஆசைப்படலாம். சிலர் அவரைப் பார்த்துக்கொண்டே நடக்கிறவர்களாயிருக்கலாம். நல்லது அவரைப் பார்க்கிறவர்களும் அவரைப் பார்க்க ஆசைப்படுகிறவர்களும் பாக்கியவான்கள்தான். மெய்யாகவே அவர்கள் பாக்கியவான்கள்; ஆனால் அவர் முகத்தைப் பார்க்கப் பயப்படுகிறவர்களும், இன்னும் பார்க்காதவர்களும் இங்கிருந்தால் அது எவ்வளவு பயங்கரமான நிலைமை? எவ்வளவு துக்கமான நிலைமை, பரிதாபம், பரிதாபம். நானானாலும் நீங்களானாலும் யாரானாலும் சரி, அவர் திருமுகத்தைத் தேடாதவர்கள் நிலைமை பயங்கரமானதுதான். ஆகையால் நாமும் நீங்களும் அவர் திருமுகத்தை எப்போதும் எங்கும் நோக்கிப் பார்த்துத் தேடி போராட்ட சாலையில் ஓடிக் கடைசியாய் அவர் சமுகத்தில் சதாகாலமும் அவரைத் தரிசித்துப் பரவசமடையப் பிரயாசப்படுவோமாக. சுவாமி அப்படிப்பட்ட கிருபையை நமக்குத் தந்தருளுவாராக. ஆமென்.




## 3. அந்திய காலம்.

இதுவரைக்கும் அருமைத் தகப்பனாரின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி எழுதிவந்தேன். இப்போது கடைசியாக அவர்களுடைய அந்தியகாலச் சரித்திரத்தை எழுதப்போகிறேன். ஆண்டவர் இதில் எனக்கு வேண்டிய தைரியத்தையும் எழுதத்தக்க திராணியையும் கொடுப்பாராக. 1886-ம் வருஷம் எனது தகப்பனாருக்குக் கடைசி வருஷமாயிருக்குமென்று நாங்கள் கனவிலும் நினைத்ததில்லை. அவர்கள் வியாதிப்படுக்கையில் சொன்னதுபோலவே அவர்களுக்கு 1886-ம் வருஷம் லாபமான வருஷமாகவும், அவர்கள் குடும்பத்திற்கும் சபைக்கும் கஷ்டமான வருஷமாகவுமாயிற்று. ஆனாலும் தேவனுடைய சித்தம் நமது பாக்கியம். வருஷத்துவக்கத்திலன்று பழைய புதுவருஷச் சந்திப்பின் ஆராதனை முடிந்து ஆலயத்திலிருந்து தகப்பனார் வெளியே வரும்பொழுது அவர்கள் கடைசி மகள் எதிரில் போய் "இது உங்களுக்குப் பாக்கியமான வருஷமாயிருப்பதாக" என்று வாழ்த்தினாள். ஆனால் அவர்கள் எங்களுக்குச் சொன்ன வாழ்த்துதல் எங்களுக்கு வேறுவிதமாக முடிந்தது. அன்று காலைமுதல் மாலைவரை வழக்கம்போல் வெளியூர்களிலிருந்து சபையாரும் மிஷன் உத்தியோகஸ்தரும் புதுவருஷ மரியாதை செய்து வாழ்த்துதல் சொல்ல வந்தார்கள். தகப்பனார் ஒவ்வொருவருக்கும் சமயோசிதமான புத்திமதிகள் சொல்லி அவர்களை ஆசீர்வதித்தனுப்பினார்கள். 30 வருஷமாய்த்

தன் சுகத்தையும் பெரிதென்று பாராமல் தங்கள் நடுவில் ஊக்கமாயுழைத்த, தங்க ளருமைப் போதகருக்கு இது தான் கடைசி வருஷமென்று ஒருவரும் நினைத்திருக்க மாட்டார்கள். அந்த வருஷத் துவக்கத்திலேயே எங்கள் குடும்பத்திற்கு துன்பம் தொடங்கிவிட்டதென்று சொல்லலாம். பெப்ரவரி மீ துவக்கத்திலே மெஞ்ஞான புரத்திலிருந்த அவர்களுடைய மூத்த சகோதரருக்குக் கன்னத்தில் ஒரு கட்டி புறப்பட்டு வருத்தமாயிருக் கிறதென்ற செய்தியைக் கேள்விப்பட்டு அதிகக் கவலை யோடிருந்தார்கள். இயல்பாகவே அந்தத் தமையனுக் குச் சற்று சுகமில்லையென்று கேள்விப்பட்டால் தகப்ப னார் உடனே அதிகக் கவலைப்படுவார்கள். அப்படியே இந்தத்தடவையும் அதிகக் கவலையோடும் கண்ணீரோ டும் ஜெபம்பண்ணினார்கள். எப்படியென்றால் ஆண்ட வரே, எங்கள் மூத்த சகோதரனுக்கிரங்கி நல்ல சுகத் தைக் கொடும், அவர் எங்களுக்குத் தகப்பனைப்போலி ருந்து எங்களை நல்வழியிலே நடத்தி இவ்வளவுதூரம் நாங்கள் உம்மை அறிந்து உமக்கு ஊழியக்காரராகும் படி கருவியாயிருந்தார். இன்னம் கொஞ்சக்காலத்திற்கு எங்களுக்குக் கனமும், மகிமையுமாக உலகத்தில் வைக்க உமக்குச் சித்தமானால் சுகத்தைக் கொடுமென்று கண்ணீ ரோடு ஜெபம்பண்ணினார்கள். இவர்களைக் கிறிஸ்துமார்க் கத்திற்குக் கொண்டுவந்த விபரத்தைப்பற்றி அவர்க ளுடைய இளமைப்பிராயச் சங்கதிகளில் எழுதியிருக் கிறவைகளினால் அறிந்துகொள்ளலாம். இதுகாரணத்தி னால் அவர்களை எப்போதும் கனமாயெண்ணி அருமை யாய் நேசித்து வந்தார்கள். அவர்களும் தென் திரு நெல்வேலியிலுள்ள மெஞ்ஞானபுரத்தில் பதினொன்றா யிரம் தொகையுள்ள சபைகளுக்கும் 21 போதகமா ருக்கும் தகப்பனாகவும் தலைவராகவுமிருந்து அதிக பூர மாகவும் திறமையாகவும் சபையை நடத்தி வந்தார்கள். இந்தச் சகோதரர் இருவரும் இரண்டு மாசத்திற்குள் முன்னும் பின்னுமாக இறந்துபோனவுடனே அவர் களைப்பற்றிப் போட்ட பத்திரிகைகளில் ஒன்று பெரிய



தகப்பனாரை சூரியனுக்கும், என் தகப்பனாரை சந்திர னுக்கும் ஒப்பிட்டு, சூரியனும் சந்திரனும் இருளடைந் ததே யென்று பரிதாபமாய் எழுதியிருந்தது. தென் திரு நெல்வேலியில் அவர்களைச் சூரியனுக்கும், வடதிரு நெல்வேலியில் தகப்பனாரைச் சந்திரனுக்கும் ஒப்பிட்ட தற்குச் சில காரணங்களுண்டு. பெரிய தகப்பனார் தன் சபைவிஷயத்தில் சற்றுக் கண்டிப்பாயிருப்பார்கள். தப் பிதஞ்செய்தவர் ஒரு குருவானவராயிருந்தாலும் அவர் களைக் கண்டித்து அதிக விவேகமாய் நடத்துவார்கள். இதையிட்டு ஓர்தடவை கனம் சார்ஜென்று பிஷப் அவர் கள்கூட மிஸ்றர். தெய்வநாயகம், உமக்கிருக்கும் தைரியமும் கண்டிப்பும் எனக்கு வரவில்லையே யென்று புகழ்ந்து எழுதியிருந்தார். என் தகப்பனாரோ அதி கக் கண்டிப்பு செலுத்தாமல் தப்பிதஞ் செய்தவர்களை இணக்கமானவிதமாய் புத்தி சொல்லி அவர்கள் குற்றங் களை அவர்களுக் குணர்த்தி இந்தவிதமாய் அவர்களை நடத்திவந்ததினால் இந்தத் திருஷ்டாந்தங்களை அவர்க ளுக்கு ஒப்பிட்டிருந்தது. கடைசியாய் தன் தமையனார் அதிக வருத்தமான நிலைமையி லிருக்கிறார்களென்று தகப்பனார் அறிந்து உடனே புறப்பட்டு பாளையங் கோட்டைக்குப் போய் அங்கிருந்த தன் இரண்டாவது சகோதரனையும் கூட்டிக்கொண்டு கடைசி நேரம்வரை அவர்கள் பக்கத்திலிருந்து அவர்களுக்கு உதவிசெய்து பெப்ரவரி மீ 25உ அவர்களிறந்த அன்று என் தகப்ப னார் காண்பித்த துயரத்தைப் பார்த்தவர்கள் இவ்வளவு நேசம் தமையனார்மேலிருந்ததாவென்று அதிசயித் தார்கள். பின்னும் அங்கிருந்தே என் தாயாருக்கும் மக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் எழுதியனுப் பின காகிதத்தின் செய்தி என்னவென்றால், "நமது குடும் பத்திற்கு நேரிட்டிருக்கும் பெரிய ஆபத்தைப்பற்றி பாளை யங்கோட்டை பெரிய தகப்பனார் கடிதத்தின் மூலமாய் நீங்களறிந்து அதிக துக்கப்பட்டிருப்பீர்களென்று எனக் குத் தெரியும். ஒருவருக்கும் தெரியாதவண்ணம் ஆண் டவர் நம்முடைய குடும்பத்திற்கு இந்தப் பெரிய

ஆபத்தை வர விட்டிருக்கிறார். இது கர்த்தருடைய சித்தம் நமது பாக்யம். முகத்தில் ஒரு பிளவையுண்டாகி வெகு வருத்தத்தைக் கொடுத்து உயிரை எடுத்துக் கொண்டது. ஆனாலும் அவர்கள் வியாதிப்படுக்கையிலிருந்த 25 நாட்களாய் அந்த அகோர வேதனை அவர்களுக்குண்டாகியும், சற்றேனினும் முறுமுறுக்காமல் யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் அதைச் சகித்து, அமைதலோடு தன் உயிரை ஆண்டவர் கையில் ஒப்புக்கொடுத்தார்கள். என் அந்தியகாலத்தில் என் அருமைச் சகோதரன் காண்பித்த பொறுமையை நானும் காண்பித்து, என் ஆண்டவர் கையில் என் ஆவியை ஒப்புவிக்கத்தக்க கிருபையை எனக்கு அளிக்கும்படி, "என் அருமை மகனே, நீ நாடோறும் எனக்காக ஜெபம் செய்து வா. அப்படிச் செய்வீர்களா" என்று ஒவ்வொருவருக்கும் கடிதமெழுதினார்கள். இதுதான் நாங்கள் எங்களருமைத் தகப்பனாரிடமிருந்து பெற்றுக் கொண்ட கடைசிக் காகிதம். அங்கிருந்து உடனே தன் சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். வந்த மறுநாள் ஓய்வுநாளானபடியால் இரண்டுவேளையும் ஆலயத்தில் பிரசங்கம் செய்தார்கள். அன்று அவர்கள் தெரிந்துகொண்ட வேதவாக்கியமும் எல்லாராலும் கவனிக்கப்படத்தக்கதாயிருக்கிறது. "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்ற வேதவாக்கியத்தின்பேரில் பிரசங்கம் செய்ததோடு தன் தமையனார் மரண சமயத்தில் காண்பித்த பொறுமையைப்பற்றியும், மனுஷரின் நிலையில்லாமையையும் உலகம் மாறுதலுள்ளதென்பதையும்பற்றி விபரமாய்ச் சொல்லி, கடைசியாய் தன் தமையனாரோடு தான் பின்னிட்ட கடைசிச் சமயம் தனக்கு ஒரு பள்ளிக்கூடமாயிருந்ததென்றும், தான் அதில் படித்துக்கொண்ட பாடம் பொறுமையென்றும் தனக்கும் தன் அந்திய காலத்தில் இப்படிப்பட்ட பொறுமையை தேவன் கொடுக்கும்படியாக நீங்களெல்லாரும் எனக்காக ஜெபம்பண்ணி வாருங்களென்று சபையாரையும் கேட்டுக்கொண்டார்கள். இதுவே அவர்களுடைய கடைசிப்



பிரசங்கமாயிருந்தது. யார்தான் இப்படி நினைத்திருப்பார்கள். அந்த வாரத்திலேயே அவர்களுக்கு நாடியில் ஒரு சிறு பருப்போலுண்டாகி வரவரப் பெரிதாயிற்று. கூடியமட்டும் மருந்தைப் பிரயோகம் செய்தும் வாய் பேசக் கூடாதபடி வீக்கமுண்டாகி அதிகச் சங்கடப்பட்டார்கள். இந்தச் சமயத்தில் நாங்களும் எங்கள் இளைய சகோதரனும் வாகைக்குளத்திற்கு 27 மைலுக்கு அப்பாலிருக்கிற ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்தோம். எங்களுக்குக் கூலியாள் மூலமாய் இரவு 7 மணிக்குக் கடிதம் வந்தது. திடீரென்று இந்தச் செய்தி கேட்டவுடனே எங்களுக்கு அதிக மனவருத்தமாயிருந்தது. அந்த நாளை இப்பொழுதும் நினைக்கக்கூடவில்லை. இது அவர்களுக்கு மரணமாய் முடியுமென்று எங்களுக்குத் தெரியாதிருந்தும் அன்று நாங்கள் பட்ட மனவருத்த மதிகம். அந்நிமிஷத்திலேயே நாங்கள் புறப்பட ஆயத்தப்பட்டு மறுநாள் காலை 10 மணிக்குத் தகப்பனார் வீடுபோய்ச் சேர்ந்தோம். வீடு நெருங்க நெருங்கக் கலக்கம் அதிகமாயிருந்தது. தகப்பனாரைப் போய் பார்த்தநேரம் நான் ஒருபோதும் மறக்கக்கூடியதல்ல. நான் என் அருமைத் தகப்பனாரவர்களைக் கடைசியாய் அனுப்பிக்கொண்டு போனபோது, அவர்களிருந்ததற்கு இப்போது அவர்கள் மெத்த மெலிந்து தேகம் சட்டமாயிருந்தது. பேசக் கூடாதபடி நாடியில் போல்ட்டிஸ் வைத்துக் கட்டியிருந்தது. அவர்களைக் கண்டவுடனே என் மனம் பொங்கினாலும் அவர்களுக்கு முன்பாக என் மனதை அடக்கிக்கொண்டு, அடுத்த அறைக்குப் போய் என் துக்கத்தை ஆற்றிக்கொள்ளும்படி நேரிட்டது. அருமைத் தகப்பனார் தன் வருத்தத்தைக்கூட பெரிதாகக் கவனியாமல் பிள்ளைகளைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, அவர்களைச் சந்தோஷப்படுத்தும்படி தோட்டத்திலிருந்த மாதளம் பழங்களைப் பிடுங்கிக் கொடுக்கும்படி சொன்னார்கள். எங்கள் தகப்பனாரை நாங்கள் இந்த உலகத்தில் ஒரு பொக்கிஷம்போலெண்ணிக்கொண்டிருந்தோம். அவர்கள் வியாதியினாலாவது அல்லது மற்றெந்த விதத்தினு

லாவது கஷ்டப்பட நாங்கள் கொஞ்சமேனும் சம்மதிக்க மாட்டோம். தகப்பனாரை இழந்த பிள்ளைகளைக் கண்டால் இந்தப் பிள்ளைகள் எப்படித்தான் இந்த உலகத்தில் சந்தோஷமாய்ப் பின்னிருப்பார்களோ என்று நினைத்தோம். அப்படிப்பட்ட எண்ணங்களைக்கொண்டிருந்த நாங்களும் அந்த ருசியைப் பார்க்கும்படியான காலம் வந்தது. பிள்ளைகளில் யாராவது ஒரு அவசரமான விஷயத்திற்குக் கூப்பிட்டால் அவர்கள் வாயிலிருந்து வார்த்தைகள் பிறக்கிறதற்கு முன்னதாகத் தயாராயிருப்போம். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு நாள் ஒரு சாமான் தேவையென்று பிள்ளைகளைக் கூப்பிட்ட ஒரு சமயம் ஒரு மகள் ஓடிப்போன அவசரத்தில் தவறி விழுந்ததால் கை ஒடிந்து அது சுகப்பட 2 மாதம் சென்றது. அந்தப் பிள்ளையே இன்னொரு தடவை அவர்கள் கூப்பிட்டபோது ஓடிப்போனதில் விழுந்து தகப்பனாரே தூக்கிவிடும்படி நேரிட்டது. இதெல்லாம் அவர்கள் கண்டிப்பினாலுண்டான பயமல்ல. அவர்களை அதிகப் பட்சமுள்ள ஒரு தாய்க்கு ஒப்பிடவேண்டும். அவர்களுடைய பாசமும், இளகின நெஞ்சமும், அரவணைக்கும் குணமுமே பிள்ளைகள் அவர்களை இவ்வளவாய் நேசிக்கும்படி செய்தது. தன் பிள்ளைகளை மட்டுமல்ல, எந்தப் பிள்ளைகளைக் கண்டாலும் அவர்களை அழைத்து அவர்களிடத்தில் சந்தோஷமாய்ப் பேசி அனுப்பினால்தான் அவர்கள் மனதிற்குத் திருப்திகரமாயிருக்கும். அவர்கள் கிராமங்களுக்குப் போகிறபோதெல்லாம் அந்த இடங்களிலுள்ள சிறு பிள்ளைகளைக் கூப்பிட்டு அவர்களிடம் வேதவாக்கியம் கேட்டு அவர்களுக்குத் தன் உபயோகத்திற்கென்று கொண்டுபோயிருக்கும் பலகார முதலியவைகளைக் கொடுத்து சந்தோஷப்படுத்தி அனுப்புவது வழக்கம்.

தகப்பனாரின் வியாதிப் படுக்கையின் நாட்களொவ்வொன்றும் ஒவ்வொரு வருஷம்போல் எங்களுக்கிருந்தது. அவர்கள் வியாதியாயிருந்த ஏறக்குறைய ஒரு மாதக்காலம் கூடியமட்டும் வீட்டிற்குள்ளும், வெராந்தா



விலும் நடமாடி உலாவுவார்கள். இதற்குப்பின் நாடியிலுள்ள பரு சுகமானதுபோலக் காணப்பட்டுத் தொடையிலுண்டான பின்புதான் அவர்கள் நடமாட்டம் நின்றது. இந்தச் சமயத்தில் அவர்களுக்காகப் பிரயாசப்படாதவர்களில்லை. எட்டியாபுரம், ஊற்றுமலை முதலான ஜமீன்கள் முதலாய் தங்கள் சொந்த வைத்தியர்களையும், உத்தியோகஸ்தர் முதலியவர்களையும் போய் பார்த்து வரும்படி கவலையோடு அனுப்பினார்கள். இரவு பகலாயிருந்தது. யார் யாருடைய பிரயாசமிருந்தும் ஆண்டவருடைய சித்தம் வேறுவிதமாயிருக்கும்போது மனிதரால் என்ன செய்யக்கூடும்? ஒன்றுமில்லாமையிலிருந்து சகலத்தையும் உண்டாக்கினவருக்குச் சித்தமானால், மருந்தில்லாமல் சுகப்படுத்த முடியாதா? பல இடங்களிலிருந்தும் அவர்களைப் பார்க்கவும், அவர்கள் சுகத்தை விசாரித்துப் போகவும் வந்தவர்கள் அநேகர். கடைசியாய் தகப்பனாருக்கு அதிகச் சுகமில்லாததை, வடபாகத்திலுள்ள அமலாபுரம், பந்தரிலிருந்த இரண்டு பெண்மக்களும் கேள்விப்பட்டு அவர்கள் புருஷர்மார் வரக்கூடாதிருந்தும் தகப்பனாரின்மேலுள்ள கவலையினால் தனிமையாய்க் கப்பலில் பிரயாணம்பண்ணி பட்டணம் வந்து தகப்பனாரிருக்கிற ஊருக்கு வருகிற அன்று தகப்பனார் மக்களைப் பார்க்க அதிக ஆவலுள்ளவர்களாயிருந்தும் எழுந்திருக்கக் கூடாத ஸ்திதியிலிருந்தார்கள். அவர்கள் சுகமாயிருக்கும் காலத்தில் மக்கள் வருகிறதாயிருந்தால் 15 மைலுக்கு அப்பாலிருக்கிற ஸ்டேஷனுக்குப் போயாவது அல்லது உலாவப்போகிறதுபோல 3, 4 மைலுக்கப்பால் எதிரில் போயாவது அழைத்துக்கொண்டு வருவார்கள். அப்பேர்ப்பட்ட அருமையான தகப்பனாரை வீட்டுக்குச் சமீபமாய் வருமட்டும் காணவில்லையே யென்று பிள்ளைகள் ஆவலோடும் கண்ணீரோடும் தகப்பனாரின் அறைக்குப் போய்க் கட்டிலில் படுத்திருந்த தகப்பனாரை முத்தி கண்ணீர் அடிக்கிறதைத் தகப்பனார் கண்டு சகிக்கமாட்டாமல் திரும்ப கண்ணீர்விட்டு யாக்கோபு சொன்னதுபோல,

என் அருமைப் பிள்ளைகளே! வந்துவிட்டீர்களா, இதுவே போதுமென்று சொல்லி சற்றுநேரம் பொறுத்து அவர்கள் கப்பலில் தனிமையாய் பிரயாணம் செய்ததை நினைந்து அவர்களிருவரையும் பார்த்து, என் பிள்ளைகளே, பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமைகளைத் தெலுங்கு தேசமெல்லாம் விதைத்துவிட்டு வந்தீர்கள் என்றார்கள். அதன்பின் ஒரு வாரமட்டும் பிள்ளைகளை அடிக்கடித் தன் அறைக்குக் கூப்பிடுகிறதும், பக்கத்தில் உட்காரச்சொல்லி ஆவலாய்ப் பேசுகிறதும் இன்னரத்தில் தனக்குப் பிரியமான பாட்டுகளைப் பாடச்சொல்லித் தானும் வாய்க்குள் பாடிக்கொள்ளுகிறதுமாயிருந்தார்கள். ஏறக்குறைய ஒரு வாரத்திற்குப்பின் பிள்ளைகள் கிட்டப்போனால் சற்றுநேரம் கூர்மையாய் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு நல்லது போங்களம்மா, நான் சற்றுநேரம் தனிமையாயிருந்து இளைப்பாறவேண்டுமென்று சொல்லி முகத்தில் கைக்குட்டையைப் போட்டு மூடிக்கொள்வார்கள். பிள்ளைகளைப் பார்க்கிறதினால் உலகக் கவலையும் எண்ணமு முண்டாகுமென்று நோக்கமாய் அப்படிச் சொல்லுகிறார்களென்று நினைத்துக்கொண்டு அடிக்கடி அந்த அறைக்கு அவர்களுக்கு எதிரே போகிறதில்லை. ஒருதடவை நாங்களெல்லாரும் அவர்களைச் சுற்றி நின்றபோது எங்கள் கண்களில் கண்ணீர் ததும்பி நிற்கிறதைக் கண்டு, என்னைப் பார்த்து, ஏன் அம்மா அழுகிறாய், ஆண்டவர் உனக்கு யாதொரு குறையும் வைக்கவில்லையே யென்று சொல்லிவிட்டு, பக்கத்தில் நின்ற இரண்டு பெண்மக்களுக்கும் குழந்தைகளில்லாதபடியால் அவர்களைப்பற்றிமட்டும் கொஞ்சம் கவலைபோல் காண்பித்துவிட்டு தன் தலைமாட்டில் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்த விவாகஞ் செய்யாமலிருந்த தன் ஐந்தாவது மகளைப் பார்த்து, அதினிரு கைகளையும் பிடித்து தன் நெஞ்சில் வைத்துக்கொண்டு, இதுமட்டும் எனக்கு நன்மை செய்துவந்த கர்த்தர் இனிமேலும் அப்படியே செய்வாரென்று "எபேனேசர்" என்ற ஒரு பாட்டைச் சொல்லி,



"His love in tine past forbids me not to think
He will leave me in trouble to sink
Each sweet Ebenezer I have in view
Confirms his good pleasure to help me quite through."

கண்ணை மூடிச் சற்றுநேரம் ஜெபம்பண்ணி ஆண்டவர் கரத்தில் ஒப்புவித்து கையை விட்டார்கள். இந்தச் சமயத்தில் தன் மூத்த மகளையும், மருமகனையும், பட்டணத்தில் படித்துக்கொண்டிருந்த தன் கடைசி மகளையும் பார்க்க அதிக ஆவலாயிருந்தார்கள். கடைசி மருமகன் வந்தபின் அநேக காரியங்கள் ஒழுங்குபண்ணவேண்டுமென்ற நோக்கமிருந்ததாகக் காணப்பட்டது. தகப்பனார் வியாதியாயிருந்த காலத்திலெல்லாம் அவர்கள் பிள்ளைகளிருந்த இடங்களுக்கெல்லாம் தந்தியின் மூலமாய் சமாசாரங்கள் போய்க்கொண்டிருந்தது. தகப்பனார் சுகவீனமாயிருக்கும்போதே அவர்கள் வந்து பார்க்கும்படி கூடியவரை பிரயாசப்பட்டும் தேவசித்தமில்லாதபடியால் பல தடைகள் நேரிட்டு தடைப்பட்டுப்போனார்கள். கடைசிவரையில் அவர்கள் வரவில்லையென்று அறிந்து அதிக வருத்தப்பட்டார்கள். தகப்பனார் தன் கடைசிச் சமயத்தில் தன் பிள்ளைகளெல்லாரும் தன் சமீபத்திலிருக்க ஆசைப்பட்டார்கள். கடைசியாக அவர்கள் மரித்த 3 நாளைக்குப் பின்தான் வந்தார்கள். தகப்பனார் வியாதிப்படுக்கையிலிருந்த சமயத்தில் அவர்கள் மூத்த சகோதரியின் மகள் தன் மாமனைப் பார்க்கவந்து தலைமாட்டில் நின்றுகொண்டு ஒருவரும் நினையாதவிதமாய் இவருக்கு இந்த வியாதி வந்திருக்கிறதே என்று அழுதுகொண்டிருந்த சத்தம் கேட்டு, அது யாரென்று விசாரித்து இன்னாரென் றறிந்தவுடனே பரிதாபத்தோடு தன் கிட்டக் கூப்பிட்டு "அம்மா," நீ மாமாவீட்டில் எல்லாப் பாக்கியமு மிருக்கிறது ஒரு குறையுமில்லை. நான்தான் கஷ்டப்படுகிறேனென்று நினைத்திருப்பாய். நாம் ஆண்டவர் துன்பத்தை எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்திருக்கிறார் என்று சொல்லி ஆறுதல் படுத்தினார்கள்.

பின்னும் தகப்பனார் பேசக்கூடாமல் வருத்தமாயிருந்த ஒரு சமயத்தில் சபையிலுள்ள ஒரு உணர்வுள்ள இயின் தவன் வந்து கால்மாட்டில் நின்றுகொண்டு ஐயா, "நாங்கள் விசுவாசத்தோடு தங்களுக்காக ஜெபம்பண்ணுகிறோம், தங்களுக்கு சீக்கிரம் சுகமாகும்" என்று சொன்னார். அப்போது அவர்களுக்கு பேச முடியாமலிருந்தபடியால் ஒரு சிலேட்டைக் கேட்டு வாங்கி அதில் "நான் போகிறது எனக்கு லாபம், ஆனால் என் குடும்பத்திற்கும் சபைக்கும் நஷ்டம்" என்று எழுதி வாசிக்கக் கொடுத்தார்கள். ஆ! அது மெய்யாய் முடிந்தது. எங்களுடைய தகப்பனாரை நாங்கள் இழந்தது கொஞ்ச நஷ்டமோ, எங்களுக்கு மகிமையும் கிரீடமுமாயிருந்தவர்கள் போய்விடுகிறது எங்களுக்குப் பெரிய நஷ்டமே. அவர்கள் சபைக்கும் நிச்சயமாகவே நஷ்டம். அவர்கள் மரித்து வெகு சொற்ப நாட்களுக்குள் வாலைக்குளம் உள்ளூரிலே சபைகள் இரண்டுபட்டு அந்நிய மிஷன்கள் வந்து ஆலயமும் கட்டியிருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம். 30 வருஷம் இரவும் பகலுமாய் அவர்களுக்காகப் பிரயாசப்பட்டு தன் சரீரத்தை சாருய்ப் பிழிந்து இவ்விதமாய் இழுத்துக்கொண்டு வாப்பட்ட ஆத்துமாக்கள் இப்படி மாறிப்போனதை உயிரோடிருந்து கண்டிருப்பார்களானால் அவர்கள் இருதயம் எவ்வளவாக வேதனைப்பட்டிருக்கும்? அந்த மனவருத்தம் நேரிடாதபடிதான் ஆண்டவர் அவர்களை இங்கு நாட்களுக்குமுன் எடுத்துக்கொண்டார். பின்னும் சபையாரைத் தன் சொந்தப் பிள்ளைகள்போல் நேசித்து அவர்களுக்கு வந்த துன்பம் நஷ்டம் தனக்கு வந்ததாகவும் எண்ணி தனக்கு என்ன கஷ்டம் நஷ்டம் நேரிட்டாலும் அவர்களுக்காகப் பிரயாசப்படுத்து உதவி செய்வார்கள். உதாரணமாக, அவர்களிருந்த இடத்துக்கு ஒன்றரை மைலுக்கப்பாலிருந்த ஒரு கட்டுக் குத்தகைதார் தன் சொந்த இனத்திலுள்ள இரண்டுபேருக்கு அநியாயம் செய்து அவர்கள் நிலத்தையும் பிடுங்கிக்கொண்டு அவர்களை ஆதரவின்றி விட்டுவிட்டார். அவர்கள் இந்தான்



சமயமென்று மார்க்கத்திற்கு வந்து தங்களுடைய கஷ்டத்தில் உதவிசெய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டார்கள். தகப்பனார் அவர்களுக்குச் செய்த உதவியும் பட்ட கஷ்டமு மதிகம். அவர்கள் சிலகாலம் நிலைத்து கிறிஸ்து மார்க்கத்தின் சாரத்தையும், சத்தியத்தையும் அறிந்திருந்தும், கடைசியில் தாங்கள் ஒரு பெரிய குடும்பமாயிருந்தபடியினாலும், தங்கள் வீட்டிலுள்ள பெண்களுக்குச் சம்பந்தவிஷயமாய் ஒருவழியும் காணப்படாதபடியாலும், அந்த ஜமீன்தாரே இவர்கள் மார்க்கத்தை விட்டுவிட்டால் பழையபடி அவர்களுக்கு அந்தச் சொத்தைக் கொடுத்து நன்மை செய்வோமென்று வாக்குக்குக் கொடுத்தபடியாலும் தங்கள் கஷ்டத்தைச் சொல்லிவிட்டுப் போய்ச் சிலகாலமிருந்து சகலத்தையும் கைப்பற்றிக்கொண்டு திரும்ப வந்துவிடலாமென்ற எண்ணத்தோடு மறுதலித்துப் போனார்கள். அப்படிப் போயும் தகப்பனாரை அடிக்கடி வந்து கண்டுகொள்வார்கள். அப்படியே அவர்களிலொருவர் தகப்பனார் வியாதியாயிருந்த சமயத்தில் பார்க்க வந்து தகப்பனாரைப் பார்த்து அதிக விசனப்பட்டபோது தகப்பனார் அவரிடத்தில் ஆண்டவர் என்னைப் புடத்தில் வைத்திருக்கிறார். பின்பு நான் பொன்னாய் விளங்குவேன். ஆனால் நான் உங்களுக்கு எவ்வளவோ புத்தி சொல்லிப் போதித்துப் பிரயாசப்பட்டும் விருதாவாய்ப் போய்விட்டது. நீங்கள் சாவியாய்ப் போனீர்கள் என்று மூன்றுதரம் கையை விரித்துப் பரிதாபமாய்ச் சொன்னார்கள். அவர்களைச் சேர்ந்த ஒருவர் தகப்பனாரிடம் வந்து "ஐயா, இது தங்களுக்கு வரவேண்டிய வியாதியல்லவே" என்க, அப்படிச் சொல்லாதேயும் நான் உங்களைப்போல் பாவிதான் என்று சொன்னார்கள். அந்த மனுஷன் பார்த்துக்கொண்டே நின்று சற்றுநேரத்திற்குள் மனவருத்தத்தால் திடீரென்று மயக்கம்போல் கண்டு கீழே விழுந்துவிட்டார். இது சத்தம் கேட்டு நான் தகப்பனாராக்கும் என்று கலங்கி ஓடிப்போய்ப் பார்த்து அந்த மனுஷனென்றறிந்தபின் பக்கத்தில் நின்ற

வர்கள் தண்ணீர் தெளித்து அவர் களேயை ஆற்றினார்
கள். முன்சொன்ன ஜபீனைச் சேர்ந்தவர்களி லிருவருக்கு
இன்னம் மார்க்கத்தைப்பற்றிய பயபக்தியான எண்ணம்
மனசிலிருந்தும் உலகத்திற்குப் பயந்து இனத்தாரோடு
சேர்ந்திருக்கிறதாகத் தோன்றுகிறது. சில நாளைக்குமுன்
அவர்களிலொருவர் தகப்பனாரைப்பற்றி வெகுநேரம்
என்னுடன் பேசிக்கொண்டிருக்கிறபோது தகப்பனார்
சொன்ன புத்திமதிகள், பிரசங்கங்கள், அவர்கள் நடக்
கைகளெல்லாம் தன்முன் படம்போலிருக்கிறதென்றும்,
தான் இந்துக்கள் பக்தியிலிருந்தபோதிலும் அவர்களு
டைய சடங்காசாரங்கள், பூஜைகள் முதலியவைகளுக்கு
விலகி அந்தரங்க கிறிஸ்தவனைப்போ லிருக்கிறதாகச்
சொல்லி அவர் மரித்திராவிட்டால் இதற்குள் எப்படி
யும் மறுபடியும் வந்திருப்போமென்று வருத்தப்பட்டுக்
கொண்டு போனார். இன்னொரு நாள் தகப்பனார் வியாதி
காலத்தில் அவரால் குணப்பட்ட ஒரு சபையான் சமீ
பத்தில் நின்று அவர்களைப் பார்த்துக் கண்ணீர் விட்ட
போது அவனைப் பார்த்து, "நீ துக்கப்படவேண்டாம்,
உன்னை நான் ஆதாயப்படுத்திக்கொண்டேன். நான்
போனாலும் ஆண்டவர் உன்னோடிருக்கிறார்" என்றார்
கள். அவர்கள் படுக்கையிலிருந்த அந்த ஒன்றரை
மாசமும் அவர்கள் விரும்பினதுபோல ஆண்டவர் அவர்
களுக்கு ஆச்சரியமான பொறுமையைக் கட்டளையிட்
டார். சில வேளைகளில் வருத்தம் சகிக்கமாட்டாமல்,
உயரப் பார்த்து "ஆண்டவரே, உம்முடைய சித்தம்"
என்றும், ஆண்டவர் என்னை நல்ல தங்கமாக்கும்படி
புடத்தில் வைத்திருக்கிறார் என்றும் சொல்வார்கள்.
அவர்களுக்கு இவ்வளவு வருத்தமிருந்தும், ஒருநாளா
வது முறுமுறுப்பான முகத்தை நாங்கள் பார்த்ததில்லை.
அதிகமாய் தன் வருத்தத்தை முதலாய் எங்களுக்குக்
காண்பிக்கவுமில்லை. அப்படிப்பட்ட சமயங்களில்,

எருசலேம் என் ஆலயம், ழி.
சாகாத தூயர் வாழ்ந்தாரும், ழி.
பாதை காட்டும் மாயெகோவா, ழி.



என்ற பாட்டுகள்தான் அவர்கள் வாயிலிருக்கும். அவர்
கள் வியாதிப்படுக்கையிலிருந்த காலமெல்லாம் அவர்
களின் ஒரு சகோதரனின் மருமகன் அங்கே போர்டிங்
ஸ்கூலில் வேலையாயிருந்தவர்தான் இரவும் பகலுமாய்
தகப்பனாருக்கு அதிகமாய் உதவி செய்தார். அவர்
களும் பிள்ளையைப்போல் அவரை நேசித்து வந்தார்கள்.
தாயும் அவர்கள்பேரிலுள்ள பிரியத்தினால் தன் சகோ
ஊழியத்தை அவர்களுக்கு நன்றாய்ச் செய்து தன்
மனதில் கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தினார்.
எப்போதும் அவர் பக்கத்திலிருந்து வேதவசனத்தி
லுள்ள அருமையான வாக்குத்தத்தங்களில் தகப்பனார்
குறித்துச்சொல்லும் பாகங்களை எடுத்து வாசிக்கிறதும்,
கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்கிற நாட்களாயிருந்த
படியால் அதற்கேற்ற நல்ல பாடல்களைப் பாடுகிறதும்,
அடிக்கடி ஜெபம் பண்ணுகிறதுமாயிருந்தது. அவர்கள்
நோயின் வருத்தம் தெரியாதபடி அந்த அறையில்
அடிக்கடி பாட்டின் சத்தம் கேட்டவண்ணமாயிருக்
கும். மரிக்கும் அன்று காலைகூட யோவான் சுவிசேஷம்
17-ம் அதிகாரத்தை வாசித்து, ஜெபம்பண்ணச் சொல்
லிக் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் பிழைத்துக்
கொள்ளமாட்டார்களாவென்று இரவும் பகலுமாய் அவர்
பட்ட பிரயாசத்திற்குத் தகப்பனார்மட்டும் பிழைத்துக்
கொண்டால் அந்த அன்பை லேசில் மறக்கமாட்டார்கள்.
அவர்களுடைய அன்புக்குத் திருஷ்டாந்தமாக, அவர்
கள் மரிக்கிற அன்று பிற்பகல் எல்லாருக்கும் அவர்
கள் பிழைப்பார்கள் என்ற நம்பிக்கை அற்றுப்போ
யிற்று. ஐயோ, அந்தநாளை நினைக்க முடியவில்லை. அந்த
நாள் கலக்கமும் மந்தாரமுமுள்ள நாளாய்போயிருந்தது.
ஒரு பிள்ளை தான் பட்டபாடெல்லாம் வீணாய்போயிற்
றென்றும், இந்த அருமையான உயிரை இழக்கப்போகி
றோமே என்றும் நினைத்ததினால் உடனே திகைப்பு கொண்டு
அதிக அவஸ்தைப்பட்டதோடுகூட அவர்கள் மரித்தும்
ஒருவாரமாய் இவருக்குப் புத்தி சுவாதீனமில்லாமல்
மனம் கலங்கிக்கொண்டிருந்தார். எங்களுக்கு அதுவும்

ஒரு பெரிய கவலையாயிருந்தது. இவைகளெல்லாம் பொறுத்து தேவகிருபையால் சுகப்பட்டார். தகப்பனாரும் கடைசிச் சமயத்தில் சமீபமானவர்களிலிருந்த இரண்டு குருமாரும் சில உத்தியோகஸ்தரும் வந்தார்கள். அவர்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் விசாரித்தபோது, சந்தோஷமாயும் அமைதலாயும் மறுமொழி சொன்னார்கள். பின்னும் அந்தச் சமயத்திற்கேற்ற சில வேதவாக்கியங்கள், அதாவது, யோவா. 14. 1-4 வரை, சங். 23. 4. யோவா. 11. 25. இப்படிப்பட்ட ஆறுதலான வசனங்களை வாசித்து ஆண்டவரிடம் ஒப்புவித்தார்கள். அதுவரையும் அவர்களிடத்தில் வீட்டுக் காரியங்களைப்பற்றியாவது குடும்ப விஷயங்களைப்பற்றியாவது தாயாராவது மற்றவர்களாவது கலந்து பேசிக்கொள்ளவில்லை. இந்தச் சமயத்தில் உலக எண்ணங்களினால் அவர்கள் மனதைக் கலங்கப்பண்ணக்கூடாதென்றும், முன்னமே அவர்களுக்காகப் பண்ணப்பட்ட ஜெபங்களை ஆண்டவர் கேட்டு சுகம் கொடுப்பாரென்ற விசேஷித்த நம்பிக்கையினாலுமே கேளாமல் விட்டுவிட்டார்கள். கடைசியாய் குடும்பத்தைப் பற்றி அவர்கள் மனதில் சற்றுக் கவலையிருக்கிறதென்று இளையமகன் அறிந்து கிட்டப்போய், "அப்பா, நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம், ஆண்டவர் எங்களைப் பார்த்துக்கொள்வாரென்று கண்ணீரோடு சொன்னபோது, ஆம் என் மகனே என்று இரண்டுதரம் சொன்னார்கள். அதன்பின் தாயாரும் கிட்டப்போய் அவர்களுக்குத் தைரியமுண்டாகும்படி நீங்கள் எங்களைக் குறித்துக் கவலைப்படவேண்டாம், சந்தோஷமாய் ஆண்டவரிடம் "போங்கள், கர்த்தர் எங்களைப் பார்த்துக்கொள்வார்; நீங்கள் முந்திப்போனால் நாங்கள் பிந்தி வருவோம் என்று சொன்னபோது, சந்தோஷமாய் "அப்படியா" என்று இரண்டுதரம் சொல்லி, "இவ்வளவு தைரியம் உனக்கிருக்கிறதா" என்று சொன்னார்கள். பின்பு அரைமணி நேரத்திற்குள் தன் காலை நேரே நீட்டித் தன் கைகளையும் குவித்துக்கொண்டு, "ஏசையா, இயேசு சுவாமி" என்று சொல்லி வெப்பிரல



22உ அதிகாலை 3 மணிக்கு தன் ஆவியைத் தன்னை மீட்ட இரட்சகரிடம் ஒப்புவித்தார்கள். ஆ! எங்களுக்குக் கனமும் மகிமையுமாயிருந்த அருமையான எங்கள் பிதாவை இழந்த அந்த நாள் எங்களுக்கு எப்படியிருந்ததென்று இப்போதுகூட என்னால் எழுத முடியவில்லை. வருஷம் பத்தாயிற்று. ஆனால் நேற்று நடந்ததுபோல அந்தக் காட்சி என் கண்முன் நின்று என்னைக் கலங்கப்பண்ணுகிறது. அவர்களுடைய அருமையான தேகத்தை மறுநாள் சாயந்தரம் வீட்டுக்குச் சமீபத்தில் 7 வருஷத்திற்குமுன் இறந்துபோன அவர்கள் கடைசி மகளை வைத்திருந்த இடத்திற்குச் சமீபத்தில் வைக்கும்படி நேர்த்தியான பெட்டியில் வைத்து ஆலயத்திற்குக் கொண்டுபோய் மரித்தோரின் ஜெப ஒழுங்கை வாசித்து முடித்தபின் கடைசி எக்காளம் தொனிக்கும் காலம் வரை அவர்களுக்காகப் புதிதாய்க் கட்டின மண்ணறையில் வைத்துவிட்டு வந்தோம். கணக்கில்லாத ஜனங்கள் ஆண்களும், பெண்களும் கூடி வந்து புலம்பினார்கள். ஆனால் அவர்கள் தங்கள் பிரயாசத்தை விட்டு இளைப்பாறுகிறார்கள்.

அடுத்தநாள் இரக்ஷகர் மரித்த பெரிய வெள்ளிக்கிழமையானதால் பூலோகத் தகப்பனை இழக்கக் கொடுத்த நாங்கள் பரலோக நாதனின் மரணநாளை நினைத்து அவரையும் இந்த விதமாய் நேசிக்கிறோமாவென்று எங்கள் விசுவாசத்தைச் சோதிக்கத்தான் இந்தச் சமயம் அவர்களை எடுத்தாரோவென்று எங்களுக்குத் தெரியவில்லை. அவருடைய ஞானம் எங்களுக்கு மறைவாயிருக்கிறது. இவ்வித துக்கத்தில் அமிழ்ந்தியிருந்த எங்களை எங்கள் தாயார் விசுவாசமுள்ளவர்களானதினால் அந்த நாளில் பிள்ளைகள் கட்டாயம் ஆலயத்திற்குப் போகவேண்டுமென்றும், அதின் மூலமாய் ஆறுதலடையலாமென்றும், வீட்டுக்குச் சமீபத்திலிருக்கிற ஆலயத்திற்கு நாம் போகாவிட்டால் அவர் சித்தத்திற்கு எதிர்த்து நிற்பதுபோலாகிறதென்றும் கண்டிப்புச் செய்தார்கள். பிள்ளைகள் ஒருவருக்கும் மனமில்லை. எப்படி மனம் வரும்?

பொற்பத்தின்மேல் நின்று அருமையான வாளைத் திறந்து மனதை உருக்கத்தக்கவிதமாய்ப் போதிக்கும் அருமைத் தகப்பனாரின் முகம் காணப்படவில்லையே. அவர்களுடைய மரணம் சொந்தப் பிள்ளைகளுக்கும் இனஜனத்திற்குமட்டுமா வருத்தம்? மூலைக்கு மூலைக் கூட்டங் கூட்டமாய் ஜனங்களும் மிஷன் ஆசாமிகளும் வந்து "எங்கள் தகப்பன் எங்கே? எங்களுக்கு நல்ல வழியைக் காண்பிக்க எங்கள் பிதாவைக் காணவில்லையே" யென்று அவர்களும் அங்கலாய்த்தார்கள். இதினால் எங்கள் துக்கமும் அதிகரித்தது. கூட்டங் கூட்டமாய்க் கல்லறையினிடத்திலும், சில சபையார் அதிகாலையில் வீடுகளிலிருந்தும் தகப்பனாரை நினைத்து அழுகிற சத்தம் எங்களுக்குத் தாங்கக்கூடாத துக்கத்தையுண்டாக்கிற்று. அந்தப் பெரிய சபையில் இந்துமார்க்கத்திலிருந்து குணப்பட்ட பல ஜாதிகளுண்டு. வேளாளர், நாய்க்கன்மார், செட்டிகள் முதலியவர்களும் மற்றும் பல ஜாதிகளும் மார்க்கத்திற்கு வந்திருந்தார்கள். தகப்பனாரிடத்தில் காணப்பட்ட அநேக விசேஷித்த நற்குணங்களைக் கவனித்த இந்துக்கள்கூட அவர்களைப் பற்றி விசேஷித்த அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள். அதற்குத் திருஷ்டாந்தமாக, அவர்கள் மரித்த 3 நாளைக்குப்பின் 20 மைலுக்கப்பாலிருந்து சிலர் அவர்கள் மரித்தும் அடக்கம்பண்ணப்படாமல் அப்படியே ஆவியாய் பரத்திற்குப் போய்விட்டார்களென்ற நப்பான பேச்சைக் கேள்விப்பட்டு அதின் உண்மையை அறிந்துபோக வந்து மற்றவர்கள் உண்மை சொல்லியும் நம்பாமல் கல்லறையைப் பார்த்தபின் நம்பிக்கொண்டுபோனார்கள். இந்தவிதமாய் இத்தனை ஆயிரம் ஜனங்களையும் ஒரே தகப்பன் பிள்ளைகளைப்போல் ஆதரித்து அரவணைத்து அவரவர்க்கேற்றவிதமாய் நயமாயும் பயமாயும் புத்தி சொல்லி அவர்களிருதயத்தைக் கவர்ந்துகொண்டார்கள். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல, உயர்குல இந்துக்கள், ஜமீன்கள், உத்தியோகஸ்தர்களுங்கூட அவர்களை நேசித்து மதித்துவந்தார்கள். கிறிஸ்தவர்களான குடிகளை உபத்



திரவப்படுத்தினதையிட்டு சிலகாலம் தகப்பனாருக்குச் சத்துருவைப்போலிருந்த ஒரு கட்டுக் குத்தகைதாருங்கூட அவருடைய கடைசிக்காலத்தில் தகப்பனாரை நேசித்து இவர்கள் வீட்டுக்கு வரவும் தன் வண்டியைத் தகப்பனாருக்கு அனுப்பி அவர்களைத் தன் வீட்டுக்கு வரவழைத்து இவ்விதமாய்த் தன் அன்பைக் காண்பித்தார். ஒருசமயத்தில் இவர் தன் மக்களை எங்கள் தகப்பனாரிடம் பேசவாவது அவர்களுடைய வீட்டுக்குப் போகவாவது கூடாதென்று விலக்கியிருந்தும், அவருடைய மக்கள் அடிக்கடி தகப்பனாரிடம் வந்துபோய் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட வேதாகமப் பங்குகளை வாசிக்கிறதுமாயிருந்தார்கள். இப்படி அவர் விரோதமாயிருந்த ஒரு சமயத்தில், தகப்பனார் கிறிஸ்தவர்களுக்கு அதிக உதவிசெய்து தனக்கு நஷ்டமுண்டாக்குகிறாரென்ற விரோதத்தால் தகப்பனாருடைய உயிருக்கு முதலாய் மோசஞ்செய்ய எண்ணங்கொண்டிருந்ததாகவும் அதோடு அவர்களைப் புலியென்று அழைத்ததாகவும் கேள்விப்பட்டோம். ஆண்டவருக்கு விரோதியானவனுக்கு இவர்கள் புலியாகவும், அவருடைய ஜனங்களுக்கோ தகப்பனாராகவும் எண்ணப்பட்டார்கள். இதற்கெல்லாம் பயப்படாமல் ஒருதடவை அவர் வீட்டுக்குப் போய்ப் போதித்தும்வந்தார்கள். இவர்கள் விஷயத்தில் அடிக்கடி அவர்கள் வாயிலிருக்கும் வசனமென்னவென்றால் "ஒருவனுடைய வழிகள்மேல் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் அவனுடைய சத்துருவையும் அவனோடே சமாதானமாக்குவார்." அப்படியே அவர் தன்னுடைய கடைசிக் காலம்வரை தகப்பனாருடன் அதிக இஷ்டமாயிருந்து மரித்தார்.

தகப்பனாருடைய வியாதி சமயத்தில் அவர்களுக்காகப் பண்ணப்பட்ட ஜெபம் கொஞ்சமல்ல. ஒருவரிருவரல்ல, தென் திருநெல்வேலி, வட திருநெல்வேலி மட்டுமல்ல, வடதேசம் தெலுங்கு தேசத்திலுங்கூட அவர்களுக்காக முக்கியமான ஜெபக்கூட்டங்கள் வைத்து ஜெபம் செய்தார்கள். ஆனால் இந்தவிஷயத்

தில் தேவன் தமது செவியை அடைத்துக்கொண்டவர் போலிருந்தார். தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். தேவரீர் செய்ய நினைத்தது தடைபடக் கூடாதென்பதை யறிவேன் (யோபு. 42. 2.). அவருடைய ஞானம் நம்முடைய அற்பப்புத்திக்கு விளங்கவில்லை. நம்முடைய சிற்றறிவுக்கு வருத்தமாயிருந்தாலும் அவருடைய பிள்ளைகளுக்கு நன்மை இன்னதென்பது அவருக்குத் தெரியும். "தீங்கு நாட்கள் வாராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறான்" (ஏசா. 57. 1.). "கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுகிறார்கள், அவர்கள் கிரியைகளும் அவர்களோடேகூடப் போமென்று" வெளி 13. 14-ல் சொல்லியபடி தகப்பனார் அந்தக் காட்டிலிருந்து தன் சுகத்தையும், கனத்தையும், தன் குடும்பத்தின் நன்மையையும் பிள்ளைகளுடைய படிப்புகளுக்கேற்ற பிரயோஜனத்தையும் பெரிதாக எண்ணாமல் மற்றவர்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அந்தச் சிறு ஊரிலிருந்துகொண்டு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும்படி. அவர்கள் பட்ட பிரயாசத்தின் பலனை அநுபவிக்கும்படி குறித்தகாலத்தில் அவர்களை அழைத்துக்கொள்ளும்படி ஆண்டவர் சித்தமானார். மரித்தோர் உயிர்த்தெழும்புங்காலத்தில் இவர்கள் மகிமையாய் எழுப்பப்பட்டு அவர்களால் குணப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் அவர்கள் தலையில் வைக்கப்படும் ஜீவகிரீடத்தில் பிரகாசிக்கிற நட்சத்திரங்களைப்போல் ஜொலிப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இந்தவிதமான ஆறுதலே எங்களைத் தேற்றுகிறது. அவர்களுடைய மரண செய்தியைக் கேட்டபோது இனத்தார்களிடமிருந்தும், சிநேகிதர்களிடமிருந்தும் வந்த துக்கக் கடிதங்கள் கொஞ்சமல்ல. அவைகளில் முக்கியமானவைகளை அச்சிற் போட்டிருக்கிறபடியால் அதின் மூலமாய் அறிந்துகொள்ளலாம். அவர்கள் வியாதிப்படுக்கையில் விழ ஒருவாரத்திற்கு முன் கலெக்டர் லிவனர் தகப்பனாருடைய சிறந்த குணமாகிய அன்பி



காந்தத்தா விழுக்கப்பட்டு அவர்கள் வீட்டிற்கு வந்து சந்தோஷமாய்த் தன் ஊருக்குத் திரும்பிப்போன சில நாளைக்குள் அவர்கள் மரித்துப்போனார்கள் என்கிற செய்தியைத் திடீரென்று கேட்டவுடனே திகைத்துச் சற்றுநேரம் ஒன்றும் பேசாமலிருந்து நான் இதை நம்ப முடியாது. இப்போதுதானே நான் அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன், நன்றாயிருந்தாரே என்று புலம்பினார். பின்பு அவருக்கும் போயிருந்த துக்க கடிதத்தை வாசித்தபின்தான் நிச்சயத்தை யறிந்து என் சகோதரனுக்கு எழுதிய காகிதத்தில் உமது தகப்பனார் சுகவீனமாயிருந்ததுகூடத் தெரியாதே, இவ்வளவு ஜலதியில் போய்விட்டாரே என்று துக்கத்துடனே பதிலனுப்பினார். சுவாமியின் நாமம் மகிமைப்படும்படியாக அந்த இடத்தில் வறக்குறைய 30 வருஷம் உழைத்த அருமைத் தகப்பனார் கடைசிவரையும் தன் புத்தி போதனைகளை மட்டுமல்ல, தன் சரீரத்தையுங்கூட அந்தச் சபையாருக்குச் சாட்சியாக ஒப்புக்கொடுத்து 1886-ஞ் ஏப்பிரல்மீ 22உ 59 வயதுள்ளவர்களாய்க் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார்கள்.

அவர்கள் மரித்தஉடனே தானேஅவர்கள் கல்லறைக்கு அஸ்திபாரமெல்லாம் கல்லால்கட்டி பெட்டியும் உடனே செய்துவைத்தார்கள். ஆனால் மேற்கோப்பு செய்து முடிக்கப்பட்டும் சிலகாலம் சென்றுவிட்டது. அந்த ஊர் ஜனங்கள் தங்களுடைய போதகருடைய கல்லறையைத் தங்கள் சொந்த செலவில் கட்டி முடிப்பதாக விரும்பிக் கேட்டாலும் பிள்ளைகளாகிய நாங்கள் அதற்கு முதல் பாத்தியஸ்தரா யிருக்கிறபடியினால் எங்களுடைய செலவாகவே யிருக்கவேண்டுமென்று விரும்பி அவர்கள் விருப்பத்திற்குச் சம்மதிக்கவில்லை. கல்லறையும் சிலகாலத்திற்கு முன்தான் கட்டி முடிக்கப்பட்டது.

அந்த இடம் காட்டுப்புறம்போல் காணப்பட்டாலும் அவ்விடத்திற்குப் போய்வருகிற மிஷனெரிகள், பிஷப் மார் இந்தக் கோவிலின் அழகையும் கீர்த்தியையும்

பார்த்து, அதைக் கட்டினவர்களைப்பற்றி அறிய விரும்புகிறபடியால் அவர்கள் நாமம் மறைபடாதபடி சந்ததிக்குள் அந்தக் கோவிலில் அவர்களுக்கு ஞாபகக் கல் பதிப்பதற்காக ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இதற்குச் சில சிநேகிதரும் இனத்தாரும் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மரித்த காலத்தில் அவர்களது இரண்டாவது மருமகனும் என் கணவருமாகிய அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருந்த அநாத பிள்ளைகளுடைய பள்ளிக்கூடம் கலைந்து போகாதபடி ஒரு பண்டு சேர்த்து அதை நிலைபெறச் செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். இதற்குள் அவர்கள் அதிக வியாதியாய்ப் படுக்கையில் விழும்படி நேரிட்டபடியினால் அவர்கள் எடுத்த காரியம் அச்சமயத்தில் கைகூடவில்லை.

ஆண்டவருக்குச் சித்தமானால் அதையும் சீக்கிரம் நடந்தேற தேவ சித்தத்தை முன்னிட்டுப் பிரயாசப்படுகிறோம்.

“பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும் பரலோகத்தில் தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்குண்டென்று அறிந்திருக்கிறோம்.”

இந்த உலகத்தில் நாம் மாடமாளிகை, கூடகோபுரங்களில் வசித்தாலும், பரலோகத்தில் நமக்குப் பங்கில்லாவிட்டால் நமக்கு என்ன பயன்?

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டென்று இயேசு சொன்னபடி அந்தப் பரம வாசஸ்தலத்திற்குமட்டும் நாம் பாத்திரவான்களாயிருக்கும்படி தேவன் கிருபைசெய்வாராக. நிலையுள்ள நகரம் நமக்கு இங்கே இல்லை. நாம் வசிக்கும் இவ்வீடு சத்திரம்போலிருக்கிறது. இந்த வனாந்தரமாகிய உலகத்தில் நாம் பிரயாணிகளாயிருக்கிறோம். நமக்குமுன் பிரயாணம் பண்ணிப் போயிருக்கிற நமது அருமையானவர்களுடைய காரியங்களைக் கவனித்து நாம் இந்த உலகத்தில்



எவ்விதமாய் ஜீவிக்கவேண்டுமென்றும், நாம் இருக்கும் இந்தக்காலத்தில் வெறுக்கவேண்டியதென்ன, தள்ளவேண்டியதென்னவென்றும், இந்த உலகத்தில் நாம் இருக்குமட்டும் ஆசிக்க நேசிக்க அடையவேண்டியது இன்னதென்றும் ஆராய்ந்து அதைக் கண்டுபிடிக்க இப்பொழுதே பிரயாசப்படுவோமாக. கடந்த காலங்கள் நமக்கு ஒரு சொப்பனம்போல் காணப்படுகிறதில்லையா? நமக்கு அருமையாயிருந்தவர்களோடு நாம் கூடிக் குலாவிப் பேசிச் சம்பாஷித்துச் சந்தோஷமாய்ப் பின்னிட்ட நாட்கள், நமக்கு மறுபடியும் இந்த உலகத்தில் கிடைக்கப்போகிறதா? அவைகளெல்லாம் நம்முடைய ஞாபகத்தை விட்டு முதலாய் மறந்துவிடப்படுகிறதில்லையா? இவைகளை நினைக்கும்போது நம்முடைய சந்தோஷத்திற்குக் குறைவு உண்டாகிறதில்லையா? இவைகளே நமக்கு இந்த உலகத்தைக் கசப்பாக்குகிற ஒரு விஷயமாயிருக்கிறது.

“பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுங்கள்” என்ற வேதவசனத்தின்படி நம்முடைய ஜீவியத்தின் சந்தோஷங்களை நாளுக்குநாள் மறந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட அவருடைய பிள்ளைகளுக்குச் சம்பாதித்து வைக்கப்பட்டிருக்கிற ஜீவகிரீடத்தை நாம் அடையும்படி நமக்கு முன்வைத்திருக்கிற பந்தயப்பொருளை நோக்கி நாமும் பொறுமையோடே முன்னேறிச் செல்வோமாக.

“நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்.” சங். 37. 37.

## 4. மற்றவர்கள் தகப்பனாரைப்பற்றிக் கொடுத்த சாட்சி.

இம்மட்டும் தகப்பனாரின் ஜீவியத்தையும், ஆண்டவருக்காக அவர்கள் செய்த ஊழியத்தையும்பற்றி எழுதிவந்தேன். அவர்களுடைய சிநேகிதரும், இனத்தாரும், அவர்களுடன் பழகின ஐரோப்பியரும் அவர்

களுடைய அருமையான குணாதிசயங்களையும் அவர்களுடைய வேலையைப்பற்றி விபரங்களில் காட்டியிருக்கிறதுமல்லாமல், சில சிநேகிதர் அவர்களுடைய ஜீவியத்தைப்பற்றி நான் எழுதிவருகிறதாகக் கேள்விப்பட்டு அவர்கள் அறிந்திருக்கிற சில முக்கிய குறிப்புகளை இப்போது எனக்கு எழுதியனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் அவர்களைப்பற்றிப் புகழ்ந்து எழுதுவதைவிட மற்றவர்களால் எழுதப்பட்டவை அநேகருக்கு நன்மை செய்யுமாதலால் அவைகளில் சிலவற்றை இங்கே சுருக்கிக் காட்டுகிறோம்.

இந்த ஜீவியத்தை எழுதத் துவக்கின காலத்தைக் கவனித்தால் இதற்கு ஒரு வருஷத்திற்கு முன்னமே எழுதி முடித்திருக்கவேண்டியது. ஆனால் பல அசந்தர்ப்பங்கள் நேரிட்டதாலும் இங்கிலீஷிலிருந்த பல விஷயங்களைத் தமிழில் மொழி பெயர்த்துச் சேர்க்கவேண்டியதாயிருந்தபடியாலும் முக்கியமாய் எங்களுடைய தகப்பனுக்கு நாங்கள் செய்யவேண்டிய இந்தக் கடமையை அவர்கள் காலஞ்சென்ற வருஷத்தில் ஆரம்பிக்கவேண்டியதிருந்தும் அப்படிச் செய்யாமல் அதிககாலம் ஆகிவிட்டபடியால் அநேக காரியங்களை ஞாபகப்படுத்தி ஒன்றாய்ச் சேர்க்கவேண்டியதிருந்தபடியாலும் இதுவரை தாமதப்பட்டது. இந்த ஜீவிய சரித்திரத்தை ஏற்கனவே துவக்கியிருந்தால் இதைவிட இரண்டு மடங்கு பெரிதாகவேயிருக்கும். எழுதாமலிருந்ததைவிட ஞாபகத்திலிருக்கிறவைகளை எழுதி அவர்கள் பிள்ளைகளாகிய எங்களுக்கும் வாசிக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும்படி சுருக்கமாய் எழுதத் துணிந்து ஆண்டவரை முன்னிட்டு இதை எழுதி முடித்தது.

1887-ம் வருஷம் சென்னை அத்தியட்சர் அவர்கள் வட திருநெல்வேலியிலுள்ள குருமாருக்கும், சபையாருக்கும் தகப்பனார் மரித்தபின் எழுதி யனுப்பினது. அதில் தகப்பனாரைக் குறித்து எழுதியிருந்த தென்னவென்றால், "[illegible] நான் வட திருநெல்வேலிக்கு



1886-ம் வருஷத்தின் துவக்கத்தில் வந்து திரும்பின சிறிது காலத்திற்குள்ளாக உங்களை விசாரித்து வந்த போதகராகிய கனம். வீ. வேதநாயகம் ஐயர் மரித்துப் போன சங்கதியைக் கேட்க எனக்கு அதிக விசனகரமாயிருந்தது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் இவருக்கிருந்த உண்மையான பேரன்பும் அவரது சேவகத்தில் இவர் காட்டிய ஊக்கமும் இவர் நடத்தையில் விளங்கின முக்கிய குறிப்புகள். இதினால்தான் இவர் ஜெபத்தில் அவாவுடையவராகவும், கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறதில் பிரீதிகொண்டவராயுமிருந்தார். இப்போதவர் தாம் நேசித்துவந்த இரட்சகரும் எஜமானுமானவரிடத்தில் சதாகாலமும் இருக்கும்படியாகப் போயிருக்கிறார்.

---

நீலகிரி.

1886-ஞு எப்பிரல்மீ 26உ.

**பிரியமுள்ள வேதநாயகம் அம்மாளவர்களுக்கு:—**

நம்முடைய பரமபிதா உங்கள் அருமைப் புருஷனுக்கு நல்ல சுகத்தை அளிக்கும்படி நான் ஜெபம் செய்து வந்தேன். ஆனால் தேவன் தம்முடைய அளவில்லாத அன்பிலும் ஞானத்திலும் அவரை எடுத்துக்கொள்ளச் சித்தங்கொண்டிருந்தாராக்கும். துன்பத்தையும் வருத்தத்தையும் அனுபவித்த அந்த ஆத்துமா நம்மைவிட்டுப் பிரிந்து தான் உண்மையாய் நேசித்து ஊழியஞ்செய்து மகிமைப்படுத்திவந்த தன்னுடைய இரட்சகரிடம் சேர்ந்திருக்கிறது.

அவருடைய அன்பான குணமும், மாயமற்ற தேவபக்தியும் எனக்கு அதிக சந்தோஷத்தை உண்டாக்கிற்று. அவரோடுகூட சிறிது நேரத்தைப் பின்னிடுவது எனக்கு எப்போதும் சந்தோஷமும் நன்மையுமாயிருந்தது.

பெப்ருவரிமாதம் நான் வாகைக்குளத்திற்கு வந்தது எனக்கு அதிக சந்தோஷம். வட திருநெல்வேலி முழுவதையும் அவரோடுகூடச் சுற்றிப்பார்க்க எனக்கு ஆசை

பிருந்தது. ஆனால் இதைவிட நல்ல ஊழியஞ் செய்யும்படி இரட்சகர் அவரை அழைத்துக்கொண்டார். அவருடைய பாடுகள் எல்லாம் ஒழிந்தது. நம்முடைய இரட்சகரிருக்கும் அந்த மோட்ச ராஜ்யத்திலே அவருடைய ஆவி பத்திரமாய் ஆனந்தத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிற தென்பதை நீங்கள் நினைக்கும்போது அது உங்களுக்கு சொல்லிமுடியாத ஆறுதலைக் கொடுக்கக்கூடியது.

உங்களுக்கும் உங்கள் வீட்டாரனைவருக்கும் பெரிய நஷ்டம். உங்களெல்லாரோடுங் நான் அதிக அநுதாபப் படுகிறேன். உங்களை ஆறுதல்படுத்த தேவனால்கூடும். அவர் ஆறுதல் அளிக்கவும் செய்வார். நாயீனூர் விதவையைப் பார்த்து அழாதே என்றுசொன்ன இரட்சகர் உங்களைப் பார்த்தும் அவ்வண்ணமாய்ச் சொல்லுகிறார். தகப்பனற்ற பிள்ளைக்கு நான் தகப்பனா யிருப்பேனென்றும் அவர் வாக்களித்திருக்கிறார். இந்தக் கொடிய துன்ப காலத்தில் நீங்களெல்லாரும் தேவனை நம்பி உங்களை விட்டுப் பிரிந்துபோன அருமையான சகோதரனுடைய போதனையையும், நன்மாதிரியையும் பின்பற்றி நம்முடைய ஆண்டவர் திரும்பவரும் அந்தப் பெரிய நாளிலே நீங்கள் அவரைக் கண்டு சந்தித்து, அவரோடுகூட நீங்களும் பரம ராஜ்யத்தைச் சுதந்தரித்து சதாகாலமும் தேவனோடு கூடவிருந்து வாழும் கிருபையை உங்கள் ஒவ்வொருவருக்கும் அளிப்பாராக.

உங்கள் வீட்டாரனைவரையும் நான் கேட்டுக்கொண்டதாகச் சொல்லுங்கள்.

இப்படிக்கு,

கிறிஸ்துவுக்குள் உங்கள் உண்மையுள்ள

F. MADRAS.

---

பிஷப் சார்ஜேன்ற் எழுதினது.

வாசைக்குளம் வேதநாயகம் ஐயருடைய மரண சங்கதியை இடைசென்று உம்முடைய காகிதத்தின் மூலமா



யறிந்து அதிக விசனப்பட்டேன். கன்னத்தில் ஒரு கட்டி புறப்பட்டு அதினால் சங்கடப்பட்டாரென்றுமாத்திரம் தெரியும். ஆனால் மரணம் உண்டாக்கக்கூடிய அவ்வளவு மோசமான நிலைமையிலிருந்தாரென்று நான் நினைக்கவேயில்லை. எனக்கு அவர் அன்பான சிநேகிதனும் தேவ ஊழியத்தில் அதிக உதவியாயுமிருந்ததினாலே அவருடைய மரணம் எனக்கு எவ்வளவு துயரத்தை உண்டாக்குகிறது என்று என்னால் சொல்லிமுடியாது. அவருடைய சகோதரனாகிய சனம்: வீரவாகு ஐயருடைய மரணமும், அதற்குப்பின் சமீபத்தில் இவருடைய மரணமும் திருநெல்வேலி சபைக்கு உண்டாக்கியிருக்கும் நஷ்டத்தை அதிகரிக்கச் செய்துவிட்டது.

இந்த இரண்டு உண்மையும் உத்தமமுள்ள தேவ ஊழியக்காரருக்குப் பதிலாக மற்ற ஆட்களை நியமிப்பது அதிக வருத்தமானகாரியம். தேவன் அரசாளுகிறார் என்றும், பிரிந்துபோன அருமையான சகோதரிருவரும் தாங்கள் காணாமலிருந்தும் அதிகமாய் நேசித்து ஊழியஞ்செய்துவந்த தங்கள் இரட்சகரோடு அந்த நல்ல லோகத்தில் அவருடைய சமூகத்திலே சந்தோஷத்தை அநுபவித்துக்கொண் டிருக்கிறார்கள் என்றும் நினைப்பது நமக்கு ஆறுதல்.

ஒரு குடும்பமாய் உங்களுக்கு நேரிட்டிருக்கும் இந்தப் பெரிய நஷ்டத்தில் உம்மோடும் உம்மைச்சேர்ந்த மற்றெல்லாரோடும் நான் அதிக அநுதாபப்படுகிறேன்.

இப்படிக்கு,

உம்முடைய உண்மையுள்ள

EDWARD SARGENT.

---

பிஷப் கால்ட்வெல் எழுதினது.

தனக்குக் குறிக்கப்பட்ட வேலையை விட்டு இடைசென்று நம்மை விட்டுப் பிரிந்துபோன உம்முடைய அருமைத் தகப்பனாருடைய மரண சங்கதியை அறிந்து நானும் சனம்: கால்ட்வெல் அம்மாளும் அதிக விசனப்பட்டோம்.

சென்னபட்டணம் கண்காணியாரைப் பார்க்கும்படியாய் சொற்பக் காலத்துக்குமுன் அவர் பாளையங்கோட்டைக்கு வந்திருக்கும்போது நான் அவரைப் பார்த்தேன். அவர் செய்த உணர்வும் வைராக்கியமுமான பிரசங்கம் கேட்ட யாவருக்கும் அதிக சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும்.

எல்லா நன்மைக்கும் ஊற்றாயிருக்கிற தேவன், உம்முடைய தகப்பனுக்குப் பதிலாக ஒரு தகுந்த தேவ ஊழியக்காரனை எழுப்புவாரென்று நம்புகிறோம். தேவன் தம்முடைய கருவிகளை மாற்றினாலும் தம்முடைய ஒழுங்கை ஒருபோதும் மாற்றமாட்டாரென்று அறிவோமாக.

நாங்கள் உங்களோடு அதிக அனுதாபப்படுகிறோமென்பதை உம்முடைய தாயாருக்கும் உம்முடைய வீட்டாராகிய மற்ற யாவருக்கும் தெரிவியும்.

இப்படிக்கு,

உம்முடைய உண்மையுள்ள

R. CALDWELL.

---

கனம்: மெடோஸ் ஐயர் தாயாருக்கு எழுதினது.

அன்புள்ள சகோதரியே!

உங்கள் அருமைப் புருஷர் மரித்துப்போன செய்தி காதுகளுக்கு இடிவிழுந்ததுபோலிருந்தது. அவர் மரணம் உங்களுக்கு சொல்லிமுடியாத துக்கமாமே! அதைப்பற்றி என்ன சொல்ல? உங்கள் துக்கத்தோடு நானும் கனம்: அம்மாளவர்களும் அதிகமாய்த் துக்கப்படுகிறோம். அவர் எனக்கு அருமைச் சகோதரன்போலிருந்தார். கூடப்பிறந்த என் சகோதரனைவிட அவரை நான் அதிகம் நேசித்ததாகச் சொல்லக்கூடும். விதவையான நீங்கள் தேவனால் கைவிடப்படமாட்டீர்கள். கர்த்தர் உங்களை ஆறுதல்படுத்துவாராக! நம்பிக்கையற்றவர்களைப்போல நாம் துக்கப்படுகிறவர்களல்ல.



உயிர்த்தெழுதலில் கர்த்தரைத் தரிசிக்கும்போது கணவனை மனைவியும், பெற்றோரைப் பிள்ளைகளும் முகமுகமாய்க் காண்போம் என்கிற நம்பிக்கை உண்டு.

அவர் நல்ல போராட்டத்தை முடித்தார். அவர் நல்ல வேலையைச் செய்தார். இப்போது இளைப்பாறுகிறார்.

கர்த்தர் உங்களை அழைக்கும்பரியந்தம் அவர்களுடைய மாதிரியைப் பின்தொடர்ந்து வரவேண்டும். கிறிஸ்துவை அவர் பின்பற்றினதுபோல நாம் அவரைப் பின்பற்றப் பிரயாசப்படவேண்டும். அவருடைய சகோதரி நல்லம்மாள் கைம்பெண்ணாயிருந்து கர்த்தருக்கென்று நல்லூழியஞ் செய்ததுபோல நீங்களும் செய்யப் பிரயாசப்படவேண்டும்.

தகப்பனற்ற பிள்ளைகளுக்கு புத்தியுள்ள தகப்பனைப் போலவும், அன்பான தாயாகவும் இருக்கப் பார்க்கவேண்டும். இத்துடன் ஆறுதலுள்ள ஒரு வேதக்கிரியம் அனுப்பியிருக்கிறேன்.

அம்மாளவர்கள் உங்களைக் காணக்கூடுமானால் உங்கள் கண்ணீரோடு தங்கள் கண்ணீரைக் கலப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. உங்களுக்கு அன்பான சலாஞ் சொல்லுகிறார்கள்.

உங்கள் அருமைப் புருஷனுடைய மரணத்தைப்பற்றிய விபரம் அறிய மிகவும் ஆசையாயிருக்கிறேன். மரித்த செய்திமாத்திரம் தெரியும். அவரோடு கூடவிருந்து அவர் சொல்லியிருக்கும் நம்பிக்கையின் வார்த்தைகளைக் கேட்ட நீங்களாவது உங்கள் பெண்மக்களாவது விபரம் எழுதி அறிவித்தால் எங்களுக்கு மெத்த சந்தோஷமாயிருக்கும்.

கர்த்தர் உங்களைக் கைவிடுவதில்லை.

இப்படிக்கு,

ஜோ. ர. மெடோஸ்.

## கேரன்ஸ் அம்மாள் காகிதம்.

**பிரியமுள்ள வேதநாயகம் அம்மாளுக்கு:—**

அம்மையநாயக்கன் ஊருக்கு நான் போய்ச் சேர்ந்தவுடனே என்னுடைய மேட்டி உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் நேரிட்டிருக்கிற துக்கமான சங்கதியை எனக்கு அறிவித்தபோது எனக்குண்டான துயரத்தினால் திகில் பிடித்தவள்போலிருந்தேன். அதைக் கேட்டவுடனே அதை நம்பக்கூடாமற் போச்சுது. போன சனிக்கிழமைதான் நான் கனம். செல் ஐயரவர்களிடத்தில் அவரைப்பற்றி விசாரித்தேன். அவரைப்பற்றிக் கடைசியாய் என்ன செய்தி வந்ததென்று கேட்டபோது, உங்கள் அருமைப் புருஷனுடைய மரணசங்கதி அதுவரைக்கும் அவர்களுக்குத் தெரியாததினால் அவர்களால் ஒன்றும் சொல்லக் கூடாமற்போச்சுது. இன்று காலை நான் கொடைக்கானல் போய்ச் சேர்ந்தவுடனே என்னுடைய மேட்டி அறிவித்த துக்கமான சங்கதி உண்மையென்று உங்கள் மருமகன் எனக்கெழுதிய கடிதத்தினால் உறுதிப்பட்டது.

உங்களுக்கு என்ன ஆறுதல் வார்த்தை எழுதுகிறதென்று தெரியாததினால் எழுதுகிறதற்கு என் கைகூடவில்லை.

கசப்பான பாத்திரம் நமக்குக் கொடுக்கப்படும்போது நாம் யாரிடத்திற்குப் போகவேண்டியது என்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியும். இதேமாதிரியான கசப்பான பாத்திரத்தை நானும் ருசிபார்த்திருக்கிறபடியால் நான் உங்களோடு அதிக அனுதாபப்படுகிறேன்.

உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் நம்முடைய பரம தகப்பன் ஆறுதல்படுத்துவாராக! எமைப்பிள்ளை மேரிக்கும், தாய்க்கும் என் அன்பைத் தெரிவித்து சீக்கி… அவர்களுக்குக் கடிதம் எழுதுவேன் என்று ெ…ங்கள்.



சென்னபட்டணத்திலிருந்து இவ்விடம் வந்து சேருமட்டும் பிரயாண சங்கடங்களினால் நான் அதிகம் களைத்துப்போயிருந்தாலும் சில வரிகளாவது நான் உங்களுக்கு எழுதாமல் இளைப்பாறமாட்டேன். விவாகம் செய்யப்பட்டிருக்கிற மற்றப் பெண்மக்களும் இன்னும் வாலைக்குளத்தில்தானிருக்கிறார்களென்று நினைக்கிறேன். இந்த விஷயத்தில் அவர்களோடும் நான் அதிகமாய் அனுதாபப்படுகிறேன் என்று சொல்லுங்கள்.

வேதநாயகம் ஐயருடைய மரணத்தைப்பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. மேரி எனக்கெழுதின கடைசிக் காகிதத்தில் தகப்பனுக்கு சுகமாகிக்கொண்டு வருகிறதென்றெழுதியிருந்தாள். இவ்வளவு சீக்கிரத்தில் அவருக்கு மரணம் எப்படி சம்பவித்ததோ தெரியவில்லை. ஒருவேளை மேரி தன்னுடைய தகப்பனாரின் அந்திய நேரத்தைப்பற்றி பின்னாலே விபரமாய் எழுதுவாள் என்று நினைக்கிறேன்.

தேவன் அவருக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டிருக்கிறார். எவ்வளவு சீக்கிரத்தில் தன்னுடைய தமையனைப் பின்சென்று போய்விட்டார். அவர்களிருவரும் நேசித்து ஊழியஞ்செய்துவந்த தேவனுடைய சிங்காசனத்தின்முன் எவ்வளவாய் ஆனந்தங் கொண்டாடுவார்கள். நீங்கள் இதை நினைத்து ஆறுதலாயிருங்கள்.

இப்படிக்கு,

உங்களின் பட்சமுள்ள

HANNAH E. KERNS.

---

## தோமாஸ் அம்மாள் காகிதம்.

பத்துநாட்களுக்கு முன் உம்முடைய அருமைத் தகப்பனார் இறந்துபோன சங்கதியைக் கேட்டு அதிகத் துக்கப்பட்டோம். நானும் என்னுடைய மகனும், உம்முடைய தாயாருக்கும் மற்றும் உம்முடைய வீட்டார் யாவருக்கும் நேரிட்டிருக்கும் இந்தப் பெரிய துக்கத்தில் உங்களெல்லாரோடும் அதிக அனுதாபப்படுகிறோம்.

தாரகமற்றவர்களுக்கு தாரகமாகவும், தகப்பனற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனாகவும் இருக்கிற தேவன் உங்களெல்லாருக்கும் ஆறுதலளித்து தம்முடைய அருமையான ஊழியக்காரனைத் தம்மிடத்திற்கு அழைத்துக்கொள்ள சித்தமுள்ளவராயிருந்தாரென்றும் நீங்கள் உணரும்படி கிருபைசெய்வாராக.

உம்முடைய தகப்பனாருடைய மரணத்தினால் திருநெல்வேலி சபைக்கு உண்டாயிருக்கிற பெரிய நஷ்டத்தையும் அவர் எனக்கு சற்றேறக்குறைய 50 வருஷமாய் நல்ல சிநேகிதனாகவு மிருந்தார் என்பதையும் நினைக்கும்போது எனக்கு அதிக துக்கமுண்டாகிறது.

உம்மையும் உம்முடைய தாயாரையும் நான் அதிகமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

உம்முடைய உண்மையுள்ள

MARY THOMAS.

---

மதுராந்தகம்.

1886-ளு ஏப்பிரல்மீ 26உ.

என் அருமை சகோதரனே!

என்னருமையும் பட்சமும் நிறைந்திருந்த கனம் மாமனாரவர்களிறந்த சங்கதியைப்பற்றி யெழுதிய கார்ட் நேற்றுவந்து சேர்ந்தது. பாளையங்கோட்டையிலிருந்து வந்த கடிதத்தினாலேயே எங்களுக்கு நம்பிக்கையில்லாதிருந்தது. மெஞ்ஞானபுரம் கனம் மாமனாரவர்கள் இறந்ததில் அவர்களுக்குச் சமீபத்தில் சிலநாளிருந்து, அவர்களுக்கு வேண்டிய பணிவிடை செய்யக்கூடாமல் போய்விட்டதே என்ற விசாரம் இருந்தது. ஆனால் இவர்கள் இறந்ததில் எங்களுக்குச் சொல்லிமுடியாத விசனமுண்டாயிருக்கிறது. அவர்களின் பாலைப்போலொத்த மனம், பட்சத்தையும், எப்படி நாங்கள் மறப்போம். இறந்



வேண்டிய வயதா? இறக்கக் கொடுக்கிற காலமா? நானவர்களோடு பழகினதுமுதல் என்பேரில் விசேஷித்த பட்சம் வைத்திருந்தார்கள். நான் விருதுப்பட்டியிலிருந்து வாதைக்குளம் வந்திருந்த காலங்களிலும், அதற்குப் பிந்தியும் அவர்கள் காண்பித்த அன்புக்கு என்ன பதிலைச் செலுத்தப்போகிறேன். எனக்கு அவர்களின் சிரித்த முகமும், ஆவிக்கட்டும், இருதயமும், என் ஞாபகத்தை விட்டு எப்படிப் போகும்? இவ்வளவு ஜல்தியில் நானவர்களை இழக்கக் கொடுப்பேனென்று நினைத்திருந்ததில்லை. நான் அவர்களிடத்தி லிருந்துவந்த பட்சமான கடிதத்தைப் பெற்று சிலநாளாச்சுது. சென்ற 20 வருஷமாய் யாரிடத்திலும் வைக்காத பட்சத்தை என்னிடத்தில் அதிகமாய்க் காட்டிவந்தார்கள். அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிடுங்குரல் என் காதில் கேட்கிறது. அவர்கள் உலகத்திலிருந்தும் உலகம் இன்னதென்பதை அறியாதிருந்தார்கள். இந்தப் பரிசுத்தவானை இவ்வளவு சீக்கிரத்தில் இழந்துபோவேனென்று நினைக்கவில்லை. எங்கள் துக்கத்துக்கு அளவில்லை. அவர்கள் போயிருக்குமிடம் எனக்குங் கிடைத்தால் நான் பாக்கியவானாயிருப்பேன். கணவனை இழந்த உமது தாயாரவர்களுடனும் பிதாவை இழந்த உங்களுடனும், போதகரை இழந்த சபையாருடனும் நாங்கள் துக்கப்படுகிறோம். அவர்களுடைய பட்சத்தைப் பார்த்து இனிமேலெப்போது பார்க்கப்போகிறோமென்று எங்கள் மனம் பொங்குகிறது. தேவனுக்குள் ஆறுதலடையவேண்டியது. தேவன் உங்களுடனிருப்பாராக. தேவன் அவர்களுக்காக உங்கள் முகத்தைப் பார்ப்பாராக. அவர்களுக்காக உங்களை ஆசீர்வதிப்பாராக. அவர்கள் நிமித்தம் உங்களைக் கைவிடமாட்டார்.

இப்படிக்கு,

உங்களுடன் துக்கத்தின்மேல் துக்கம் நிறைந்திருக்கிற

S. ரேனியுஸ் பிள்ளை.

---

கனம்: W. T. சத்தியநாதன் ஐ
C. M. S. ரேக்கார்டில் தகப்பனை
எழுதியிருக்கிறதாவது:

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமு
வான்கள் என்று எழுது; அவர்கள் தங்கள் பி
விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்
கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவி
வரும், 'ஆம்' என்று திருவுளம் பற்றுகிறார்." (வெ
14. 13.)

தென் இந்தியாவிலுள்ள சுதேச சபைகளிலே மரண
தின் மூலமாய் சில நஷ்டங்கள் நேரிட்டிருக்கின்றன
அவைகளெல்லாவற்றிலும் திருநெல்வேலி சபைக்கு ஏ
விலையேறப்பெற்ற ஆபரணமாயிருந்த வாசைக்கு
கனம்: வீ. வேதநாயகம் ஐயருடைய மரணம் அதி
பெரிய நஷ்டம். அவருடைய ஜீவிய சரித்திரத்
எழுதுகிற எனக்கும் அவருக்கும் 33 வருஷக் கால
ளாய்ப்பழக்கம். அவர் சுத்த இருதயமுள்ளவரும் சந்
ஷக் குணமுள்ளவருமா யிருந்ததினால் எங்களுக்கு
உண்டான பழக்கம் சிநேகமாக மாறி ஜீவகாலபரிய
தம் எங்களுக்குள் நிலைத்திருக்கக்கூடிய சகோதர ஐக்
முண்டாயிற்று. அவருடைய சிறு பிராய சரித்திர
த்தைப்பற்றி ஒன்றுந் தெரியாது. இந்துக்களான வேள
ளர் குலத்தைச்சேர்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவ
யிருந்தாலும், இவர் சிறு பையனா யிருக்கும்போ
அவருடைய மூத்த சகோதரனாகிய காலஞ்சென்ற மெ
ஞானபுரம் கனம்: தெய்வநாயகம் வீரவாகு ஐயர் மூ
மாய்க் கிறிஸ்தவரானார். தெய்வநாயகம் வீரவாகு ஐ
காலஞ்சென்ற கனம்: ஜெ. தாமஸ் ஐயரால் ஸ்நா
கப்பட்டதும், தென் திருநெல்வேலியிலுள்ள சேகர
ளில் மிகப் பெரிதுமான மெஞ்ஞானபுரம் சேகரத்
மேல்விசாரணை செய்யும் சூப்பிரண்டெண்டிங் பாஸ்
ராக விருந்தார். இவ்விரண்டு சகோதரரும் சொற்
த்துக்குள் மரித்துப்போன காரியம் மிகவும் வ



கப்படத்தக்கதே. கனம்: ஜான் டக்கர் ஐயர், C. M. S. செக்றத்தேரியாயிருந்த காலத்தில் வேதநாயகம் ஐயர் சென்னபட்டணத்தில் பிஷப் காரீஸ் கிராமர் ஸ்கூலில் வாசித்தார். இங்கே அவர் படிப்பு முடிந்தபிற்பாடு திருநெல்வேலிக்குத் திரும்பி அங்கே பாளையங் கோட்டையிலுள்ள கல்விச்சாலையில் கனம்: W. கிளார்க்டோ ஐயருடைய கையின் கீழ் உதவி வாத்தியாராக நியமிக்கப்பட்டு சில வருஷக்காலம் தம்முடைய வேலையைச் சுறுசுறுப்போடும், உற்சாகத்தோடும் நிறைவேற்றி வந்தார். இந்தக்காலத்தில் தமக்கேற்ற உதவியாகவும் தம்முடைய வேலையைத் தம்மோடு ஒன்றுசேர்ந்து நடத்தவுங்கூடிய ஒரு அம்மாளை விவாகஞ்செய்தார். இந்த விவாகத்தினால் அநேகம் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் இரண்டு ஆண்மக்களும் ஆறு பெண்மக்களும் உயிரோடிருக்கிறார்கள். கடைசி இரண்டு பெண்கள் தவிர மற்றெல்லாரும் விவாகம் செய்திருக்கிறார்கள். அவருடைய மருமக்களில் இரண்டுபேர் வெகுகாலம் மிஷனில் நல்ல ஊழியஞ்செய்து ஒருவர் C. M. S. தெலுங்கு மிஷனிலும், மற்றவர் தமிழ் மிஷனிலும் குருப்பட்டம் பெற்றிருக்கிறார்கள். வேறே இரண்டுபேர் மேற்சொன்ன மிஷனைச்சேர்ந்த பள்ளிக்கூட வேலையை நடத்திவருகிறார்கள். தன்னுடைய வீட்டைச் சுற்றிலும் ஒலிவமரக்கன்றுகளைப்போலொத்த தன்னுடைய பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் கண்டுகளிக்கும் சந்தோஷம் வேதநாயகம் ஐயருக்குக் கிடைத்தது.

வட திருநெல்வேலியில் கனம்: ராக்லெண்ட் ஐயர் 1854-ம் வருஷம் தேசாந்தரப் பிரசங்கவேலையை ஆரம்பித்தகாலத்தில் வேதநாயகம் ஐயர் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்து அந்த வேலையை ஸ்தாபித்த கனம்: ராக்லெண்ட் ஐயரோடும் அவருடைய உடன் வேலையாட்களாயிருந்த கனம்: பென் பெடோஸ் என்னும் ஐரோப்பிய பிரசங்கிகளோடும் சென்னபட்டணத்திலிருந்து வந்து இவர்களோடு சேர்ந்துகொண்ட கனம்: யோசேப்பு கொர்னேலியு ஐயரோடும் கூடாரவாசியாயிருந்து 270,000

ஜனத்தொகையுள்ள 1,400 பட்டிகளடங்கிய விஸ்தாரமான வட திருநெல்வேலித் தேசத்தில் கிறிஸ்துவின் வசனத்தைப் பிரசித்தப்படுத்தும் வேலையை அதிக ஊக்கத்தோடு செய்துவந்தார். சொற்ப காலத்திற்குப் பிற்பாடு இந்தச் சரித்திரத்தை எழுதுகிற எனக்கும் பேர்சொன்ன ஐரோப்பிய பாதிரிமாரோடும், சுதேசப் பிரசங்கிகளோடுங் கூட சுவிசேஷத்தை இரட்சணிய பிரசாரத்தை கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களல்லாத மற்றப் புறமதஸ்தருக்கும் கூறி அறிவிக்கும் சிலாக்கியம் கிடைத்தது. வட திருநெல்வேலி 4 சேகரங்களாகப் பிரிக்கப்பட்டு அதிலொன்றாகிய சிவகாசிச் சேகரத்திற்குச் சாட்சியாபுரம் முக்கியஸ்தானமும், வட திருநெல்வேலி முழுவதையும் மேல்விசாரணை செய்துவந்த ஐரோப்பிய மிஷனெரி வசிக்கும் ஸ்தலமுமாக இருந்தது. மற்ற 3 சேகரங்களையும் தேசாந்தரப் பிரசங்கிகளாகிய வேதநாயகம், கொர்னேலியு, சத்தியநாதன் என்பவர்கள் மேல்பார்க்கவேண்டுமென்றும், இந்த மூன்று சேகரங்களுக்கும் வாசைக்குளம், பனையடிப்பட்டி, சிரிவில்லிபுத்தூர் என்னும் இடங்கள் முக்கியஸ்தானங்களாயிருக்கவேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. இந்தத் தேசாந்தரப் பிரசங்கவேலையை ஸ்தாபித்த கனம் ராக்லென்ட் ஐயர் திடீரென்று இறந்துபோகவே, மறுவருஷம் (1859) வேதநாயகம் ஐயர் தன் கூடன் வேலையாட்களாயிருந்த மற்ற இரண்டு சுதேச உபதேசிமாரோடும், பின்னும் சிலபேரோடும் கனம் டீல்ட்ரி அத்தியக்ஷரால் உதவி குருப்பட்டம் பெற்றார். அதன்பின் இப்போதிருக்கிற சென்னை அத்தியக்ஷரால் 1862-ம் வருஷம் குருப்பட்டம் பெற்றார். தெய்வ சித்தமாய் நடந்த மாறுதலினாலே வேதநாயகம் ஐயர் அந்தச் சேகரத்திலேயே தனித்திருக்கும்படி நேரிட்டது. அவர் தம்முடைய புது ஊழியத்தை சாமர்த்தியமாயும் ஊக்கத்தோடும் வைராக்கியத்தோடும் நன்றாய் நடத்தக்கூடிய நிலைமைக்கு வந்தது கவனிக்கப்படத்தக்க விஷயம். நான் முன் சொன்னபடி தேசாந்தர வேலையை ஆரம்பித்து ஸ்தாபகம்பண்ணின கனம் ராக்



லென்ட் ஐயர் இறந்துபோனார். எலியட், போன்புரூக் என்ற ஐயன்மாரும் இறந்துபோனார்கள். ஸ்டோ ஐயர் முதலில் சென்னபட்டணத்திற்கும், அப்புறம் சீர்மை தேசத்திற்கும் போக நேரிட்டது. டேவிட், டென், மெக்டானல்ட் என்னும் ஐயர்மார் சென்னபட்டணத்திற்குப் போய்விட்டார்கள். மெடோஸ், ஹார்ஸ்லி என்னும் ஐயர்மார் சீர்மைக்குப் போகவும் சுதேசப் போதகன்மாரான கொர்னேலியு, சத்தியநாதன் என்னப்பட்டவர்கள் சென்னை C. M. S. தமிழ் மிஷனுக்கு மாற்றிப் போக நேரிட்டது. இவ்வித மாறுதலினால் வேதநாயகம் ஐயர்மாத்திரம் அவ்விடம் தனித்திருக்கும்படி சம்பவித்தது. அந்தச் சமயத்தில் தனக்குக் குருவானவராகவும் மேல்விசாரணை செய்யும் சிரேஷ்ட குருவானவராகவும், தகுந்த யோக்கியதை உண்டென்று மற்றவர்கள் இஷ்டமாய்க் கண்டறியத் தக்கவிதமாய் நடந்துகொண்டார். வட திருநெல்வேலியிலுள்ள இரண்டு சுதேசச் சங்கங்களுக்கும் தலைமையாக நியமிக்கப்பட்டு அச்சேகரத்தின் வேலையைச் சங்கங்களின் உதவியினாலே அதிக ஊக்கத்தோடு நடத்திவந்ததினாலே அவரைத் திருநெல்வேலிச் சபைக்கு முதலாவது சுதேச அத்தியக்ஷராக்க வேண்டுமென்றும், C. M. S. கமிட்டியாருக்குள் யோசனையிருந்தது. அவருடைய விடாமுயற்சியுள்ள பிரயாசங்களினாலும், சபைகளை ஆதரிக்கும் குணத்தினாலும், சபைகள் பெருகி விருத்தியடைந்ததுமாத்திரமல்ல, பிராமணர் முதல் எல்லா ஜாதியாருக்குள்ளும் அநேகர் கிறிஸ்துவையறிந்து அவருடைய சபையில் திரள் திரளாய்ச் சேர்க்கப்பட்டார்கள். மெய்யாகவே வனாந்தரமாயிருந்த வட திருநெல்வேலி ரோஜாப்புஷ்பம் பூத்துப் பரிமளிக்கிற சிங்காரவனம்போல அதுகாலத்தில் தேவன் தம்முடைய இரகசியமான வழிகளின்படி அவரைத் தம்மிடம் அழைத்துக்கொண்டார். 28 வருஷக்காலமாய் தேவ ஊழியக்காரனாயிருந்த அவர் சொற்பக்காலம் வியாதிப்படுக்கையிலிருந்து 59 பிராயமுள்ளவராய் ஏப்பிரல் மீ 22உ தம்முடைய நித்திய இளைப்பாறுதலுக்குள்ளும்

சந்தோஷத்துக்குள்ளும் பிரவேசித்தார். இது அவருடைய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல, வடதிருநெல்வேலியிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் துக்கத்தை உண்டாக்குவது ஆச்சரியமல்ல. அவருடைய அந்திய வேளையையும் அவருடைய மரணத்தையும் பக்கத்திலிருந்து பார்த்த ஒருவர் இவ்விடத்துப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதியிருக்கிறதைவிட என்னால் அதிகமாய் எழுத முடியாது.

"அவர் வியாதிப்படுக்கையிலிருந்த காலமெல்லாம் கொடிய வேதனைப்பட்டாலும் ஒருதடவையாகிலும் பொறுமையற்றுப்போனதில்லை. வியாதி ஆரம்பமான காலமுதல் அவர் மரிக்கும்பரியந்தம் அவரிடத்தில் காணப்பட்ட பொறுமை மற்றவர்களுக்கு மாதிரியாகவிருந்தது; எப்போதும் கண்களை மூடிக்கொண்டு ஜெபம் செய்வார், அல்லது வேதவசனங்களை ஞாபகப்படுத்திக்கொண்டிருப்பார். பக்கத்திலிருக்கிறவர்களைத் தமக்குப் பிரியமான பாட்டுகளைப் பாடும்படி, அல்லது வேதத்தில் சில பாகங்களை வாசிக்கும்படி கேட்பார். தான் விட்டுவிட்டுப் போகிற தன் வீட்டாரைப்பற்றிய கவலை கொஞ்சமாவது இல்லை."

"ஆ! கடைசியில் சூரியன் அஸ்தமனமாகிவிட்டது.!!"

அன்று சாயங்காலம் சோலையைச் சேர்ந்த தோட்டத்தில் அவரை அடக்கஞ்செய்தபோது குருமாரும் மிஷன் உத்தியோகஸ்தரும் சிநேகிதருமான அநேகம்பேர் திரள் கூட்டமாய் வந்திருந்தார்கள்.

வாலைக்குளம் உள்ளவர்களுக்குப் போதகரும், வட திருநெல்வேலி சுதேச ஆலோசனைச் சங்கங்களுக்குத் தலைமையாகவுமிருந்த கனம்: வி. வேதநாயகம் ஐயருடைய பிரயோசனமான ஜீவிய ஓட்டம் இவ்வாறு முடிந்தது.

இப்போது அவருடைய கல்வி, ஆவிக்குரிய தேர்ச்சி, கிறிஸ்தவ ஜீவியம் என்பவைகளைப்பற்றிச் சுருக்கமாய்க் கவனிப்போம்.



பிஷப் சார்ஜெண்ட் கிராமர் ஸ்கூலில் இவர் வாசித்தபடியினால் இங்கிலிஷ் பாஷையில் தேர்ச்சியுடையவராய் இருந்ததுந்தவிர, கிரேக்கு, லத்தீன் பாஷைகளிலும் நல்ல அறிவுடையவராயிருந்தார். தம்முடைய கருத்தை இங்கிலிஷ் பாஷையில் தாராளமாகவும் யாவருக்கும் விளங்கக்கூடிய விதமாகவும் விவரிக்கக்கூடிய சக்தி இவருக்குண்டு. கிரேக்குப் பாஷையிலுள்ள புதிய ஏற்பாட்டை நன்றாய் வாசித்து ஒவ்வொரு பதத்திற்கும் சரியான பொருள் சொல்லக்கூடிய திறமையுமுண்டு. வேத உபதேசங்களில் சிறந்த அறிவுள்ளவராக விருந்தார். தாய் பாஷையாகிய தமிழ் பாஷையும் இவருக்கு நன்றாய்த் தெரியும். கல்வியிலே நிபுணன் என்று இவரைப்பற்றிச் சொல்ல ஏதுவில்லாவிட்டாலும் சாதாரணமாய்ப் படித்த அநேகம்பேரைப் பார்க்கிலும் இவர் மேலான அறிவுடையவராக இருந்தார். தம்முடைய கல்வித் திறமையைப்பற்றி நிதானமான [illegible] கொண்டவராயிருந்தபடியால் தம அறிவை விர்த்தியாக்கும் விஷயத்தில் தான் படிக்க நேரிட்டகாரியங்களை அறப் படிப்பார். அநேக புஸ்தகங்களை எழுதாவிட்டாலும் கிறிஸ்துமார்க்க சம்பந்தமான சில புஸ்தகங்களை எழுதினார். லால் கன்காணியாருடைய நான்கு சுவிசேஷ வியாக்கியானத்தையும் தமிழில் திருப்பி அச்சிடும்படி தயாராயிருக்கிறதாய்த் தெரியவருகிறது. அவருடைய சிநேகிதரில் யாராவது அவர் திருப்பியிருக்கும் வியாக்கியானப் புஸ்தகங்கள் சீக்கிரம் அச்சிடப்பட்டுத் தமிழ்ச் சபைகளுக்குப் பிரயோஜனமாயிருக்கும்படி ஏற்பாடு செய்தால் அதிக நன்மையாயிருக்கும்.

அவருடைய பிரசங்க வல்லமையும் சாமானியமானதல்ல. தமிழ் பாஷையில் அவருக்கிருந்த தேர்ச்சியும், சுவிசேஷ இரட்சண்ணியத்தில் அவருக்கிருந்த விசுவாசமும், தாம் எடுத்துரைத்த காரியங்களை வேத வசனங்களைக்கொண்டு ரூபகாரப்படுத்தும் திறமையும், அவர் உபயோகிக்கும் தகுதியான உபமானங்களும், இவற்றோடு அவருடைய ஊக்கம், ஆவல், ஜெபம்

என்றும் தம்காரியங்களும் சேர்ந்து அவருடைய பிரசங்கத்தைக் கேட்கிறவர்களுடைய மனதிலே அதிக நன்றாய்ப் பதியச்செய்யாமற் போகாது. வேதநாயகம் என்று சொல்லக்கூடிய இவருடைய இருதயத்திலிருந்து புதிதும் பழமையுமான சங்கதி வெளிப்படும். பலவேதத்திலிருந்து ஒரு சுவிசேஷம் தனக்குக் கிடைத்திருக்கிறதாக எண்ணி திருவையிலிருந்துகொண்ட இரட்சகராலே மாத்திரம் ஆத்தும ரட்சிப்புண்டாகுமென்கிற சத்தியத்தை உணர்ந்தவராகத் தம்முடைய உள்ளான இருதயத்திலிருந்து பிரசங்கஞ்செய்வார். மற்றவர்களுடைய மனதைக் கவர்ந்துகொண்டு அவர்களுக்கு இணக்கமாய் நடந்துகொள்ளும் குணத்தில் இவர் சிறந்தவர். அவரோடு பழகினவர்கள் அவரை நேசிப்பார்கள். அவரோடு அதிகமாய்ப் பழகினவர்கள் அவருடைய சுத்தமனதையும், கபடற்ற குணத்தையுங் கண்டு ஆச்சரியப்படுவார்கள். அவரோடு சகவாசம் செய்தவர்கள் அவருடைய நற்குணங்களில் சிலவற்றைப் படிக்காமலும் ஒரு சிறந்த மனிதனோடு பழகினோமென்று எண்ணாமலும் அவரை விட்டுப் பிரிவதில்லை. பெரிய ஜமீன்தார்களோடும் உத்தியோகஸ்தர்களோடும் அவருக்கிருந்த பழக்கத்திற்கும், சொற்சக்திக்கும் இதுவே காரணம். தமக்கிருந்த பழக்கத்தையும், சொற்சக்தியையும் எப்போதும் மார்க்க சம்பந்தமாகவே உபயோகப்படுத்திக் கொள்ளுவார். தமக்குச் சிறந்த மாதிரியாக்கிக்கொண்ட … யோரைப் போலவே இவரும் விசுவாசமும், ஜெபசிந்தையும் முள்ளவராயிருந்தார். சிறியதும், பெரியதுமான தம்முடைய காரியங்கள் எல்லாவற்றையும் ஜெபத்தின் மூலமாய்த் தேவனுக்கு ஒப்புவிப்பார். பிரசங்கத்தைக் குறித்து பரிசுத்தமான வல்லமையோடு முத்திரைபோட்டு … மாயும், விடாப்பிடியாயும் இவர் செய்த ஜெபங்கள் அநேக விஷயங்களில் அதிசயப்படத்தக்க நன்மையை விளைவித்தது. பிரதிஷ்டை செய்யப்பட்ட அவருடைய ஜீவியத்திற்கும் அவருக்குக் கிடைத்த காரியசித்திக்கும் இதுவே காரணம்.



வேதநாயகம் ஐயரைப்பற்றி பத்திரிகைக்கு எழுதப்பட்டதிலிருந்து சிலவற்றை இங்கே திரும்பவும் எடுத்துக் காட்டுகிறேன். "அவர் இந்த ஊருக்கு வருமுன், வாகைக்குளம் இங்குமங்கும் சில வீடுகளடங்கிய ஒரு காடுபோலிருந்தது. ஆனால் இப்போதோ அதை ஒரு சிறு பட்டணம் என்று சொல்லலாம். அநேக வீடுகளும், அநாத பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களும், தொழில் கற்பிக்கும் இடங்களும், நந்தவனங்களும், தோட்டங்களும், சத்திரங்களும், ஒரு நேர்த்தியான கோபுரமுமுள்ள ஒரு கோவிலும் தற்காலத்தில் காணப்படுகின்றன. இப்பேர்ப்பட்ட பரோபகாரியின் பேர் எக்காலத்திலும் மறக்கப்படவேமாட்டாது."

அவருடைய அந்தியநாட்களில் தன்னுடைய விசாரணைகளுக்குட்பட்ட சபைகள் பிற உதவியில்லாமல் தங்களைத் தாங்களே பரிபாலனம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்கிற அபேட்சை அவருக்குண்டாயிற்று. அதினாலே அவருக்கு அதிகப் பணக்கஷ்டமும் மனவருத்தமும் நேரிட்டது. இந்த விஷயத்தில் அவர் எடுத்த முயற்சிகள் சரியோ, பிசகோ என்று நிர்ணயிப்பது வருத்தமான காரியம். சபைகளின் நன்மையைக்கருதி, அப்படிச் செய்ததினாலே அவருடைய நோக்கம் எப்படிப்பட்டதோ என்பதைச் சந்தேகித்துப் பேச இடமில்லை. ஆனாலும் ஒரு குருவானவர் அப்படிப்பட்ட கவலைகளுக்கும், தொந்தரவுகளுக்கும் உடன்படாமலிருப்பது நல்லது. பணங்களைச் சர்க்கார் வட்டிக்குக் கொடுத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை அநுபவிப்பதினால் அப்படிப்பட்ட கவலைகள் நீங்குவதுந்தவிர சபைகளைப் பரிபாலனம் செய்யத்தக்க நிலையான வரும்படியும் கிடைக்கும். வேதநாயகம் ஐயருக்குப் பதிலாக ஒரு தகுந்த ஆள் கிடைப்பது மெத்த வருத்தமான காரியமென்று சொல்லவேண்டியதே. தகுந்த ஆள் கிடையாததினால்தான் சென்னை தமிழ் பிஷப்பைச்சேர்ந்த அநேக ஆலோசனைச் சங்கத்தின் ஊழியஞ்செய்யும்படி சமீபகாலத்தில் …

வேதநாயகம் ஐயருடைய இடத்தைச் சேர்ந்தவரும் மருமகனுமாகிய கனம்: டீ. ஸ. பீற்றர் ஐயனா சொற்ப காலத்திற்கென்று வாகைக்குளத்திற்கு அனுப்பும்படி நேரிட்டது: அதேத குருவானவர் தகுந்த நிருக்கும் நிலைமைக்கும் சொல்லுமிடத்து எவ்வளவு முக்கியமான விஷயமென்று இதினால் கமிற்றியார் அறிந்துகொள் வார்கள். இந்தத் திருப்பணிவிடைக்கென்று ஆட்களை நாம் தெரிந்தெடுக்கும்போது அவர்கள் அதிகம் கற்ற வர்களாயிருந்தபோதிலும் அவர்களுடைய காரியங்களை நாம் வெகு நுட்பமாயறிந்து அவர்களுக்குச் சரியாய் நடந்து வருகிறார்களாவென்று அதிக விழிப்போடும் ஜாக்கிரதையோடும் கவனிக்கவேண்டும். அவர்கள் நிஷ்களங்கமான வேத அறிவும் சிறந்த தேவபக்தியு முள்ளவர்களாயிருக்கவேண்டும். சுருக்கிச் சொன்னால் அவர்கள் வேதநாயகம் ஐயரைப்போலொத்தவர்களாயி ருக்கவேண்டும். "அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்கிற வசனத்தை அவர் எப்படித் தமக் குச் சட்டமாக்கிக்கொண்டாரோ அதுபோலவே அவர்க ளும் அவ்வசனத்தைத் தங்களுக்குச் சட்டமாக்கிக்கொள் ளுகிறவர்களாயிருக்கவேண்டும். பரிசுத்தவான்களான ராக்லெண்ட், எவிரி, பொன்புருக், வேதநாயகம் என்னும் ஐயர்மாருடைய ஜீவியத்திலும், மரணத்திலும், பென், மெடோஸ் என்னும் ஐயர்களுடைய வெகு கால உழைப்பிலும் பிரதிஷ்டையாக்கப்பட்டிருக் கிற வட திருநெல்வேலிச் சேகரத்தின் வேலையை நடத்திவரும்படித் திருச்சபைக்கு நாயகனும் நம்முடைய தேவனுமாகிய இயேசுகிறிஸ்து என்னும் சிலுவையி லறையுண்ட அவரையேயன்றி வேறொன்றையும் அறியா தவரும் முழுவதுமாய் அவருடைய ஊழியத்திற்கென்று தம்மைப் பிரதிஷ்டை செய்தவருமான ஒரு ஊழியக் காரனை வேதநாயகம் ஐயருக்குப் பதிலாக நியமிக்கும் படி நாம் ஜெபம் செய்வோமாக.

எல்லாச் சபைகளிலும் புகழ்பெற்றிருந்த வேதநாய கம் ஐயருடைய ஞாபகத்திற்கு நான் எழுதின திருப்பம்



அற்ப சின்னமாக மாத்திரமிருக்கிறது. சென்னபட் டணத்திலும் சீர்மையிலுமுள்ள C. M. S. கமிற்றியார் அவரைப்பற்றி எவ்வளவு நல்ல அபிப்பிராயமுள்ளவர் களாயிருந்தார்கள் என்பதைப் பின்வரும் அவர்களு டைய தீர்மானங்களினால் அறியலாம்.

### சென்னைக் கமிற்றியாருடைய தீர்மானம்.

வேதநாயகம் அம்மாளுக்கு நேரிட்டிருந்த துக்கத் தில் அவர்களோடு நாங்களும் அனுதாபப்படுகிறோ மென்றும், உயர்ந்த நிலைமைக்கு வந்தவரும், அந்த நிலை மைக்குத் தகுந்தவராய் விளங்கினவருமான வேதநாய கம் ஐயருடைய மரணம் சுதேச சபைகளுக்குப் பெரிய நஷ்டமென்று நாம் அபிப்பிராயப்படுகிறதை அந்த அம்மாளுக்கு அறிவிக்கவேண்டுமென்று செக்ரற்றேரி யாரைக் கேட்டிருக்கிறார்கள்.

### சீர்மைக் கமிற்றியாருடைய தீர்மானம்.

வட திருநெல்வேலியைச் சேர்ந்த இரண்டு சுதேச ஆலோசனைச் சங்கங்களுக்குத் தலைமையாகவும், வாகைக் குளம் ஸ்தலத்துப் போதகராகவுமிருந்த வேதநாயகம் ஐயர் ஏப்பிரல் மீ 22உ ஜீவித்துப்போன சங்கதி எங்க ளுக்கு அறிவிக்கப்பட்டது. கனம்: ராக்லெண்ட் ஐயர் தன்னுடன் சேர்ந்து வட திருநெல்வேலியிலே தேசாந் தரப் பிரசங்கவேலையை நடத்தும்படி பழக்கின மூன்று சுதேசக் கிறிஸ்தவர்களில் இவர் ஒருவர். சுத்த இருதய மும், அன்பான குணமும், கிறிஸ்துவைப்பற்றிய அன்பும், ஆத்துமாக்களின்பேரில் வாஞ்சையும் இவரில் அதிகமாய்க் காணப்பட்டதுந்தவிர, ஊக்கமும், உணர்வு முள்ள பிரசங்கியாகவும் சுவிசேஷ ஊழியத்தில் விடா முயற்சியுள்ளவராகவுமிருந்தார். மற்றவர்களைப் பார்க் கிலும் இவருக்கு உயர்ந்த தரத்திலுள்ள வகுப்பாரு டைய பழக்கம் அதிகம். அதினால் அவர்களிலிருந்து அநேகம்பேரைக் கிறிஸ்தவர்களாக்கி யிருக்கிறார். சென்ற சில வருஷங்களாக இரண்டு ஆலோசனைச் சங்கங்களுக்

ரும் தலைமையாகவிருந்து வட திருநெல்வேலி சபைகள் முழுவதையும் மேல்விசாரணை செய்துவந்தார். அந் காலத்தில் சுவிசேஷ ஊழியம் நன்றாய் விருத்தியாகி, மிஷன் உத்தியோகஸ்தரின் தொகையும் அதிகமாய்ப் பெருகிற்று. இவ்வளவு உண்மையும் வைக்கமுமுள்ள சகோதரன் மரித்துப் பரமபதவி யடைந்தது மிஷனின் ஊழியத்திற்குப் பெரிய நஷ்டமென்று உணரும்போது, இத்தசபைக்கு நாயகராயிருக்கிற தேவன் தம்முடைய ஊழியத்தை நிறைவேற்ற விசுவாசத்திலும், அன்பிலும், வைராக்கியத்திலும் இவரைப்போலொத்த அநேக அநேக குருமாரை எழுப்பும்படி ஏகமாய் ஜெபம் செய்கிறோம். வேதநாயகம் அம்மாளுக்கும், மற்ற அவருடைய வீட்டார் யாவருக்கும், எங்களுடைய அநுதாபத்தைத் தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறோம்.

நம்மைவிட்டுப் பிரிந்துபோன இந்த அருமைச் சகோதரனுடைய ஜீவியத்தையும் அவர் செய்த ஊழியத்தையும்பற்றி இவைகள் சிறந்த நற்சாட்சிகளாம். அவருடைய ஜீவிய முழுமையும், "என் சாட்சி பரலோகத்திலிருக்கிறது, எனக்கு சாட்சி பகருகிறவர் உன்னதத்திலிருக்கிறார்" என்று பிரஸ்தாபப்படுத்துகிறதுபோலிருக்கிறது. இந்த கிரந்தத்தின் தலைப்பில் எழுதப்பட்டிருக்கிற வாக்கியம் அவருடைய ஜீவியத்தை வெகு செவ்வையாய் விளக்கிக் காட்டுகிறது.

"கர்த்தருக்குட்பட்டு மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களது கிரியைகள் அவர்களோடேகூடப் போகும்."

W. T. சத்தியநாதன்.



சகோதரரான வீரவாகு, வேதநாயகம்
ஐயன்மாரைப் பற்றினதென்ன,
கனம்: ஹேடோஸ் ஐயர் இங்கிலாந்திலிருந்து
C. M. S. சிக்காருக்கு எழுதியனுப்பினதாவது:

எக்சிட்டர் சபாமண்டபத்தில் C. M. S; B. F. B. S. என்னும் இரண்டு சங்கங்களையும் சார்ந்ததாய்க் கூடின முக்கியமான வருஷாந்தரக் கூட்டங்களில் பேசினவர்கள் ஒவ்வொருவரும் சீர்மை தேசத்திலே வெகுகால அநுபோகஸ்தரும், இந்த இரண்டு சங்கங்களுக்கு நல்ல சிநேகிதருமாயிருந்து ஜீவித்துப் போனவர்களைப்பற்றி வெகு உருக்கமாய்ப் பேசினார்கள். தூர இடங்களில் நல்ல ஊழியஞ் செய்துவந்த தேவ ஊழியக்காரரின் பேர் பிரஸ்தாபம் ஏன் அதிகமாய்த் தொனிக்கவில்லை? தூரமான இடங்களில் நடந்ததினாலேயா? ஒருவேளை சுதேசிகளுடைய பேரை உச்சரிக்கிறதில் வெள்ளைக்காரருக்கு இருக்கும் கஷ்டத்தினாலேயா? எவ்வித முகாந்தரமானாலுஞ் சரியே, திருநெல்வேலி சபையில் வெகுகாலம் சிறந்த ஊழியஞ்செய்து நல்ல பேர்வாங்கின சகோதரரான கனம்: தெய்வநாயகம் வீரவாகு, வேதநாயகம் வீரவாகு ஐயன்மாரைப்பற்றி C. M. S. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவராவது ஒன்றும் இதுவரையில் பேசாமலிருந்தது என் மனதிற்கு வருத்தத்தை உண்டாக்கிற்று. அவர்கள் செய்த உத்தம ஊழியத்திற்கு அன்பும் நன்றியறிதலுமான அடையாளமாக சீர்மை தேசத்திலுள்ள சிநேகிதர் வாசித்தறியும்படி அவர்களைப்பற்றி சில வரிகளாவது எழுதவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது.

தெய்வநாயகம் வீரவாகு ஐயர் அவருடைய குடும்பத்திலே மூத்த சகோதரனாயிருந்தார். மெஞ்ஞானபுரம் சேகரத்தைச் சேர்ந்த ஒரு மிஷன் பாடசாலையில் அவர் வாசிக்கும்போது தெய்வ பக்தியுள்ள ஒரு வாத்தியாயர் இயேசுவினாலுண்டாகும் பாவவிமோசனத்தைப் பற்றிய உபதேசத்தை அவருக்கு நன்றாய்ப் போதித்

இருந்தார். அவருடைய பெற்றோர் இந்துக்களாயிருக்கும்போது இந்த உபதேசம் அவருடைய இருதயத்தில் புளித்தமாவைப்போல் கிரியைசெய்து கொஞ்சகாலத்திற்குள் அந்தக் குடும்பம் முழுவதிலும் பரவிற்று. முதலில் அவருடைய சகோதாரில் இரண்டுபேரும், ஒரு சகோதரியும், அப்புறம் இன்னொரு சகோதரியும் கிறிஸ்தவர்களானார்கள். சில வருஷங்களுக்குள்ளாக அந்தக் குடும்பம் அதிகமாய் விருத்தியானதினால் 60, 70 பேரளவில் கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதுதவிர அவர்களுடைய பிரயாசத்தினாலே, அல்லது அவர்கள் மூலமாய் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்களென்று நான் சொல்ல அவசியமில்லை. தெய்வநாயகம் வீரவாகு ஐயர் இறந்துபோன காலத்தில் 20 சுதேசக் குருமாருடைய வேலையை மேல்விசாரணை செய்து மெஞ்ஞானபுரம் சேகரத்தை மேல்பார்த்துவந்த சிரேஷ்ட குருவானவராயிருந்தார். அவர் மெய்ப்பக்தியும், உறுதியான தீர்மானமும், உத்தம ஜீவியமுமுள்ளவராயிருந்தார். அவருடைய குடும்பத்தாரெல்லாரும் அவரைப் பிதாவைப்போல் நேசித்துவந்தார்கள். அவருடைய மரணத்தைப்பற்றி அவருடைய சகோதரன் பின்வருகிறபடி எழுதியிருக்கிறார். "அவருடைய வியாதிகாலத்தில் ஆரம்பமுதல் மரணமளவாக்கும் அவர் கொடிய வேதனைப்பட்டாலும், ஒருதடவையாவது முறுமுறுப்பான வார்த்தையைப் பேசாமல், தேவனுக்குத் தம்மை முழுவதுமாகக் கையளித்து, ஆச்சரியப்படத்தக்க பொறுமையுள்ளவராயிருந்தார். சென்ற நவம்பர்மாசக் கடைசியில் தன்னுடைய ஐம்பதாவது வருஷ ஊழியத்தை முடித்தார். தான் மேல்விசாரணை செய்துவந்த மெஞ்ஞானபுரம் சேகரத்தில் 45 வருஷம் ஊழியஞ்செய்திருக்கிறார். சபைகளைப் பட்சமாய் நடத்திவந்ததினாலே அவர்களெல்லாரும் அவரை அதிகமாய் நேசித்து மதித்துவந்தார்கள். தேவனுக்கே சகல மகிமையுமுண்டாவதாக. அவருடைய பரிசுத்தமும் சிறந்ததுமான நல்மாதிரியை நானும் பின்



பற்றும்படி தேவன் கிருபை செய்வாராக. என்னுடைய சகோதரன் எனக்கு ஆத்தும சரீர நன்மைகளை எவ்வளவு ஏராளமாய்ச் செய்திருக்கிறாரென்பது உங்களுக்குத் தெரிந்தவிஷயம். இந்துக்களான என் அருமைப் பெற்றோர் இறந்த காலமுதல் எனக்குத் தகப்பன்போலிருந்து என்னைப் பராமரித்து, எனக்குத் தமிழ் கற்றுக்கொடுத்து என்னை ஜீவபாதையில் நடத்தினார்."

அவருடைய சகோதரியைப்பற்றியும் சுருக்கமாய்க் கவனிப்போம். முதல் குழந்தை பெற்றவுடனே அந்த அம்மாள் விதவையானார்கள். அந்நாளைக் கைம்பெண்களைப்போல் இவர்கள் தங்களுடைய நாட்களை பிரயோஜனமற்றவிதமாய்க் கழியாமல் தங்களுக்கும் தங்களுடைய குடும்பத்திற்கும் பிரயோஜனமுண்டாகும்படி சீக்கிரம் வாசிக்கக் கற்றுக்கொண்டார்கள். அவர்களுடைய இளைய சகோதரன் எங்களோடு சேர்ந்து இந்தச் சேகரத்தில் தேசாந்தரியா யிருந்தகாலத்தில், அவருடைய மனைவிக்குத் துணையாகக் கொஞ்சக்காலம் அவருடைய வீட்டிலேயே இருக்கும்படி நேரிட்டது. அப்புறம் சாட்சியாபுரத்தில் ஆண், பெண், போர்டிங் பள்ளிக்கூடங்களை மேல்பார்க்கும்படி நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அங்கிருந்த காலத்தில் நாங்களும் மற்றவர்களும் அவர்களை அதிகமாய் நேசித்து மதிக்கத்தக்கவிதமாய் நடந்துகொண்டார்கள். அவர்கள் நல்ல உத்தம ஜீவியம் செய்துவந்ததினாலே அவர்களுக்குப் பாக்கியமான மரணம் கிடைத்தது.

வடதிருநெல்வேலியில் வெகுகாலமாய் என்னுடைய உடன்வேலையாளரும் மரணபரியந்தம் அச்சேகரத்தின் சமாசாரங்களை எனக்குத் தவறாமல் தெரிவித்துவந்த என்னுடைய அருமையும் பட்சமுமுள்ள இந்த இருவரில் இளைய சகோதரனாகிய வேதநாயகம் ஐயரைப் பற்றி நான் சற்று விரிவாய் எழுதவேண்டும். 30 வருஷமாய் என்னோடு சம்பந்தப்பட்டிருந்தார். முதலில் எங்களோடு சேர்ந்து தன்னுடைய கூடாரத்திலிருந்து கொண்டு தேசாந்தரவேலையை நடத்திவந்த உபதேசி

யாராயும் அப்புறம் அச்சேகரத்தின் ஓர்பாகத்துக்கு மேல் விசாரணைசெய்யும் குருவானவராயுமிருந்தார். நான் வட திருநெல்வேலியை விட்டுப் போகும்படி நேரிட்டபோது அச்சேகரம் முழுவதையும் விசாரணை செய்து வந்தார். அவருடைய ஜீவியம் உத்தம ஜீவியமென்பதற்குப் பின்வரும் சரித்திரம் நல்ல அத்தாட்சி.

ஒரு சமுசாரிக்கு நாங்கள் ஒருகாலத்தில் ஒரு சுவிசேஷப்பிரதி ஒன்றைக் கொடுத்திருந்தோம். அவன் அதை வாசித்தபோது அதிலடங்கிய போதனையினால் ஏவப்பட்டு கிறிஸ்தவனாகும்படி விரும்பினான். அவன் கிறிஸ்தவனாகக்கூடுமா? கிறிஸ்துமார்க்கச் சத்தியங்கள் இந்துகளுக்கு அதிக உயர்ந்ததாய்க் காணப்படுமல்லவா? வேளாளக்காரருடைய இந்த சன்மார்க்கமான ஜீவியத்திற்கு அவைகள் நன்மையும், ஏற்றவைகளுமாய்க் காணப்படும். ஆனால் இந்துக்கள் அவைகளுக்கு இசைய நடக்கக்கூடுமாவென்று அவன் பிரயாசப்பட்டுப்பார்த்தான். எங்களுடைய தேசாந்தரப் பிரசங்கிகளி லொருவர் தன்னுடைய குடும்பத்தை விட்டுத் தூரமான இடத்தில் ஒண்டியாய்த் தன்னுடைய கூடாரத்திலிருக்கிறாரென்றிந்து இவர் எவ்விதமாய் நடந்துவருகிறாரென்றும், இந்துக்களைப்பார்க்கிலும் இவர் அதிகச் சன்மார்க்கமும் உத்தமுமான ஜீவியம் செய்துவருகிறாரா வென்றும் அவருடைய நடபடிகளைச் சோதித்துப்பார்க்க விருப்பமுள்ளவராய் நான் அவரோடுகூடக் கொஞ்சக்கால மிருக்கும்படி நீங்கள் உத்தரவு தரவேண்டுமென்று என்னை வருந்திக் கேட்டுக்கொண்டான். அவருடைய பக்தியையும், பரிசுத்தமான ஜீவியத்தையும், சுயப்பிரயோஜனத்தைத் தேடாத குணத்தையும் பார்த்து அதிசயப்பட்டுத் திரும்ப என்னிடத்தில் வந்து இப்போது இந்துக்கள் கிறிஸ்தவர்களாகுது கூடியகாரியந்தான் என்பதைத் அறிந்துகொண்டேன். எனக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதுமுதல் அவர்களிருவரும் நல்ல சிநேகிதராயிருந்தார்கள். அவரோடு பிரயாணம் பண்ணும்போது அஞ்ஞானிகள் அவரை



மரியாதைசெய்யும் வகையையும், அவருடைய சபையைச்சேர்ந்த ஜனங்கள் அவருக்குக் காண்பிக்கும் அன்பையும் கவனியாமலிருப்பது கூடாதகாரியம். அவர் விசாரணைக்குட்பட்ட ஒவ்வொரு கிராமங்களின் வழியாய்ப் போகும்போது ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள ஜனங்கள் அன்போடு அவரை ஏற்றுக்கொண்டு உபசரிப்பதைப் பார்க்கலாம். ஜமீன்தார்களும், தாசில்தார்களும், சர்க்கார் உத்தியோகஸ்தரான பிராமணர்களும் இதற்கு நீங்கினவர்களல்ல. வாகைக்குளம் உள்ளூரில் ஆராதனை முடிந்தவுடன் நான் காணும் காட்சி எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. இரண்டு, மூன்று, ஏழுமைல் தூரத்திலுள்ள கிராமங்களிலிருந்து கோவிலுக்கு வருகிற ஜனங்கள் ஆராதனை முடிந்து அவர் வீட்டுமுன் விராந்தாவிலிருக்கிறபோது அவரைப் பார்த்துவிட்டுப் போகும்படி கூட்டம் கூட்டமாய் வருவார்கள். அவர் அவர்களுக்குச் சொல்லும் அன்பான புத்திமதிகளைக் கேட்டுக்கொண்டு தங்களால் எவ்வளவுநேரம் காத்துக்கொண்டிருக்கக்கூடுமோ, அவ்வளவுநேரம் காத்திருப்பார்கள். அதிகநேரம் காத்திருக்கிறீர்களே என்று சொன்னால் இன்னும் அதிகநேரம் காத்திருக்க இஷ்டமுள்ளவர்கள்போல் உடனே ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லுவார்கள். அவர் எங்களுக்கு எழுதும் கடிதங்களிலெல்லாம் அவருடைய மெய்பக்தியையும் தம்முடைய சபைகளைப்பற்றிய ஊக்கமான கவலைகளையும், எங்கள்பேரிலுள்ள அன்பையும் காணலாம். ஒவ்வொரு கடிதத்திலும் மெடோஸ் அம்மாளுக்கு ஒரு சந்தோஷ செய்தி எழுதாமலிருக்க மாட்டார். அந்தச் சேகரத்தை நான் விட்டுவந்தபின் அவருடைய அரும் பிரயாசத்தினாலும், உண்மையுமுள்ள ஊழியத்தினாலும் சபை அதிகமாய் விருத்தியடைந்தது, சபையின் வருமானங்களும் அதிகரித்தது. மிஷன்வேலை அதிகமாய் விருத்தியானதினாலும், கமிற்றிமார் தாங்கள் செய்துவந்த பணசகாயத்தை வருஷாவருஷம் இருபதிலொருபாகம் குறைத்து வருவோமென்று சொல்லிவிட்டதினாலும் பணங்களைச் சேகரிக்

திறில் அவரெடுத்த பிரயாசம் அதிகம். படைக் கணக்குகளை ஒழுங்காயும் திட்டவட்டமாயும் பார்க்காததினால் இங்கிலாந்து தேசத்தில் யுத்தம் என்று ஒப்புக்கொள்ளாத விதமாய்ப் படைச்சேகரிக்கப் பிரயாசப்பட்டார். ஆனாலும் அதின் உண்மை பட்டப்பகலைப்போல் பிரகாசமாயிருந்தது. அவர் அதிகப் படிப்பாளியல்ல. கனம் யோசேப்பு கொர்நேலியஸ் ஐயரைப்போல அநேக பாஷைகளைக் கற்றறிந்த வித்துவானுமல்ல. ஆனாலும் கிறிஸ்துமார்க்கப் புஸ்தகங்களைப் பிரசுரப்படுத்துவதில் தம்மாலியன்றதைச் செய்தார். லாக் கன்னானியாருடைய நான்கு சுவிசேஷ வியாக்கியானத்தில் அநேகத்தைத் தமிழ் திருப்பினர்.

அவர் மரிக்கும் சமயத்தில் யோவான் சுவிசேஷ வியாக்கியானத்தைத் திருப்பிக்கொண்டிருந்தார். சொற்ப காலத்திற்குமுன் "Knots untied" என்கிற புஸ்தகத்தைத் தமிழ் திருப்பும்படியாய் என்னை வாங்கியனுப்பும்படி கேட்டிருந்தார். அவருடைய பிள்ளைகளெல்லோரும் எங்களாலே வளர்க்கப்பட்டு இப்போது அவருடைய நன்மாதிரியைப் பின்பற்றி நல்ல ஜீவியம் செய்துவருகிறார்கள். அங்கசாகரத்தில் மூழ்கியிருக்கிற அவருடைய மனைவியில் யாதொரு விசேஷமும் காணப்படாவிட்டாலும் அவர்களைத் தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றதான அமைதலும் சாந்தமுமுள்ள நற்குணம் பொருந்தினவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய அன்பின் வெளிச்சமானது அவர்களுடைய புருஷன் வீட்டிலும் அந்தக் கிராமத்திலும் மெதுவாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. என்னுடைய அன்பும் அதிகப் பட்சமுமுள்ள அருமைச் சகோதரனே, நீர் வெகுகாலம் உண்மையாய் உழைத்து உமக்குப் பின்னாலே கிறிஸ்துவின் நற்கந்தத்தை வைத்துப்போயிருக்கிறீர். உம்முடைய காரியங்களையெல்லாம் மொத்தமாய்ச் சேர்த்துப் பார்க்கும்போது இனிமேல் உம்மைப்போலொத்தவர்களைக் காண்பதரிது.

R. R. மெடோஸ்.

---



1886-ம் வருஷ நற்போதகத்தில் எழுதியிருக்கிறதாவது:

வட திருநெல்வேலியில் முப்பதுவருஷம் மிகவுத்தமத்தோடும், வெகு ஜாக்கிரதையோடும் உழைத்து, கிறிஸ்தேசுவுக்கென்று பிழைத்து, கிறிஸ்தவர்களும் மற்ற நானா வகுப்பினரும் செழித்தோங்க நன்மை பரிபாலித்து, சத்திய வேதோபதேசஞ்செய்து, நல்லாசனை கொடுத்து, நற்கீர்த்தியெடுத்து, சிறந்து விளங்கிய கர்த்தரின் உத்தம தாசனாகிய கனம்: வீ. வேதநாயகம் ஐயரவர்கள் இச்சமயம் தமது பரம இளைப்பாறுதலுக்குட்பட்டுவிட்டனர். இவர் இடையன்குடிக்கருகே ஓர் கிராமத்தில் பிறந்து, இளம்பிராயத்திலேயே இவரது ஜேஷ்ட சகோதரனால் கிறிஸ்துமார்க்கப் போதனையடைந்து, திருச்சபையின் ஓர் அங்கமாகிப் பாளையங்கோட்டை வித்தியாசாலையிலும், அதன்பின் பிஷப் காரின் கிராமர் ஸ்கூலிலும் கல்விபயின்று, அறிவிலும் மெய் பக்தியிலும் வரவர வளர்ந்துவந்தார். 1849-ம் மீளவும் பாளையங்கோட்டை வித்தியாசாலைக்கு உபாத்தியாயராக நியமனம்பெற்று 54-ம் வரை அவ்வேலையைச் சித்திபெற நடத்திவருகையில், 1854-ம் வட திருநெல்வேலியில் தேசாந்தர மிஷனெரிகளாயிருந்த கனம்: ராக்லென்ட், பென், போன்புருக், எவிரி, மெடோஸ், கிரே என்ற ஐயன்மார்களது கூட்டத்தோடு சேர்ந்து கூடாரப் பிரசங்கம் செய்யும்படியாய் இவரும், கனம்: சத்தியநாத ஐயரும், காலஞ்சென்ற கனம்: கொர்நேலியஸ் ஐயரும் அழைக்கப்பட்டனர். பாலியமுதலே இவ்வையன்மாருடன் வசித்துத் தமது பரம எஜமானின் ஊழியத்திற்குத் தம்மை முற்றிலும் ஒப்புக்கொடுத்தனர். 1859-ல் பிஷப் டெல்றி அவர்களால் டீக்கன் பட்டமும் 1862-ல் பிஷப் ஜெல் அவர்களால் குருப்பட்டாபிஷேகமும் பெற்று, முதலில் கனம்: கிரே ஐயருக்கும், அதன்பின் கனம்: மெடோஸ் ஐயருக்கும் உதவியாக வாகைக்குளம் சேகரத்திற்கு குருவாக நியமனம்பெற்று கருத்துடனே தமது கடமையை

நிறைவேற்றினர். 1877-ல் கனம். மெடோஸ் ஐயர் சீர்மைக்குப் போனதின்பின் இவரே சபாதிகாரமடைந்து வட திருநெல்வேலி முழுவதையும் பொறுப்பாக நடத்தி வந்தனர். புரோவின்ஷயல் சர்ச் கவுன்சிலுக்குச் செக்ரத்தேரியாக விருந்து மகா கனம். சார்ஜென்ற் அத்தியட்சரவர்களுக்கு வலதுகரம்போல் உதவினர்.

மகா அருமை பெருமையான சார்ஜென்ற் அத்தியட்சரது பூமியின் உற்சவத்தில் இவர் செய்த அருமையான பிரசங்கம் அச்சமயம் பிரசன்னமாயிருந்தவர்களுக்கு வியப்புறத்தக்கதாயிருந்தது. இவரது மலர்ந்த முகப் பார்வையும், பெரியவரிடத்தும் புன்னகையோடு கூறும் இனிய சொல்லும் எவ்வித கன்னெஞ்சையும் மென்னெஞ்சாக்கத் தக்கவே. அவரிடம் வரும் கற்றோர் மற்றோர், பெரியோர் சிறியோர், நல்லோர் தீயோர், வலியார் மெலியார், பந்துக்கள் அந்நியர், யார் யாருக்கும் யாதொரு பேதமின்றி அவரவர்க்கு இணங்கப் புத்திமதி சொல்லி எல்லோர் பாசத்தையும் இழுத்து கவர்ந்த இத்தகைய நற்குணமே இவர்பால் மிகுந்திருந்தது.

எட்டையாபுரம், சிவகிரி, ஊத்துமலை முதலான சமஸ்தானங்களில் இவருக்கிருந்த நன்மதிப்பு இவ்வளவென்று கூறமுடியாது. மெஸர்ஸ் பக்கில், பென்னிங்டன், வீவானர் முதலிய கலெக்டர் துரைமார்களும் நாட்டிலுள்ள சகல கனதனவான்களும் இவர்கள்பால் பாராட்டிக் காட்டிய அருமை பெருமைக் குறைவில்லை. ஆயினும் இவர்கள் ஸ்வ பிரயோஜனம் தேடாது, தேவநாம மகிமையைத் தேடுவோராய்த் தமது சொற்சக்தியை அதற்கென்றே செலவு செய்தனர். பெரியவர் விசேஷமாய் வந்தபோதிலும் ஒடுக்கப்படும் ஏழைக் கிறிஸ்தவர்களின் இக்கட்டுகளைத் தவிர்க்கும்படியாகவே எல்லாம் முயற்சி செய்வதே இவரது முக்கிய கருத்தாய் விளங்கினது. இவர் பக்கம் இவராலே ஸ்தாபகமான பென் ஐயர் புரம் ஆதின் பெரிய தோட்டமும் வாகைக்குளம் கன்யாகுளம் ஆகிய அநாத பாடசாலைகளும், மற்றும் கட்டடங்களும் இன்னும் இவரைக் குறிக்கப் பேசுகின்றன.



மெஞ்ஞானபுரத்தில் ஜீவித்த தம்முடைய சிரேஷ்ட சகோதரனைப் பார்க்கப்போய்த் திரும்பின ஒரு வாரத்திற்குப்பின் இவரும் சுகவீனமாகி வாதவாயு பெலவீனப்பட்டு, எட்டு வாரம்போல் மிக வேதனை அனுபவித்துக் கடைசியில் 1886-ம் ஏப்பிரல் மீ 22உ காலை 3 மணிக்கு அமரிக்கையாய்க் கர்த்தருக்குள் நித்திரையடைந்தனர். இக்கொடிய வேதனை அநுபவிக்கின்ற காலத்தும் தம்மைச் சந்திக்க வருபவர்க்கு, அவரவர்க்கேற்ற போதனையைத் தமது வாயினால் பகர வியலாதிருக்கும், சிலேட்டில் எழுதி வாசிக்கச் செய்வதன்றி. தமது சுகவீனகால முழுவதையும் ஞானார்த்தமான பாட்டுக்களையும், இனிய செய்யுட்களையும், தேவ வசனங்களையும் இன்புடன் கேட்பதிலும், அவைகளுடன் ஜெபிப்பதிலும் செலவு செய்தார்.

தமது மனைவேதனை, சரீரவேதனை யாவையும் விட்டு ஓய்ந்து தாம் எவ்வளவோ காலம் ஆசித்து, நேசித்து அடிபணிந்து தெண்டனிட்டுத் தொண்டுசெய்த ஜீவ இறைவனோடு தற்சமயம் அந்தியந்த நித்திய பேரின்ப வாழ்வைச் அநுபவித்துக்கொண்டிருக்கின்றனர்.

E. S. NULLIAH.

---

பாளையங்கோட்டை.

1896-ம் ஆகஸ்டு மீ 10உ.

பிரியமுள்ள பால் பீற்றர் அம்மாளுக்கு:—

கொஞ்சநாளைக்குமுன் சிவிலிபுத்தூரில் தங்களுடைய தாயாரை நான் சந்தித்து பல சங்கதிகளைக்குறித்து சம்பாஷித்துக்கொண்டிருக்கிறபோது என்னுடைய சிநேகிதரும் தங்கள் பிதாவுமான வேதநாயகம் ஐயரவர்களுடைய ஜீவிய விருத்தாந்தத்தைப்பற்றி நீங்கள் எழுதிக்கொண்டிருப்பதாய்க் கேள்விப்பட்டு என்னுடைய வெகுகால பழக்கத்தில் அவர்களிடத்தில் கவனித்த சில முக்கியமான குறிப்புகளை இதனடியில் விவரித்திருக்கிறேன்.

1. சுமார் இருபது வருஷங்களுக்குமேல் அவர்களுக்கும் எனக்கும் பழக்கமுண்டு. ஒன்றான மெய்த்தெய்வத்தை ஆவியிலும் உண்மையிலும் சேவிக்கவேண்டுமென்றும், உலகமுழுவதும் பாவங்களுக்காக இயேசுரட்சகரின் நாமத்தைத் தவிர, வேறு நாமமில்லையென்றும், இயேசுரட்சகருக்கு அடிமைப்பட்ட தொண்டர்களில் சிலர் உத்தமர்களாயிருக்கிறார்களென்றும் நானறிந்தபிறகு அப்படிப்பட்ட மெய்க்கிறிஸ்தவர்களுடைய அன்பும் சிநேகமும் சம்பாதிக்க வேண்டுமென்று நான் அபேட்சித்தேன். அந்தக்காலத்தில் கனம்: வேதநாயகம் ஐயரவர்களைப்பற்றி சில ஜனங்கள் என்னிடத்தில் சாட்சி பகர்ந்தார்கள். அப்பால் அவர்களை நேரில் நான் கண்டபோது அது உண்மையென்று நானும் நன்கு மதித்திருந்தேன்.

2. சீர்மை தேசத்தில் அநேக மெய்க்கிறிஸ்தவர்கள் இருக்கிறதாக வாசித்தும் கேட்டுமிருக்கிறேன்; அவர்களிலொருவரும் நற்குணம், நல்லொழுக்கம் முதலியன பொருந்திய உத்தம கிறிஸ்தவருமான கனம்: ராக்லெண்ட் ஐயரவர்கள் வட திருநெல்வேலியிலிருந்து அநேகருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததுடன், கிஞ்சித்தும் பழுதற்ற பரிசுத்த முன்மாதிரியும் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பரிசுத்தமானவர்களுடன் வெகுகாலந் சஞ்சரித்த கனம்: வேதநாயகம் ஐயரவர்களும் அன்பு, பொறுமை, தாழ்மை, பிறர் சிநேகம், மெய்த்தெய்வபக்தி, உண்மை என்ற நற்குணங்கள் பொருந்தினவர்களாயிருந்தார்கள். அநேகர் வாயினால் கிறிஸ்துமார்க்க சத்தியங்களைப் பிரசங்கித்தாலும் நடத்தை அதற்கு ஒவ்வாததாயிருக்கிறது. இந்த ஜில்லாவில் பணத்திலும், கனத்திலும், செல்வாக்கிலும் எட்டியாபுரம் ஜமீன் பேர்போனது. மேற்படி ஜமீனின், மாஜி ஜமீன்தாரவர்கள் இந்துமார்க்கத்தில் மிக வைராக்கியமுள்ளவர்கள். அவர்களுடைய குல தெய்வமான சுப்பிரமணிய சுவாமி கோவில் கழுகுமலையிலிருக்கிறது. மேற்படி கழுகுமலை கனம்: வேதநாயகம் ஐயரவர்களுடைய சரகம். அங்குள்ள கிறிஸ்தவர்கள் ஜெபாராதனைக்காக மேற்படி சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் சமீபமான இடத்தில் C. M. S. மிஷனுக்காக ஒரு நிலம் கிரயத்துக்கு வாங்கினார்கள். இந்தச் சங்கதி தெரிந்த பின் மேற்படி எட்டியாபுரம் ஜமீன்தாரவர்கள் கிறிஸ்தவர்களை இம்சை செய்யவும், மேற்படி இடத்தில் கிறிஸ்தவர்களுக்கென்று ஆலயத்தைக் கட்டவிடாமல் விரோதத்திற்கு ஆரம்பமாக ஏற்பாடு செய்து கிரிமினல், சிவில் முதலான கோர்ட்டுகளில் பலவகையாக வழக்கு செய்யவும் எத்தனித்தபோது, மேற்படி இடத்தில் கிறிஸ்தவர்களுக்காக ஜெபாலயம் கட்டுவதால் உண்டாகக்கூடிய சௌகரியும், அசௌகரியத்தையும், நன்மை தீமைகளையும், இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் உண்டாகக்கூடிய கொடிய பகையையும் ஆலோசித்து மேற்படி ஜமீன்தாரவர்களுடைய வேண்டுகோளுக்கு இசைந்து மிஷனுக்காக கிரயத்திற்கு வாங்கியிருந்த இடத்தை ஜமீன்தாருக்கு விட்டுக்கொடுத்து, ஊருக்கு சமீபமாயும், கிறிஸ்தவர்களுக்கு வசதியாயுமுள்ள இடத்தில் ஜமீன்தாருக்கு விட்டுக்கொடுத்த நிலத்திற்கு பர்த்தியாக ஒரு நிலம் வாங்கிக்கொண்டார்கள். அதில் தேவாலயம் கட்டி யாதொரு கலகமன்னியில் சமாதானமாய் நாளது வரையும் ஜெபம் நடந்துவருகிறது. மார்க்க விர்த்திக்கும் ஏதுவாயிருக்கிறது. இது மேற்படி கனம்: வேதநாயகம் ஐயரவர்கள் செய்த உத்தம ஏற்பாட்டில் ஒன்று என்று சொல்லவேண்டும்.



3. பொதுவாய் இந்துக்கள் இருக்கிற கிராமங்களில், அவர்கள் ஆக்ஷேபிக்கிற இடத்தில் கிறிஸ்தவர்கள் தேவாலயம் பள்ளிக்கூடம் இவைகளுக்காக நிலம் வாங்கி கட்டடம் கட்டினால், அதனால் இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஓயாத பகையும், கிரிமினல் சிவில் முதலிய இடங்களில் நீடித்த வழக்கும், அநேக பொருட்செலவும் உண்டாவது வழக்கம். அப்படிச் செய்வது இயேசு ரக்ஷகரின் மெய்யுபதேசத்திற்கு நேர்விரோதம். கனம்: வேதநாயகம் ஐயரவர்கள் மேற்படி காரியத்தை ஞான

மாயும், உண்மையாயும் முடித்தார்களென்பது இப்பால்
நடந்திருக்கிற சம்பவத்தால் வெளியாகும். முன் சி.
எம். எஸ். மிஷனுக்கு வாங்கிய இடத்திற்கு சமீபமாய்
இப்பொழுது ரோமான் கத்தோலிக் சபையார் ஒரு நிலம்
வாங்கி கோவில் கட்டியதால் மேற்படி இடத்தில் சென்ற
வருஷம் நடந்த தேரோட்ட உற்சவத்தில் இருபக்கத்
தார்களுக்கும் கலகமும், அநேக பழிகளும், உயிர்ச்
சேதம், பொருட்சேத முதலானவைகளும் நடந்திருக்
கிறது. பிடித்த பகைக்கும் காரணமாயிருக்கிறது. இது
கிறிஸ்துமார்க்க விர்த்திக்கு ஏதுவா?

4. மேற்படி எட்டியாபுரத்தில் கிறிஸ்தவர்களுக்குள்
சிறப்பான ஓர் கலியாணம் நடந்தது. அதில் பல அந்தஸ்
துள்ள அநேக கிறிஸ்தவர்கள் வந்திருந்தார்கள். இவர்க
ளெல்லாரும் ஏகோபித்து போஜனம் பண்ணுவதில்
மனஸ்தாபத்திற்கும், குழப்பத்திற்கும், மனவருத்தத்
திற்கு மிடமுண்டாகக் கூடியதாயிருந்தது. அப்பொழுது
அக்கலியாணத்திற்கு வந்திருந்த கனம்: வேதநாயகம்
ஐயரவர்கள் ஞானமாயும், பொறுமையாயும் செய்த சில
ஏற்பாடுகளினால் எல்லாம் சமாதானமும், சந்தோஷமு
மாய் முடிந்தது. அதாவது தாமும், தன்னுடைய சிநே
கிதர்களும், சந்தோஷமாயும் உற்சாகமாயும் யார் யார்
தாழ்ந்தவர்கள் என்று எண்ணப்பட்டார்களோ அவர்க
ளுடன்கூட பந்தியிருந்து போஜன பானம் செய்தார்கள்.
அவர்கள் அப்படிச் செய்ததினால் கிறிஸ்தவர்களுக்குள்
ளிருக்கவேண்டிய அன்பும் தாழ்மையும் இன்னதென்று
காட்டியதுமன்றி கிறிஸ்துமார்க்க உத்தம உபதேசத்தை
யறியாத மற்ற கிறிஸ்தவர்களுக்கு உயர்வு, தாழ்வு
என்று பாராட்டும் குணம் கிறிஸ்தவர்களுக்கு அடா
தென்று தன்னுடைய நல்மாதிரியினால் காட்டினார்கள்.
இது அநேக பிரசங்கங்களைவிட பிரயோஜனமுள்ளது.

5. வட திருநெல்வேலியில் அநேகம் பாலியர்கள்
குணப்படுவதற்கு ஏதுவாயும், நல்ல கைத்தொழில் கற்
றுக்கொள்வதற்கு ஏதுவாயும், புதிதாய் கைத்தொழிற்
பள்ளிக்கூடம் ஒன்று ஏற்படுத்தியிருந்தார்கள். அதில்



பலஜாதிப் பிள்ளைகள் வந்து கைத்தொழில் பழகி கிறிஸ்
தவர்களாகி யிருக்கிறார்கள். மற்றும் சிலர் படித்து
மிருக்கிறார்கள். கனம்: வேதநாயகம் ஐயரவர்கள் மேற்
படி பள்ளிக்கூடத்திற்காக எடுத்த பிரயாசை அதிகம்.

6. அவர்கள் மேல்விசாரணைக்குட்பட்ட வட திருநெல்
வேலியில் உயர்ந்த ஜாதியிலிருந்து அநேகர் கிறிஸ்
தவர்களாயிருக்கிறார்கள்.

7. பாளையங்கோட்டைக்கு சங்கம் முதலிய கூட்டங்
களுக்கு வரும்பொழுது, என்னுடன் தங்கியிருப்பா
ருண்டு. அக்காலங்களில் ஜெபதபம் முதலிய நல்லொழுக்
கங்களைப்பற்றி பல உத்தம சம்பாஷணைகள் செய்வார்
கள். அப்பொழுது அவர்கள் சொற்படி வழங்கிய ஒரு
குடும்ப ஜெபப் புஸ்தகத்தை இன்னும் உபயோகித்து
பலன் அடைந்து வருகிறோம்.

இப்படியாக நல்லாலோசனைகளால் தங்கள் சிநேகிதர்
களுக்கும், அவர்கள் குடும்பத்திற்கும் உதவிசெய்து
வந்திருக்கிறார்கள்.

தங்களின் உண்மையுள்ள
N. S. சுப்பாசாமி.

---

கனம்: ஆர்டன் ஐயரவர்கள் எழுதியிருக்கிறது.

C. M. S. செக்ரெத்தேரியாகிய கனம்: ஆர்டன்
ஐயரவர்கள் 1880-ம் டிசெம்பர்மீ வட திருநெல்வேலி
யில் கனம்: வீ. வேதநாயகம் ஐயரவர்கள் விசாரணைக்
குட்பட்ட இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்தபின்
அவர்கள் எழுதிய ரிப்போர்ட்டில் திருநெல்வேலியின்
வடசேகரங்களைப்பற்றியும், கனம்: வேதநாயகம் ஐயரவர்
களைப்பற்றியும் அவர்கள் எழுதியிருக்கிறதைச் சுருக்க
மாய் இங்கே எடுத்துக்காட்டுகிறோம்.

தற்காலத்தில் இந்தியா முழுமையிலுமுள்ள எல்லா
மிஷன் சேகரங்களைப்பார்க்கிலும் வட திருநெல்வேலி
அதிக முக்கியமானதென்றே சொல்லவேண்டும். காலம்

சென்ற நம்முடைய பிரிய சகோதரனாகிய கனம்: ராக்லென்ட், பென் என்னும் ஐயர்மாருடைய மகிமையான பேர்களோடு சம்பந்தப்பட்டிருப்பதினால் மாத்திரமல்ல அதினுடைய தற்கால நிலைமையைக் கவனித்துப் பார்க்கும்போது நமக்கு நம்பிக்கையையும், சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய அநேக காரியங்கள் அதிலிருந்து விளையுமென்று தோன்றுகிறதால் அங்கே நடக்கிற மிஷன் வேலைகளை விருத்தியாக்கி அதிகரிக்கச் செய்வதில் நாம் விசேஷித்த முயற்சிகள் எடுக்கவேண்டுமென்றும் தோன்றுகிறது. இலட்சத்து எழுபதினாயிரம் ஜனத்தொகையுள்ள இந்தச் சேகரத்தில் ஐயாயிரம்பேர் மாத்திரம் கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள். இவர்கள் பிராமணர், மறவர், ரெட்டி, சாணார், செட்டிகள் முதலிய இருபத்தொன்பது வெவ்வேறான ஜாதிகளிலிருந்து கிறிஸ்துமார்க்கத்துக்கு வந்தவர்கள். ஏறக்குறைய மூவாயிரம்பேர் பஞ்சமர்.

வட திருநெல்வேலியைச் சார்ந்ததான இன்னொரு விசேஷம் என்னவென்றால், இந்தச் சேகரம் முழுவதும் ஒரு சுதேசியினுடைய விசாரணைக்குட்பட்டிருக்கிறது. அநேக வருஷக்காலங்களாய்க் கனம்: ராக்லென்ட், பென் ஐயர்மாரோடு தேசாந்தரவேலை பார்த்துவந்த கனம்: வீ. வேதநாயகம் ஐயர் இந்தச் சேகரம் முழுவதுக்கும் சூப்பிரின்டென்டிங் பாஸ்டராகவிருக்கிறார். இந்தச் சேகரத்திற்கு இன்னும் அநேக மிஷன் உத்தியோகஸ்தர்கள் தேவையாயிருக்கிறது. சீக்கிரத்தில் கமிட்டியார் பாஸ்டர்மாரின் தொகையையும் அதிகப்படுத்துவார்கள் என்று நம்புகிறோம். அநேக இடங்களில் சுதேசக் கிறிஸ்தவர்கள் தகுந்த கோவில்களைக் கட்டும்விஷயத்தில் அவர்களுக்குத் தாராளமான பண உதவியும் வேண்டியதிருக்கிறது.

பொதுவாய் வட திருநெல்வேலியில் நடந்துவருகிற வேலையைக் கவனிக்கும்போது நமக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதும் நாம் தேவனுடைய நாமத்திற்கு



மகிமை செலுத்துவதற்கும் ஏதுவான அநேக காரியங்கள் உண்டென்று தோன்றுகிறது. இந்தச் சேகரத்தின் வேலை அதிக ஊக்கமான ஜெபத்தோடும், சுய வெறுப்போடும், அதிக ஜாக்கிரதையோடும் ஆரம்பமானது.

ராக்லென்ட் ஐயரும் அவருடைய உடன் வேலையாட்களும் செய்த ஜெபங்களுக்குப் பதில் கிடையாமற்போகவில்லை. தானியம் நிலத்தில் விழுந்து அழுகி இப்போது நல்ல கனி கொடுக்கிறது. முதல் முதல் கிறிஸ்துமார்க்கத்தை இவ்விடங்களுக்குக் கொண்டுவந்த பிரசங்கிகளுக்கு நேரிட்ட விரோதம் இப்போது இல்லை. சுவிசேஷ வசனத்தை ஜனங்கள் பொறுமையோடும் அநேக சமயங்களில் தகுந்த வணக்கத்தோடும் கேட்கிறார்கள். சத்தியவேதப் புஸ்தகங்களையும், மற்றும் பிரதிகளையும் ஜனங்கள் தாராளமாய் வாங்குகிறார்கள். அநேக கிராமங்களில் ஜனங்கள் கிறிஸ்துமார்க்கத்தை அறிய வேண்டுமென்று விரும்புகிறார்கள். சுவிசேஷத்தைக் கேட்கப் பொறுக்காத ஜாதியார் இப்போது கிறிஸ்தவக் கோவில்களைக் கட்டுவதற்குப் பண உதவி செய்கிறார்கள். கிறிஸ்துமார்க்கத்தை ஒரு சத்துருவைப்போல விரோதித்த ஜமீன்தார்களான பெரியோர் இப்போது கிறிஸ்துமார்க்கம் தங்களுடைய குடிஜனங்களைப் பழுதாக்கிப்போடாமல் அவர்களை முன்னிலும் அதிக நல்ல வேலைக்காரராக்கி தங்களுடைய கடமைகளை உண்மையோடு உத்தமமாய் நடத்திவர ஏவிவிடுகிறதென்று காண்கிறார்கள். வயல் எல்லாம் அறுப்புக்கு ஏற்றதாய்க் காணப்படுகிறது. கிறிஸ்துவின் ராஜ்யம் பரம்புவதை விரும்பும் எல்லாரும் புது ஊக்கத்தோடுமாத்திரம் வேலை செய்வார்களானால், நல்ல பலன் கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

வட திருநெல்வேலி முழுமையிலுமுள்ள மிஷன் வேலை ஒரு சுதேசியினுடைய விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர் தம்முடைய வேலையைத் தேவ கிருபையினால் உத்தமமாயும், உண்மையாயும்

பார்த்துவருகிறாரென்பதையும் நாம் கவனிக்கும்போது, நமக்கு உண்டாகிற சந்தோஷம் சாமானியமானதல்ல. தற்சமயத்தில் வடதிருநெல்வேலியில் ஒரு ஐரோப்பிய மிஷனெரியாவது இல்லாவிட்டாலும் இந்தச் சேகரத்தைப்போல வேறெந்த சேகரமும் நமக்கு நம்பிக்கையையும், சந்தோஷத்தையுங் கொடுக்கிறதாகக் காணோம். இந்தியா முழுவதும் கிறிஸ்தவ தேசமாகவேண்டுமானால் அது இந்தியாவின் சொந்த ஜனங்களாலேயே ஆக வேண்டுமென்று அடிக்கடி சொல்லப்படுவதுண்டு. இதுவும் வாஸ்தவந்தான் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஐரோப்பிய மிஷனெரிமார் இத்தேசத்தில் பலமுள்ளதும் மகிமை நிறைந்ததுமான வேலையை தேவ உதவியினால் ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் அதிககாலத்திற்கு அவர்கள் இங்கே இருந்து முக்கியமாய் சுவிசேஷக் கட்டியக்காரராயிருந்து கிறிஸ்து சபையோடு சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடங்களையும் மற்றுங் காரியங்களையும் மேல்விசாரணைசெய்துவருவது அவசரமாயிருக்கும். அஞ்ஞான மார்க்கங்களிலிருந்து புதிதாய் கிறிஸ்துமார்க்கத்துக்கு பலர் வந்திருந்தாலும், அவர்கள் இன்னும் எத்தப்பக்கத்திலும் அஞ்ஞானிகளாலும், அஞ்ஞானப் பழக்க வழக்கங்களினாலும் சூழப்பட்டிருக்கிறதினால் கிறிஸ்துமார்க்கத்திலே பிறந்து, கிறிஸ்தவ தேசத்தில் சிறுபிராயமுதல் கிறிஸ்தவ பழக்க வழக்கங்களினால் வளர்ந்துவந்த ஜனங்களைப்போலிருப்பார்களென்று நாம் எண்ணுவது எப்படிக் கூடாதகாரியமோ, அப்படியே ஒரு சுதேசி தன் தேசத்து ஜனங்களுடனே நெருங்கிப் பழகி அவர்களுடைய பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்வதுபோல ஒரு அந்நியன் கற்பது கூடாதகாரியமாயிருப்பதினாலே, அநுபோகஸ்தரான சுதேச கிறிஸ்தவர்களைப் படிப்படியாய் சுயாதீனமும், உத்தரவாதமுமான நிலைமைக்குக் கொண்டுவருவதைப்போல அநுகூலமான வழி வேறொன்றுமில்லை.

• நாம் காரியங்களை எப்படி சரியானபடி நடத்திவருகிறதென்று தகுதியான வழி வகையைக் கண்டுபிடிக்



கும் கஷ்டம் எப்படி மிஷனெரிக் கூட்டங்களுக்கு உரியதோ, அப்படியே தனித்தனியான மிஷனெரிமாருக்கும் உரியது. அதினால் ஒரு ஐரோப்பிய மிஷனெரியுடைய நிலைமையை அதிகமாகப் பாவித்து எல்லா அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்துவிடாமலும், சுதேசக் கிறிஸ்தவர்களைத் நிரயோகியாமல் சடுதியிலே உயர்த்தாமலும் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும். வடதிருநெல்வேலியின் தற்கால நிலைமையை நாம் கவனிக்கும்போது இவ்வளவு முக்கியமான வேலை நடத்துவதற்கு ஒரு சுதேச போதகர் தகுதியுள்ளவராய்க் காணப்படுகிறாரென்று பார்க்கிறோம். அநேக வருஷக் காலங்களாய் பக்திமானான கனம் ராக்லென்ட் ஐயரோடு தேசாந்தரியாய் வேலைசெய்யச் சலாக்கியம் பெற்ற இவர் அவருடைய சிறந்த மாதிரிகளை முக்கியமாய் அவருடைய ஊக்கத்தையும் சுயவெறுப்பையும் எவ்வளவாய் பின்பற்றியிருந்திருப்பாரென்று அதிசயப்பட வேண்டியதேயில்லை. நான் கனம் வேதநாயகம் ஐயரோடு பின்னிட்டகாலத்தை எவ்வளவு சந்தோஷமாய்க் கழித்தேனென்றாவது, அவருடைய விசாரணைக்குட்பட்ட வேலையிலே எனக்கு எவ்வளவு கரிசனையிருந்ததென்றாவது அவருக்குக் கிடைத்த காரியசித்திக்காக நான் தேவனுக்கு எவ்வளவு நன்றியறிதல் செலுத்தினேனென்றாவது நான் சொல்லத் தேவையில்லை. அவர் தம்முடைய முக்கியமான வேலையை நீடித்த நாட்களாய் நடத்திவரும்படி அவரை ஆசீர்வதித்து தேவனுடைய மகிமைக்கும், சனத்திற்கும் ஏதுவான நல்ல பலன்களை அநுபவிக்கும்படியாக அவரை அதிகமதிகமாய் உற்சாகப்படுத்தும்படி நான் அதிக ஊக்கமாய் ஜெபம் செய்துவருகிறேன்.

### திருநெல்வேலியிலுள்ள ஓர் சுதேசக் குருவானவர் காலஞ்சென்ற கனம்: வீ. வேதநாயகம் ஐயரவர்களைப்பற்றி எழுதுகிறதாவது:

நான் கிறிஸ்தவனான காலமுதல் அவர்களுடைய மரணபரியந்தம் அவர்களை நன்றாய் அறிவேன். நான் கிறிஸ்தவனாக வேண்டுமென்கிற அபிப்பிராயத்தை வெளிப்படையாய் அறிக்கையிட்டகாலத்தில் என்னைப் பார்க்கும்படியாய் என் ஊருக்கு அவர்கள் வந்தபோது தான் நான் அவர்களை முதல்தடவையாய்ப் பார்த்தேன். அதுமுதல் அவர்களுடைய மரணகாலபரியந்தம் அடிக்கடி எனக்கும் அவர்களுக்கும் காகிதப் போக்குவரத்துண்டு. எங்களுக்குள் ஆரம்பமான பழக்கம் அன்பும் அந்நியோந்நியமுமான சிநேகமாக மாறிற்று. கனம்: வீ. வேதநாயகம் ஐயரவர்கள் விரும்பப்படத்தக்க அநேக நல்ல குணங்களை உடையவர்களாயிருந்தார்கள். அவர்களோடு அரைமணி நேரமாத்திரம் சம்பாஷணை செய்த ஒருவன் அவர்களை விரும்பாமற் போவது கூடாதகாரியம். அவர்களைப் பார்த்தபோதே அவர்களை நேசிக்க ஏவப்படுவான். அவர்களுடைய களங்கமற்ற குணமும், பரிசுத்தமான ஜீவியமும், எவ்வகைப்பட்ட ஜனங்களும் அவர்களை விரும்பும்படி செய்தது. அவர்கள் எனக்கு எழுதின காகிதங்களில் அநேகத்தை நான் பத்திரம் பண்ணியிருந்தாலும் அவர்களுடைய குணநிசயங்களைத் தெளிவாய்க் காட்டும் சில கடிதங்களிலிருந்து சிலவற்றை மாத்திரம் இங்கே எடுத்துக் காட்டுகிறேன்.

(1) புறமதஸ்தர் கிறிஸ்தவர்களாக வேண்டுமென்கிற வாஞ்சையும், ஆத்துமாக்கள் ஆதாயமாகிறபோது அவர்களுக்கிருக்கும் பேரானந்தமும் அதிகம். நான் ஞானஸ்நானம் பெற்ற துவக்கத்தில் அவர்கள் பின்வரும் காகிதத்தை எனக்கு எழுதினார்கள்.

"என் பிரிய சிநேகிதனே, உம்முடைய ஞானஸ்நானத்தைப்பற்றி யறிந்து மிகவும் சந்தோஷப்பட்டேன்.



கிறிஸ்துவினாலுண்டாகும் சொல்லிமுடியாத ஆறுதல் உமக்குக் கிட்டினது உமக்கு எவ்வளவு பெரிய நன்மை. ஒருபோதும் இந்த நன்மையை நீர் இழந்துவிடக்கூடாது என்பது என்னுடைய விருப்பம். உம்முடைய கீர்த்தியும் சந்தோஷமும் எப்போதும் கிறிஸ்துவைச் சார்ந்ததாகவே யிருக்கட்டும். நாம் கிறிஸ்துவில் அவரோடு, அவரைப்போல, அவருக்காகப் பிழைத்தால் நாம் எவ்வளவு பாக்கியசாலிகளாயிருப்போம். அப்படி யிருந்தால் பாவமும் துக்கமும் நிறைந்த இந்த உலகத்தை விட்டுப் பிரிய நாம் பயப்படாமல் சதாகாலமும் அவரோடுகூட வாழுவோம். சாவும் நமக்கு ஆதாயமாகும். நீர் எப்போதும் விழித்திருந்து ஜெபம் செய்யும்படி தேவன்தாமே கிருபை செய்வாராக."

(2) அவர்களுடைய சிநேகிதனை உண்மையாயும், மாயமற்றவிதமாயும் நேசிப்பார்கள். வேறொரு கடிதத்தில், "என் பிரிய சிநேகிதனே, வெகுகாலத்திற்குப் பிற்பாடு உம்முடைய கடிதம் கிடைத்தது எனக்கு அதிக சந்தோஷம். நான் உம்மை மறக்கவேயில்லை. அடிக்கடி அதிக சந்தோஷத்தோடு நான் உம்மை நினைப்பதுண்டு. தேவன் தம்முடைய பெரிதான இரக்கத்தினால் எப்போதும் உம்மோடுகூடவிருந்து ஆத்துமப்பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும் உம்மை ஆசீர்வதிப்பாராக," என்று எழுதியிருந்தது.

(3) அவர்கள் ஜெபக்குணமுள்ளவர்களாயுமிருந்தார்கள். தெய்வபக்தியுள்ள எல்லாரையும்போலவே ஜெப மனிதனாயிருந்தார்கள். விடுமுறை நாட்களில் அடிக்கடி அவர்கள் வீட்டிற்குப் போய் சில நாட்களை அவர்களோடு பின்னிடும் சந்தோஷம் அநேகதடவை எனக்குக் கிடைத்தது. ஒவ்வொரு தடவையிலும் நான் தவறாமல் கவனித்து வந்தகாரியம் என்னவென்றால், ஒவ்வொருநாள் அதிகாலையிலும் தேவனோடு கொஞ்சநேரம் பின்னிட்டு அந்தந்த நாளுக்கு வேண்டிய அவரது பெலனைப் பெற்றுவருவார்கள். "என்னுடைய ஜெபம் குறைவுள்ளதாக இருந்தாலும் ஒவ்வொருநாளும் மற

வாமல் உம்மை தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக நிறுத்திவருகிறேன் என்றும், தேவன் உம்மைத் தம்முடைய பிரசன்னத்தினால் நிரப்பி உமக்கு ஆத்தும சரீர நன்மைகளைப் பொழியும்படி மன்றாடிவருகிறேன்" என்றும் ஒரு கடிதத்தில் எழுதியிருந்தார்கள்.

(4) பிள்ளைகளை அதிகமாய் நேசிப்பார்கள். அவர்களுடைய மக்களில் ஒருவர் சரியாய் படிக்கவில்லையென்று கேள்விப்பட்டபோது எனக்கு அதைப்பற்றி அவர்கள் எழுதினதாவது, "என்னுடைய மகனைப்பற்றிய கவலை என் நெஞ்சைப் பிளக்கிறது. அது என் மனதுக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்ததினால் மறுநாள் எனக்குக் குளிர்சுரம் கண்டது என்றும், தன் மகன் சரியாய்ப் படிக்கிறதாகக் கேள்விப்பட்டபின் எழுதின வேறொரு கடிதத்தில், "என் பிள்ளை விடாமுயற்சியோடு தன் முழுக்கவனத்தையும் செலுத்தி பாடங்களைப் படித்து வருகிறான் என்று நான் கேட்கும்போது, ஆ! அது எனக்கு எவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கிறது," என்று எழுதியிருந்தார்கள். அவர்கள் தேவன்பேரில் உறுதியான நம்பிக்கையும் விசுவாசமுள்ளவர்களாயு மாத்திரமல்ல, ஆவிக்கடுத்த காரியங்களில் அநேக சிறந்த குணங்களும் அவர்களில் காணப்பட்டது. தேவனுடைய வல்லமை அவர்களில் காணப்பட்டதென்று மெய்யாகவே அவர்களைப்பற்றிச் சொல்லலாம். தன்னுடைய பாரங்களையும் கவலைகளையும் தேவன்பேரில் போட்டுவிட்டு விசுவாசத்தோடே அவர்கள் பேசும் வார்த்தைகள் கேட்கிறவர்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும்.

(5) மன்னிக்கும் சுபாவமும் அவர்களில் காணப்பட்டது. காரியசித்தியுள்ள நல்ல மனிதர்களுக்கு சத்துருக்கள் இருப்பதுபோல இவர்களுக்கும் அநேக சத்துருக்களிருந்தார்கள். ஆனாலும் சத்துருக்களுக்குச் சரிக்குச் சரிகட்டாமல் மன்னிக்கிற குணமும், தீமைக்கு நன்மை செய்யும் குணமும் அவர்களில் விசேஷித்து விளங்கினது. அற்பமும் இழிவுமான எல்லா



வற்றையும் தள்ளி சிறந்ததும் உயர்ந்ததுமான விஷயங்களை நாடித் தேடுவார்கள்.

(6) கடைசியாக, மற்றவர்களுடைய நன்மையை அதிகமாய் விரும்புவார்கள். தற்காலத்திலுள்ள அநேகரைப்போல சுய நேசமும், தற்பெருமையுமுள்ளவர்களாயும் நடவாமல் எப்போதும் மற்றவர்களுடைய நன்மையைக் கருதியே நடப்பார்கள். ஏழைகளை நேசித்து அவர்களுக்கு இரங்குவார்கள். தங்களைச் சுற்றியிருக்கும் ஜனங்களுக்கு ஆசீர்வாதமாகவும் கிறிஸ்துவின் நாமத்தின் மகிமைக்கென்றும் தேவன் நம்முடைய சபைகளில் இவர்களைப்போலொத்த அநேக ஊழியக்காரரை அனுப்புவாராக.

## 5. முடிவுரை.

இதை வாசிக்கும் பிரிய சிநேகிதரே! இம்மட்டும் என் தகப்பனாரின் ஜீவிய விருத்தாந்தத்தைப்பற்றி ஆதிமுதல் அவர்களை அறிந்த சிநேகிதர்களின் வார்த்தைகளைக்கொண்டும், அவர்களுடைய சொந்த வார்த்தைகளைக்கொண்டும், அவர்கள் நடபடிக்கைகளை நான் அறிந்தமட்டிலும் சுருக்கமாய் எழுதினேன். இனிமேல் கடைசிப்பாகத்தில் அவர்களைப்பற்றிய அபிப்பிராயத்தை, என் சொந்த வார்த்தைகளைக்கொண்டு எழுதி முடிக்காவிட்டால் அதில் பிரயோஜனமிராதென்று எண்ணிச் சுருக்கமாய் இரண்டொரு காரியங்களை எழுத விரும்புகிறேன். என் அருமைத் தகப்பனாரின் ஜீவியத்தைப்பற்றியெழுத நான் கொஞ்சமாகிலும் தகுதியுள்ளவனல்ல; என் மனதில் நான் நினைத்தவனுமல்ல. நான் நினையாத பிரகாரம் இம்மட்டும் இந்த வேலையைத் துவக்கிக் கடைசிப் பாகத்தையும் முடிக்கும்படி தேவன் கிருபை செய்தார். இன்னும் முற்றிலும் தேவன் தமது கிருபையைத் தந்து இதைக் குறைவறச் சரியாய் எழுதிமுடிக்கவும்

விசேஷமாய் இதை வாசிக்கும் சகோதரர், சகோதரிகள், பிள்ளைகள் யாவருக்கும் இது பிரயோஜனமாயிருக்கவும், இதினால் அநேகர் தங்கள் நடக்கைகளைக் கவனித்துப் பார்த்து தங்களை முற்றிலும் அவருடைய ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுக்கும்படி ஏவப்பட இது ஒரு கருவியாயிருக்கவும் தேவன் கிருபை செய்வாராக!

இந்த ஜீவியத்தை நான் எழுதும்படி என்னை ஏவிவிட்ட காரணத்தை நான் முதலாவது எழுதுவது அவசியம். 1894-௵ மரித்துப்போன என் சகோதரியின் மூத்தமகள் வியாதிப்படுக்கையிலிருந்தபோது நடந்த சம்பவங்களைப்பற்றிச் சுருக்கமாய் எப்படியும் அச்சிடவேண்டுமென்றும், அப்படி அச்சிட்டால் அவளைப்போலொத்த வாலிபருக்குப் பிரயோஜனமுமாயிருக்குமென்றும், அடிக்கடி என் மனதில் ஒரு எண்ணமுண்டாயிற்று. ஒருநாள் எங்கள் வீட்டிற்கு சில சிநேகிதர் வந்திருந்த சமயத்தில் இதுவிஷயத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்போது இந்த நோக்கத்தை அவர்களறிந்து சந்தோஷப்பட்டதோடு, பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடைசி ஊழியமாகிய இப்போர்ப்பட்ட சிறந்த வேலையைச் செய்யும்படி ஏவிவிட்டார்கள். அவ்வித ஆசீர்வாதத்தை அவர்களும் பெற்றவர்களாயிருந்தபடியால் நீங்கள் ஏன் உங்கள் தகப்பனாருடைய ஜீவியத்தைப்பற்றி எழுதக்கூடாதென்று என்னிடம் கேட்டார்கள். அவர்கள் கேட்டது முதலில் எனக்கு விபரீதமாய்க் காணப்பட்டபடியால், உடனே நான் அது என்னால் முடியுமா? இந்தப் பெரிய வேலையைச் செய்ய நான் தகுந்தவளா? அது என்னால் முடிகிற காரியமல்லவென்று மறுத்துச் சொன்னேன். மறுபடியும் அவர்கள் நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. இவ்வளவு பிரபலமாய் சுவாமிக்கு ஊழியஞ்செய்தவர்களுடைய ஜீவிய சரித்திரத்தை இதுமட்டும் எழுதாதிருந்தது சரியல்ல. நீங்கள் பிரயாசப்பட்டால் எப்படியும் சித்திபெறலாமென்று திரும்பவும் ஊன்றச் சொன்னார்கள். அந்நிமிஷமே, தேவ உதவியை முன்னிட்டு எப்படியும் பிரயா



சப்பட வேண்டுமென்கிற எண்ணம் என் மனதிலுண்டாயிற்று. அதினால் அவர்களிடம் இந்தச் சிறு பெண்ணின் சரித்திரத்தை முதலாவது எழுதிக்கொள்ளட்டும், அதன்பின் பிரயாசப்படுகிறேனென்று சொன்னேன். அப்படியே தேவ உதவியால் 1895-௵த்தில் அந்தப் புஸ்தகம் எழுதி அச்சிட்டு முடிந்தது. ஆண்டவர் அந்தச் சிறு புஸ்தகத்தின் மூலமாய் அநேக சிறு பெண்களுக்கும், வாலிபர்களுக்கும் தமது ஆவியை ஊற்றி, அவர்களும் மரணமாகிய கடைசிச் சத்துருவுக்கு சற்றும் பயமில்லாமல் ஆயத்தமுள்ளவர்களாய் இப்போதே தங்களுடைய நடத்தையைச் சீர்படுத்தி, காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்ள, தேவன் கிருபை செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

எங்கள் தகப்பனாரின் ஜீவியத்தை நான் எழுத முயன்றது, எங்கள் மகிமைக்கும், கீர்த்திக்குமாகவல்ல, முதலாவது நாங்களும், எங்கள் பின்னடியாரும் அவர்களுடைய பரிசுத்த மாதிரியைக் கவனித்து நடக்கவும், சிறுபிள்ளையைப்போலொத்த களங்கமற்ற அவர்களுடைய குணத்தைப் பார்த்து, சுவாமிக்காக அவர்கள் தங்கள் சுகத்தையும், சௌக்கியத்தையும் பெரிதென்று பாராமல் உழைத்ததை நினைவுகூர்ந்து, அவர்கள் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினதுபோல, நாங்களும் எங்கள் பிள்ளைகளும் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றும்படியாகவும் விரும்பி முயற்சியெடுத்து இதை எழுதத் துணிந்தேன். இதை எழுதத்துவக்கின காலமுதல், அவர்களுடைய குணங்களும், நடபடிக்கைகளும், பேச்சுப் பிரசங்கமும் அதிகமாய் அவர்களை எனக்கு ஞாபகப்படுத்துவதினால் அவர்கள் எனக்கு முன்பாக நிற்கிறதுபோலிருக்கிறது. தகப்பனார் மரித்தவுடனே, எங்கள் இனத்தில் ஒருவர் எழுதிய துக்கக் கடிதத்தில் அவர்களைப்பற்றி, அவர்கள் உலகத்தில் இருந்தும், உலகமின்னதென்று அறியாதிருந்தார்கள் என்று எழுதியிருந்தது. பிள்ளைகளுக்குரிய களங்கமற்ற சுபாவமுடையவர்களென்று, தகப்பனாரிடம் பழகின

வர்கள் திட்டமாய்ச் சொல்வார்கள். இவர்களிடம் சம்பாஷிக்கிறவர்களில் யாராவது வஞ்சகமான மனதுடன் இவர்களோடு பேசினபோதிலும் அதை அறிந்தும் அறியாதவர்கள்போலிருந்துவிடுவார்கள். தனக்குத் தீமை செய்தவர்களானாலுஞ் சரி, தன்னைப்பற்றித் தீதுபேசினவர்களானாலுஞ் சரி, அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற எண்ணமேயொழிய, தீமை செய்ய வேண்டுமென்கிற எண்ணம் கொஞ்சமெனினும் இல்லை. இது என் அருமைத் தகப்பனாரிடம் விளங்கிய ஒரு சிறந்த லட்சணம். இன்னும் அவர்களுடைய குணாதிசயங்களைப்பற்றி, அவர்கள் மரித்தபின் வந்த கடிதங்களில் விளங்கக் காட்டியிருக்கின்றன. ஆனால் நான் இந்தக் கடைசிப் பாகத்தை முடிக்குமுன், என் அருமைத் தகப்பனாரிடத்தில் கவனித்தவைகளும், என் மனதில் பதிந்திருக்கிறவைகளுமான அவர்களுடைய முக்கிய சிறந்த குணங்களில் சிலவற்றை நான் அறிந்தமட்டும் எனக்கும், வாசிக்கிற உங்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும்படி எடுத்துக் காட்டுகிறேன்.

1. அதிகப் பாசம்.—தன்னைப்போல் பிறனையும் நேசிக்க வேண்டுமென்கிற சட்டத்தை அதிகமாய்க் கைக்கொண்டு வந்தார்கள். தன் சபையிலுள்ளவர்களிடத்திலாவது மிஷன் உத்தியோகஸ்தர்களிடத்திலாவது வேலை விஷயமான நேரந்தவிர மற்றக் காலங்களிலெல்லாம் பிள்ளைகளிடத்தில் சம்பாஷிக்கிற விதமாய்த்தான் பேசுவார்கள். அவர்கள் பேசும் வார்த்தையினால் அநேகருடைய மனம் அவர்களை நேசிக்க ஏவிவிடும். தன் மனதிலிருக்கிற பாசத்தைக் கிரியைகளினாலும், வார்த்தைகளினாலும் காட்டுவார்கள். பிள்ளைகளாவது மற்றவர்களாவது சற்றும் கஷ்டப்படச் சகிக்கமாட்டார்கள். முக்கியமாய் பிள்ளைகளின் விஷயத்தில் தாயைப்போல் பாசத்தை அதிகமாய்க் காட்டுவார்கள். இதையிட்டு எவ்வளவு செலவு நஷ்டம் வந்தாலும் யோசிக்கமாட்டார்கள். ஒரு தடவை மெடிக்கல் காலேஜில் படித்துத் தேறிய தன் மூத்தமகனைத் திடீரென்று முன்பின் அறியாத வடதேச



மாகிய நாக்பூர் என்ற இடத்திற்கு மாற்றிவிட்ட செய்தி தந்திமூலமாய்த் தகப்பனாருக்கு வரவே, வீட்டிலுள்ள எல்லாரும் விசனப்படுகிறதைக் கண்டு மனந்தாளாமல் உடனே நீலகிரியிலிருந்து சென்னபட்டணம் கவர்னருக்கு, என [illegible] தெலுங்கு தெரியாத வாலிபன், வடதேச அந்நிய பாஷை, அந்நிய இடம், அவனைத் தயவுசெய்து சொந்த இடத்திற்கு மாற்றுங்களென்று தந்தி மூலமாய்ப் பேசி, ஆண்டவருடைய உதவியினால் கப்பலேறப்போன சமயத்தில் சொந்த இடத்திற்கு மாற்றும்படி ஏற்பாடு செய்தார்கள். பிள்ளைகளாகிய நாங்கள் விவாகத்தினால் பெற்றோரை விட்டுப் பிரிந்து தூரமான இடத்திலிருந்தாலும், அவர்களிடமிருந்து வரும் காகிதங்களைக் கவனித்தால் அவர்கள் முகதாவிலிருந்து சம்பாஷிக்கிறதுபோலிருக்கும்.

2. இளகிய நெஞ்சு.—இப்படிப்பட்ட குணத்தையுடைய இவர்களை இளகிய நெஞ்சையுடைய ஒரு தாய்க்கு ஒப்பிட்டே பேசவேண்டும். எந்த ஏழைக்கும், வருத்தப்படுகிற யாவருக்கும் அதிக இரக்கத்தைப் பாராட்டுவார்கள். பரிதாபத்தை தன் வாயினால்மட்டும் காண்பித்து சும்மாயிருக்கமாட்டார்கள். அதற்கு ஒருவழி செய்தால்மட்டும் இளைப்பாறுவார்கள். இந்தக் குணமிருந்தது பெரும்பான்மை நன்மையாயிருந்தாலும் சிலசில காரியங்களில் நஷ்டமாயிருந்தது. அவர்களிருந்த தேசத்திலுள்ள ஏழைக் கிறிஸ்தவர்களுக்காக, அவர்கள் சொந்தப்பணத்தை அதிகமாய்ச் செலவழித்ததோடு சமயாசமயங்களில் மிஷன் பணத்தையும் அவர்கள் கஷ்டத்திற்கு நிவிர்த்திசெய்யும்படியாக செலவழித்து உதவி செய்திருக்கிறார்கள். கஷ்டப்படுகிற ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு உதவிசெய்து, அவர்களுடைய கஷ்டத்திற்கு நிவிர்த்திசெய்யாவிட்டால் அவர்களுடைய அழியாத ஆத்துமாவுக்கு நஷ்டமுண்டாகுமேயென்ற எண்ணமே அவர்களை அப்படிச் செய்யும்படி ஏவுகிற முகாந்தரமாயிருந்தது. இந்த விஷயத்தில் பணத்தைவிட ஆத்துமாக்களைப் பெரிதாக எண்ணினார்கள். "நீங்கள் உலகப்

பொருள்களினால் தேவனைச் சம்பாதியுங்கள்" என்ற
வேதவாக்கியத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு அவர்களுக்
குச் சரீர நன்மையைக் கொடுத்து அந்தவிதமாய் அவர்கள்
ஆத்துமாவை ஆதாயப்படுத்திக்கொண்டார்கள். இல்லா
விட்டால் அவர்கள் விசுவாசம் குறைந்துவிட்டு உலக நன்
மையைத் தேடி அநேகர் பின்வாங்கும்படி ஏதுவாயிருந்
திருக்கும். "எந்த ஏழைக்கும் உன் முகத்தைமறையாதே"
என்ற வேதவசனத்தின்படி இரவில் நடுச்சாமத்திலும்
பசியாய்த் தன் வீட்டுக்குவந்த அந்நியரானாலும் சிநே
கிதரானாலுஞ் சரி, அவர்கள் பசியை ஆற்றித்தான்
அனுப்புவார்கள். ஒருதடவை இருபது மைலுக்கப்பா
லிருந்து வந்த தன் சபையிலுள்ள ஒரு உபதேசிக்கு
சாப்பாடு கொடுத்து அனுப்பாதவிட்டுத் தன் பிள்ளை
களிலொன்றை அதிக வெறுப்பாய்க் கடிந்துகொண்டார்
கள். அப்படி ஒருக்காலும் பிள்ளைகளைக் கடினமாய்ப்
பேசாதவர்கள் அந்த மனுஷன் பசியோடு வீட்டுக்குத்
திரும்பினதினிமித்தம் கடிந்துகொண்டதை இப்பொழுது
நினைக்கும்போதும் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.
இத்தவிதமான இரக்கக் குணத்தினாலே, தன் சபைகளி
லுங்கூடக் கண்டிப்புச் செய்யவேண்டிய விஷயங்களி
லும் தயவாய் நடத்தி இரக்கத்தைப் பாராட்டி அவர்களை
இணக்கப்படுத்திக்கொள்வார்கள். அவர்கள் ஒருவரை
யும் கண்டிப்பினால் மேற்கொள்ளாமல், அன்பினால் சகல
ரையும் மேற்கொண்டார்கள்.

3. சுறுசுறுப்பு.—அவர்கள் தேவ ஊழியத்தில் காணப்
பட்ட இச்சிறந்த குணம் அவர்களிடத்தில் பழகின அநே
கருக்கு ஒரு படம்போலிருக்கிறது. இரவாயிருந்தாலும்,
பகலாயிருந்தாலும், காடாயிருந்தாலும், வீடாயிருந்தா
லும், எப்பொழுதும் தன் வேலையில் சுறுசுறுப்பாயிருப்
பார்கள். அவர்கள் சுகவீனமாயிருந்த காலங்கள்தவிர
மற்ற நாட்களில் அவர்கள் பகலில் படுத்திருக்க நான்
பார்த்தது அபூர்வம். ஆனால் மிஞ்சின வேலையினால்
அதிக ஆயாசமாயிருக்கும் சில சமயத்தில்மட்டும் பிள்ளை
களிலொன்றைக் கூப்பிட்டு கெடியாரத்தைப் பார்க்கச்



சொல்லி நாள் கொஞ்சநேரம் படுத்து இளைப்பாறப்போ
கிறேன். அரைமணி நேரமானவுடனே என்னை எழுப்பி
விடு என்று சொல்லி படுக்கப் போவார்கள். அவர்கள்
ஜெபநேரமும் வாசிப்பு எழுத்துவேலை நேரமுந்தவிர
மற்ற நேரங்களிலெல்லாம் பக்கத்து ஊர்களிலும், கிரா
மங்களிலுமிருந்து ஜனங்கள் வந்தவண்ணமாயும், அவர்
களுக்கு இரட்சகரைப்பற்றிப் போதித்த வண்ணமாயு
மிருப்பார்கள். அதுவுமல்லாமல் அந்தப் பெரிய சேக
ரத்திலுள்ள ஜனங்களுக்குள் நடக்கும் மனஸ்தாபம்,
வழக்குகளுக்கெல்லாம் தகப்பனாரிடம் வந்து, நியாயங்
கேட்டு சமாதானப்படுத்திக்கொண்டு போவார்கள். அவர்
வாசிப்பு, ஜெபதபம், எழுத்துவேலை, உலாத்தப்
போதல் சகலமும் ஒழுங்கும் கிரமமுமாயிருக்கும்.
னார் ஓய்வுநாளை ஆசரிப்பதில் வெகு கண்டிப்பா
பார்கள். அதைப் பிள்ளைகளாகிய எங்களுக்கும்,
களிடத்தில் அதிகமாய்ப் பழகினவர்களுக்கும்,
னால் மட்டுமல்ல தங்கள் நடக்கையினாலும் காண்
பிக்கிறார்கள். இதற்கு திருஷ்டாந்தரமாக, அவர்
வியாதிப்படுக்கையி லிருக்கும்போது, வடக்கே
த பெண்மக்கள், ஊர்வந்து சேர்ந்த அன்று ஓய்வு
ளாயிருக்கும்படி நேரிட்டது. தகப்பனாருக்கு இவர்
ள் ஞாயிற்றுக்கிழமையில் பிரயாணம்செய்வது சற்றுங்
ம் பிரியமில்லாதபடியால் அவர்களை அழைத்துக்
கொண்டு வரப்போனவர்களிடம், ரெயிலிலிருந்து இறங்கி
னதும், ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருந்த தகப்பனாரு
டைய சபையைச்சேர்ந்த புளியம்பட்டியென்ற ஊரில்
கலில் ஆராதனைக்கிருந்து மறுநாளில் வரும்படி திட்ட
ஞ்செய்து அனுப்பினார்கள். ஆனால் அருமைத் தகப்ப
னை எப்போது பார்க்கலாமென்று ஆவலோடு நெடும்
பிரயாணம் செய்துவந்த பிள்ளைகளுக்கு இது கஷ்டமா
யிருந்தபடியால் அவர்கள் தங்காமல் உடனே வந்து
விட்டார்கள். ஓய்வுநாட்களில் பிரசங்கக்குறிப்புத் தவிர
அவர்கள் ஒரு சிறு காகிதமுதலாய் எழுத நாங்கள்
பார்க்கவில்லை. கிராமங்களுக்குப் பிரயாணம் செய்கிற

தாயிருந்தால் ஞாயிறு இரவு ஒருமணிக்குமேல் புறப்
படுகிறதும், திரும்புகிறதாயிருந்தால் சனிக்கிழமை இரவு
பன்னிரண்டுமணிக்குமுன் வரவுஞ் செய்வார்கள். அதற்
குப் பிந்தினால் அன்றிரவில் வரமாட்டார்களென்று
திட்டமாயறிந்துகொள்வோம். ஞாயிற்றுக்கிழமை முழு
வதையும் அமைதலோடு பின்னிடுவார்கள். காலையி
குடும்பஜெபமானதும் எட்டுமணிக்குக் கோவில் ஆரா
தனை நடக்கும். அதன்பின் பத்துமணிக்குமேல் அவ
மணி நேரம்வரை ஓய்வுநாள் பள்ளிக்கூடம் நடக்கும்
அந்த ஜனங்கள் ஏழைகளானதால் சாயந்தரவேளையி
ஆராதனை வைக்கிறதினால் வீட்டுவேலையைவிட்டு ஜெப
திற்கு வரத் தடைப்படுவார்களென்று அவர்கள் வசதி
கேற்றபடி பகல் இரண்டுமணிக்குமேல் ஆரா
நடக்கிறது வழக்கம். அந்த ஆராதனைக்கு
மூன்றுமைலுக் குட்பட்ட பக்கத்திலுள்ள ஜனங்கள்
மாய் வருவார்கள். சாயங்காலம் நாலுமணிக்கு
டில் ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகளை வீட்டுக்
வழைத்து வேதவாக்கியம் கேட்டு புத்திமதி செ
அனுப்பிவிட்டு, அதன்பின் வெளியே உலாவப் போ
போது எதிர்ப்படுகிற ஜனங்களுக்கு இரட்சக
பற்றி அறிவிக்காமல் வரமாட்டார்கள். ஓய்வுநாட்களி
அதிகாலையில் ஆலயத்திற்கு ஆயத்தப்படும்படி பிள்ளை
களையும் வீட்டிலுள்ள எல்லாரையும் உற்சாகப்படுத்தி
கொண்டே இருப்பார்கள். ஆலயத்துக்குப் போகுமு
என்ன அவசரவேலையிருந்தாலும் குடும்பஜெபம் செ
யாமல் புறப்படமாட்டார்கள். அந்தச் சமயங்களி
அவர்கள் அதிகமாய் வாசிக்கும்படிக் குறித்துக் கொடு
திருந்ததும், அவர்களுக்கு அதிக பிரியமுள்ள 42, 63
84, 122-ம் சங்கீதங்கள்தான். அந்தச் சங்கீதங்களை
எப்போதும் வாசித்து வழங்கிவந்தபடியால் இன்றைய
வரைக்கும் அந்தச் சங்கீதங்களை நாங்கள் எந்தச் சமயத்
தில் வாசித்தாலும், எங்கள் அருமைத் தகப்பனார் முன்
னிருந்து வாசிக்கிற அந்தப் பழைய ஞாபகம் வருகிறது.
எங்களுக்கு நன்மையும் பிரயோஜனமுமான அநேக



அருமையான புத்திபோதனைகளையும் நன்மாதிரிகளையும்
அவர்களை லேசில் மறக்கக்கூடாதவிதமான நல்ல படிப்
பினைகளையும் காண்பித்தும் சொல்லியும் இருக்கிறார்கள்.
ஓய்வுநாளை ஆசரிக்கும் விஷயத்தைப்பற்றி அதிக பய
பக்தியாய்ப் பேசுவார்கள், ஜெபிப்பார்கள். இந்தநாள்
எங்களுக்கு மனமகிழ்ச்சியும், ஆத்மாவுக்கு இளைப்பா
றுதலான நாளுமாயிருக்கிறது. இனிமேல் மறுமையில்
நாங்கள் அடையப்போகிற நித்திய இளைப்பாறுதலுக்கு
இது முன்குறிப்பென்றும் சொல்லுவார்கள். பின்னும்
இந்த நாளை நாம் எவ்வளவு பரிசுத்தமாய் ஆசரித்துப்
பின்னிடுகிறோமோ, அதற்குத் தகுந்தபடி அந்த வார
முழுவதும் ஆசீர்வாதமாய் இருக்கும் என்பார்கள்.

4. ஜெபத்தில் ஊக்கம்.—அவர்கள் எந்த அற்பகாரி
யம் செய்தாலும், அதை ஜெபத்தோடு தொடங்கி, ஜெபத்
தோடு முடிப்பார்கள். எந்த இடத்திற்குப் புறப்பட்
டாலும், ஜெபம் செய்துதான் புறப்படுவார்கள். தான்
ஒரு பொருளை வாங்கினாலும், அதை விற்றாலும் ஒவ்
வொன்றையும், ஜெபத்தில் யோசித்துத்தான் செய்வார்
கள். ஜெபவிஷயத்தில், பெரிய காரியம், சிறிய காரிய
மென்று கவனிக்கமாட்டார்கள். உலகவிஷயமாய் என்ன
அற்பகாரியமாயிருந்தாலும், தகப்பனிடம் பிள்ளை கேட்
கிறதுபோல போராட்டத்தோடு கேட்டு, இரண்டொரு
தடவைகளில் இதற்குப் பதிலும் அருளப்பட்டிருக்
கிறது. திருஷ்டாந்தமாய், என் மூத்த சகோதரி
விவாகஞ்செய்த சில காலத்திற்குப்பின் தகப்பனார்
வீட்டிற்குவந்த சமயத்தில் சாமான்களை எடுத்துவைக்
கும்போது அதிலுடனிருந்த ஒரு சிறு நகைப்பெட்டி
யையும், உள்ளேயிருக்கிறது இன்னதென்பதை அறி
யாமல் பெட்டியின் அருகினால், பிரியப்பட்டு ஒரு
சிறு பையன் அதை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.
சற்றுநேரம் பொறுத்து, பெட்டியின் ஞாபகம் வரவே,
எங்கும் தேடிப்பார்த்தும் காணப்படாததால் எல்லாருக்
கும் கவலையும், விசனமும் அதிகப்பட்டது. அவர்கள்
வந்ததினாலுண்டான சந்தோஷமெல்லாம் போய்விட்டது

போலிருந்தது. உடனே வீட்டிலுள்ள மனவருத்தத்தையும், கவலையையும் தகப்பனார் கண்டு, முழங்காலில் நின்று ஆண்டவரே, என் பிள்ளைகளைச் சந்தோஷங்கொண்டுவந்து சேர்த்தீர். ஆனால் இந்தச் சந்தோஷத்திற்கு ஒரு குறைவுண்டாக நேரிட்டிருக்கிற இந்தக் காரியம் இன்னதால் நடந்ததென்று உமக்குத் தெரியும். நாங்கள் அநியாயமாய்ச் சம்பாதித்த பொருளல்ல, எங்களுக்கு இந்தக் கவலையை நீக்கிச் சந்தோஷத்தையுண்டு பண்ணுமென ஜெபித்தார்கள். ஜெபம்பண்ணி முடியவும் ஒரு மனுஷன் ஓடிவந்து, ஐயா, இதோ இருக்கிறது உங்கள் பொருள் என்று கொண்டுவந்து கொடுத்தான். பின்னும் ஒருதடவை அவர்களுடைய விசுவாசமுள்ள ஜெபத்தினால் திருடர்களையுங்கூட ஜெயித்துவந்தார்கள். ஒருநாம் கிராமம் சுற்றிப் பார்க்கும்படி இரவில் பிரயாணம்பண்ணுகிறபோது நடுக்காட்டில் இரண்டு மூன்று திருடர் வண்டியைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்போது தகப்பனாருக்குத் திகிலினால் உடம்பெல்லாம் சிலிர்த்துவிட்டது. உடனே தான் செய்யவேண்டியதின்னதென்று தெரியாமல் ஒரு சிறு ஜெபமட்டும் போராட்டத்தோடு செய்துவிட்டு பின்பு அவர்களிடத்தில், "நீங்கள் யாரப்பா?" என்றார்கள். இவர்கள் சத்தம் கேட்டவுடனே அவர்களெல்லாரும், திடுக்கிட்டு, "ஐயா, நாங்கள் என்று தெரியாது, மன்னித்துக்கொள்ளுங்கள்" என்று காலில் விழவே, அந்த நடுக்காட்டில் அவர்களுக்குச் சற்றுநேரம் புத்திசொல்லி விட்டுப்போனார்கள். அவர்கள் விசுவாசத்தோடு பண்ணின ஜெபமல்லவா அந்தச் சத்துருக்களையும் பேச்சொழியச் செய்தது. அந்த விசுவாசமுள்ள ஜெபமே, அச்சத்துருக்கள் கல்நெஞ்சை இளகச்செய்து அவர்களை இவர்களோடு சமாதானமாக்கிற்று. இதற்கெல்லாம், பழைய ஏற்பாட்டின் காலத்தில், எலியாவின் ஆவி அவரோடிருந்த எலிசாவுக்குக் கொடுக்கப்பட்டதுபோல திருநெல்வேலியில் [illegible] ஜெபத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டு கூடாரப்பிரசங்கம் செய்துகொண்டிருந்த கனம் ராக்லெண்ட் ஐயரோடு



இவர்களும் சிலகாலம் பின்னிட்டு அவருடைய பரிசுத்த மாதிரியைப் பின்பற்றினபடியினால் அவ்வரத்தால் இவர்களும் நிரப்பப்பட்டிருந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. கனம் ராக்லெண்ட் ஐயருடைய ஜெபத்தின் தன்மையையும், அவர்கள் விசுவாசத்தின் தன்மையையும்பற்றி ஒருதடவை தகப்பனார் பண்ணின பிரசங்கத்தில் தெளிவாய்க் காண்பித்தார்கள். அதாவது, இவர்கள் கூடாரப்பிரசங்கம் பண்ணிக்கொண்டு திரிகிறபோது அவருடைய விலையுயர்ந்த முக்கியமான ஒரு புஸ்தகத்தைக் காணவில்லையென்றறிந்து அதிக விசனப்பட்டதோடு, தகப்பனாரைக் கூப்பிட்டு, "வேதநாயகம், வாரும் நாம் ஜெபம்பண்ணுவோம்" என்று முழங்காலில் நின்று ஒரு தகப்பனிடம் பிள்ளை வழக்காடுவதுபோல, எங்களுக்குக் காணாமற்போன வஸ்துவைக் காண்பியும், அதற்காக, நாங்கள் செய்யவேண்டிய வகையைக் காட்டுமென்று, விசுவாசத்தோடு ஜெபம்பண்ணி எழுந்ததும், அதைத் திருடினவன் ஓடிப்போவதைப் பார்த்து, அவனைப் பிடித்துக்கொண்டார்கள். அப்படியே விசுவாசத்தோடு நாம் ஜெபம்பண்ணினால் அநேக காரியங்களில் ஜெயங்கொள்ளலாமென்று சொன்னார்கள்.

ஒருதடவை தன் பெண்மக்களிலொன்று பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கிறபோது அங்கே நேரிட்ட ஒரு பெரிய ஆபத்தில் அவள் விசுவாசத்தோடு போராட்டமாய் ஜெபம்பண்ணினதால் தான் காப்பாற்றப்பட்ட விஷயத்தைத் தகப்பனாருக்கு எழுதவே, அதற்கு பதில் அவர்கள் எழுதினதாவது, "என் அருமைமகளே, ஆண்டவர் உன்னைப் பெரிய ஆபத்தினின்று காத்திருக்கிறார், நீ ஜெபத்தினால் இரட்சிக்கப்பட்டேனென்று எழுதியிருந்தாயே, நானும் இவ்வளவு காலத்திற்குள் அநேக திருஷ்டாந்தங்களை அநுபவத்தால் கண்டிருக்கிறேன். நாம் விசுவாசத்தோடு ஆண்டவரிடம் ஜெபிப்போமானால் அவர் மெய்யாகவே, நம்முடைய ஜெபத்தைக் கேட்பார், நீயும் அப்படியே செய்வாயானால் இதுமட்டுமல்ல, இன்னும் உன் ஜீவகாலத்தில் இவ்விதமான அநேக காரியங்

களைக் கண்டுபிடிப்பாயென்று எழுதினார்கள். இந்தவிதமாய் எப்பொழுதும் அவர்கள் ஜெபத்தைத் தனக்குப் பிரயோஜனமாக உட்கொண்டார்களென்று பிள்ளைகளாகிய நாங்கள் திட்டமாய்ச் சொல்லக்கூடும். சிலவேளைகளில் அவர்கள் பண்ணுகிற ஜெபம் அதிக விசேஷிக்கப்படத்தக்கதாயிருக்கும், முக்கியமாய் பிள்ளைகளின் விவாகசமயத்திலும், பிள்ளைகளெல்லாரும் ஒன்றாய்க் கூடும் சமயத்திலும் அவர்கள் பண்ணுகிற ஜெபம் அதிகமாய்க் கவனிக்கப்படத்தக்கது. அதாவது "ஆண்டவரே, எங்கள் பிள்ளைகள் இனத்தார் எல்லாரும் ஒன்றாய்க் கூடப்போகிறோம், யார் யார் வந்தாலும் வராவிட்டாலும் நீர்மட்டும் எங்களை விட்டுப் போய்விடாமல் எங்களோடுகூடவிரும். நாங்கள் ஒன்றாய்க் கூடியிருக்கும்பொழுது பிசாசானவன் எங்கள் நடுவில் வந்து ஊடாடி எங்கள் சமாதானத்தைக் கெடுத்துப்போடாதபடி நீர் எங்களைச் சுற்றிலும் மதிலாயிரும். நாங்கள் இன்னின்ன காரியம் செய்யப்போகிறோம். உமக்குச் சித்தமானால் எங்களுக்கும் நன்மையாயிருந்தால் அதை வாய்க்கச்செய்யும். இல்லாவிட்டால் நிறுத்திப்போடும் என்று கட்டாயமாய் ஜெபம் செய்வார்கள். பின்னும் அவர்களுடைய ஜெபங்களில், ஆண்டவரே! நீர் எதை எங்களைவிட்டு எடுத்துப்போட்டாலும், உம்முடைய கிருபையைமட்டும் எங்களைவிட்டு எடுத்துப்போடாதேயும் என்று நாள்தோறும் பண்ணுகிற ஜெபம் இப்போதும் எங்கள் காதுகளில் தொனித்துக்கொண்டிருக்கிறது. இந்தவிதமாய் அவர்கள் ஜெபத்தைத் தனக்கு அநேக காரியங்களில் இருபுறமும் கருக்குள்ள ஆயுதமாகவும், சத்துருக்களை இணக்கப்படுத்தும் சமாதான தூதனாகவும், காணாமற்போனவைகளைக் கண்டுபிடிக்கும் கருவியாகவும், மறைவானவைகளையும் வெளிப்படுத்தக்கூடிய திருஷ்டியாகவும் எப்பேர்ப்பட்ட அரிய காரியங்களையும் நடப்பிக்கக்கூடிய சிறந்த வஸ்துவாகவும் கண்டுகொண்டார்கள். ஜெபத்தினால் என் தகப்பனார் அடைந்த ஜெயம் நாங்கள் அறிந்தமட்டும் இன்னும் அநந்தமுண்டு.



5. தாழ்மை.—அவர்களிடத்தில் காணப்பட்ட விசேஷித்த குணம். அவர்களிடத்தில் அதிகமாய்ப் பழகினவர்களுக்கும், அவர்களோடு அதிகமாய் சம்பாஷித்தவர்களுக்கும் இது உண்மையென்று விளங்கும். தான் தாழ்மையாய் நடந்துகொள்ளுகிறதுமாத்திரமல்ல, பிள்ளைகளுக்கும் அடிக்கடித் தாழ்மையாய் நடந்துகொள்ள வேண்டுமென்றும், உங்கள் தாழ்மையான நற்குணத்தை மற்றவர்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்றும் புத்தி சொல்லுகிறதோடு, கனி நிறைந்த ஒரு மரம் தாழ்ந்து வளைந்து கொடுக்கிறதேயொழிய, கனியற்ற வெறுமரந்தான் நிமிர்ந்து நிற்கிறது என்கிற திருஷ்டாந்தத்தை தாழ்மைக்கும் பெருமைக்கும் ஒப்பிட்டுக் காண்பித்துக் கர்த்தருடைய வசனத்தில் தாழ்மை என்கிற இச்சிறந்த குணத்தை ஒரு ஆபரணம்போல் காண்பித்திருக்கிறபடியால் அதை நீங்கள் அணிந்துகொள்ளவேண்டுமென்று முக்கியமாய்க் குறிப்பிட்டுப் பேசுவார்கள். இதுவிஷயத்தில் பிள்ளைகளுக்குத் தான் போதித்த போதனையைவிடத் தான் அதிகமாய் நடந்து காண்பித்திருக்கிறார்கள். கனம்பண்ணுகிறதில் மற்றவர்களுக்கு முந்திக்கொள்வார்கள்.

6. தன்னயம் பாராமை. — அவர்கள் தன்னயம் பார்க்கிறவர்களல்லவென்பதைப்பற்றி அவர்கள் கடைசிவரைக்கும் இருந்து ஆண்டவருக்கு ஊழியஞ் செய்யும்படியாகத் தெரிந்துகொண்ட ஊரைக் கவனித்தவர்கள் சாட்சி பகருவார்கள். ஆதியில் தெரிந்துகொண்ட இடத்தையே தனக்குக் கடைசிவரைக்கும் நிலையாக்கிக்கொண்டார்கள். மற்றப்படி தனக்கும், தன் குடும்பத்துக்கும் பிரயோஜனமான அநேக இடங்கள் இருந்தும் இதைவிட்டு என்ன நஷ்டமிருந்தாலும் பெரிதல்லவென்று உலக நன்மையை இழந்தார்கள். இதினால் ஆண்டவர் அவர்களையும் ஆசீர்வதித்தாரேயொழிய அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடவில்லை. அவர்களிருந்த இடம் பட்டணக்கரையாகிவிட்டது. சகல கனமும், சுகமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

நல்ல சிநேகிதர்களுடைய சகவாசமும் அடிக்கடி கிடைத்தது. காணாமல் வழிதவறிப்போகிற ஆடுகளை ஆண்டவருடைய மந்தைக்கு இழுத்துக்கொண்டு வரத்தக்க முக்கியமான ஸ்தலமாய்க் காணப்பட்டது. அவர்கள் குடும்பகாரியமாகவும், அவர்கள் பிள்ளைகளின் விவாக விஷயத்தில் அநேகர் இதை ஒரு முக்கிய குறிப்பாக எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள். நாட்டுப்புறமென்ற அந்த இடத்திலிருந்த அவர்கள் பெண்மக்களிருவருக்கு முன்னும் முகமறியாத தெலுங்கு தேசத்திலிருந்து கர்த்தர் அருமையான இரண்டு ஊழியக்காரர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பினார். இதைக் கர்த்தருடைய இணைப்பென்று அவர்கள் விஷயத்தில் அறிந்தவர்கள் சொல்லுவார்கள். சுயபாஷை சுயஜனத்தையறியாத அந்த அந்நிய இடத்தில் அவர்கள் போய் ஆண்டவருக்கு மகிமையாக உழைக்கும்படி அவர்களைத் தெரிந்துகொண்டார். தகப்பனாரிருந்த ஊர் ஒரு மூலையில் ஒரு நாட்டுப்புறமென்று சொல்லப்பட்டபோதிலும் அதன் பேர் எங்கும் பிரஸ்தாபமாகி, அவருடைய நாமத்தின் மகிமையும் பிரபலமாகும்படி யிருந்தது.

என் அருமைத் தகப்பனார் பிள்ளைகளிடத்திலும், மற்றவர்களிடத்திலும் அதிக அன்பு பாராட்டுவார்களென்று சொன்னேனே. ஆனால் யாராவது தப்பிதஞ் செய்து அவர்களுக்கு விசனமுண்டாக நடந்துவிட்டால் சில மணிநேரத்திற்காவது அல்லது சில நாளைக்காவது முகத்தினால் காட்டிவிடுவார்கள். அவர்களுடைய மலர்ந்தமுகம் வாடிப்போகும். கோபமான பேச்சினாலாவது மற்றவிதமான தண்டனையினாலாவது காண்பியாமல் அவர்களன்பான பேச்சைச் சிலகாலம் நிறுத்திவிடுவார்கள். அவர்களின் அருமையை மதித்தவர்களுக்கு அதுவே போதுமான தண்டனையாய்க் காணப்படும். பின்னும் தப்பிதஞ்செய்தவர்களுக்காவது அல்லது தப்பிதமாய்ப் பேசுகிறவர்களுக்காவது புத்திசொல்லும் விதம் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கும். முகங்கடுப்பாய் பேசமாட்டார்கள். மெதுவாய், "அப்பா, அம்



மா" என்றுதான் பேசி நியாயம் காண்பிப்பார்கள். ஆனால் அது கல்நெஞ்சையும் உருக்கத்தக்க வார்த்தையாயிருக்கும். பிள்ளைகள் சிறுப்பத்தில் ஒருவரோடொருவர் மனஸ்தாபத்துக்கு இடம்பண்ணிக்கொண்டு தகப்பனாரிடம் சொல்லப்போனால் இனிமேல் மறுபடியும் தன்னிடத்தில் வந்து பிராது சொல்ல ஏலாதபடிக்கு நியாயமாய்த் தீர்த்துவிடுவார்கள். அவர்கள் பிள்ளைகளிடத்தில் பேசும் மாதிரியையும், புத்திசொல்லும் விதத்தையும்பற்றி அநேக குறிப்புகளுண்டு. ஆனால் ஒரே ஒரு தமாஷான திருஷ்டாந்தமட்டும் காண்பிக்கிறேன். என் சகோதரரில் மூத்தவர் சிறு பிள்ளையாயிருக்கும்போது, தன் இளையசகோதரிகளிலொன்று தன்னை விசனத்தில் பேர்சொல்லிக் கூப்பிட்டதாக தகப்பனாரிடம் வந்து பிராது சொன்னார். அது சில பிள்ளைகளுக்கு வழக்கமே. சந்தோஷமாயிருக்கும்போது அக்கா, அண்ணா என்று சொல்லுகிறதும், விசனம் வந்தவுடனே பேர்சொல்லிக் கூப்பிட்டு தங்கள் கோபத்தைத் தீர்த்துக்கொள்ளுகிறதும் வழக்கம். அப்படியே இவர்களுக்குள்ளும் நடந்தது. அப்போது தன்னிடம் வந்து பிராது சொன்ன மகனைப்பார்த்து, மற்றொன்றும் கேளாமல், "அப்பா, உன் பேர் என்ன?" என்றுமாத்திரம் கேட்டார்கள். அப்போது அந்தப் பிள்ளைக்கு பதில் பேச வாயில்லை. பின்னும் அவனைப் பார்த்து "தம்பி உன்னை ஒன்றும் திட்டவில்லையே, பேரையிட்டுத்தானே சொன்னாள், இதை சகிக்கக்கூடாதா? இது தப்பிதமா?" என்று அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு, அவனில்லாத சமயம்பார்த்து மகளைக் கூப்பிட்டு, "அம்மா, உனக்கு மூத்த சகோதரனல்லவா, அவனைக் கோபமூட்டும்படி அவனைப் பேர்சொல்லிக் கூப்பிடலாமா?" அது சரியல்லவென்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். இது அவர்களுக்குப் பொறுமையையும் சீர்ப்படுதலையும் உண்டாக்கக்கூடிய போதுமான கண்டிப்பாயிருந்தது. கண்டிப்பான வார்த்தைகளையும், வெடுவெடுப்

பாய்ச் சொல்லும் புத்திமதிகளைவிட இதுவே அவர்களுக்கு ஏற்றதாயிருந்தது.

“வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.”

“மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.” (நீதி 15. 1.)

அவர்கள் பிள்ளைகளாகிய எங்களை வளர்த்த அருமையான விதத்தையும் எங்களுக்குப் புத்தியாகச் சொல்லியும் காண்பித்தும்போயிருக்கிற மாதிரிகளை நாங்கள் நினைத்துவிட்டால், எங்களிருதயம் 'அவர்களைப்பற்றிய அன்பினால் கரைந்து பொங்கி வடிகிறது. பிள்ளைகளிடத்திலும், மற்றவர்களிடத்திலும் தான் ஒரு காரியம் செய்கிறதாக வாக்குக்கொடுத்துவிட்டால் அதினிமித்தம் தனக்கு எவ்வளவு நஷ்டம் சங்கடங்களிருந்தபோதிலும் தான் கொடுத்த வாக்கை உறுதிப்படுத்தி முடிப்பார்கள். இவ்விதமாய் அவர்கள் தன் பிள்ளைகளிலொன்றுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றினதைப்பற்றி ஒரு சிறு திருஷ்டாந்தங் காண்பிக்கிறேன். நான் முன் சொன்னதுபோல, தூரமான தெலுங்கு தேசத்திற்கு விவாகஞ்செய்துபோன பிள்ளைகள் விஷயத்தில், பிள்ளைகளைத் தூரமான இடங்களுக்கு அனுப்பினால் பெற்றோர் போய் பார்த்துவராவிட்டால், அது அவர்களுக்கு அநியாயஞ் செய்ததுபோலிருக்குமென்று ஓர்தடவை தகப்பனார் சொன்னதை அந்தப் பிள்ளைகளிலொன்று கேட்டுக்கொண்டிருந்தது. தான் கலியாணம் செய்துபோன சில வருஷங்களுக்குப்பின் தகப்பனாரை வந்துபோகும்படி விரும்பி எழுதியபோது, தகப்பனார் தனக்கு அதிக அலுவலிருக்கிறபடியால் வர முடியாதென்று எழுதிவிட்டார்கள். அதற்குப் பதில் அந்தப் பிள்ளை அவர்கள் முன்கொடுத்த வாக்கை ஞாபகப்படுத்தி அடுத்த காகிதத்தில் எழுதியனுப்பினது. உட



னே. அதற்குப் பதில் தந்திமூலமாய், “நான் இன்ன நாளில் புறப்பட்டு வருகிறேன், காக்கிநாடாவுக்கு ஆள் வந்திருக்கட்டும்” என்று அறிவித்தார்கள். இதில் அவர்களுடைய வாக்குறுதி எவ்வளவென்று வாசித்தவர்கள் திட்டமாயறிந்துகொள்ளலாம். அவர்கள் சபையை நடத்தும் விஷயத்திலோ பிள்ளைகளை நடத்தும் விஷயத்திலோ அவர்களிடத்தில் காணப்பட்ட ஞானமும், விவேகமுமான நடத்துதல்கள் இன்னும் அநேகமுண்டு. அவர்களுடைய பரிசுத்த நன்மாதிரியை நாங்கள் பின்பற்றி நடக்க ஆண்டவர் எங்களுக்குக் கிருபை செய்வாராக.

இவ்விதமாய் ஆண்டவருடைய ஊழியத்தை அந்த இடத்தில் செய்து, அநேக விஷயங்களில் காரியசித்தி அடைந்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை ஒறுத்து, தங்கள் சுயநன்மையை வெறுத்து, தேவ நாம மகிமைக்காக உழைக்கும்போது, அவர் அவர்களையும் மகிமைப்படுத்துகிறார். “என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நானும் கனம்பண்ணுவேன்” என்கிற திருவாக்கை நிறைவேற்றாமலிருப்பாரா? சரீரப்பிரகாரமாகவும், ஆத்துமப்பிரகாரமாகவும், நாம் ஆசிர்வாதமாயிருக்கவேண்டுமானால், அவருடைய கற்பனையைக் கைக்கொண்டு, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். அவருடைய பிள்ளைகளுக்கு அதுவே சிந்தையும், தியானமுமாயிருக்கும். “ஒருவன் உலகமுழுவதையும் சம்பாதித்துக்கொண்டாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்திக்கொண்டால் அவனுக்கு என்ன லாபம்?” (மத். 16. 26.). உலகத்தார் தங்களுக்குக் கீர்த்தியையும், மகிமையையும், பேர் பிரஸ்தாபத்தையும் நிலைநாட்டி உலகசம்பாத்தியம் குறைவில்லாமலிருக்கவேண்டுமென்கிற ஓயாத எண்ணமும் கவலையுமுள்ளவர்களாய் தங்கள் சரீரத்திற்காகப் பிரயாசப்படுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளோ தங்களுக்குப் பரலோகத்தில் பொக்கிஷமிருக்கிறதென்கிற நம்பிக்கையினால் இந்த

உலக சம்பாத்தியத்தில் எண்ணமற்றவர்களாய் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த தேவ நாமம் மகிமைப்பட என்ன வழி செய்யலாமென்று, இரவும் பகலும் அதுவே நோக்கமாய்த் தமது பரம எஜமானுடைய தோட்டத்தில் ஓயாமல் வேலைசெய்கிறார்கள். அவரைப்பற்றிய அன்பினால் அவர்களிருதயம் பொங்கிக்கொண்டிருக்கிறது. அவர்களிருதயத்தின் பக்தி வைராக்கியம் அவர்களைப் பட்சித்துக்கொண்டிருக்கிறபடியால், அவர்கள் இளைப்படையாமல் இவ்வுலகத்தில் அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள்.

கடைசியாக, இந்தச் சிறு புஸ்தகத்தை வாசிக்கும் பிரிய சிநேகிதரே! ஆண்டவருடைய உதவியை முன்னிட்டு என் அருமைத் தகப்பனாருடைய ஜீவிய சரித்திரத்தை எனக்குத் தெரிந்தமட்டும் எழுதி முடித்தேன். இதை எப்படி எழுதி முடிப்பேனென்கிற பயத்தோடு இதைத் துவக்கினாலும், நான் அறியாதவண்ணமாய் இது முடியும்படி சகலத்தையும் நோக்கிக்கொண்டுவந்த என் பரம பிதாவுக்கு நான் அத்தியந்த பக்தியோடு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறேன். அறிவீனர்க்கு அறிவையும், பெலவீனர்க்கு பெலனையும் கொடுக்கிற தேவன் இந்த வேலையைத் துவக்குமுன் எப்படி நினையாதவண்ணம் திடீரென்று ஆரம்பிக்க வழிகாட்டினாரோ அதுமுதல் இது அவருடைய சித்தத்தினால் அவருடைய நாமத்திற்கு மகிமையாகத் தொடங்கப்பட்ட வேலையென்று நினைத்து, இதைக் குறைவறச் சரியாய் முடிக்கவும் வகைகாட்டுவாரென்று அவருக்குள் உறுதியாய் நம்பி எழுதி முடித்தேன். இந்தப் புஸ்தகத்தில் காணப்படும் பிழைகளை இதை வாசிக்கும் பிரிய சிநேகிதர் மன்னிக்கக் கேட்கிறதோடு இதில் சொல்லப்பட்டிருக்கிற அந்த உத்தமருடைய நடபடிக்கையிலும், பரிசுத்த மாதிரியிலும் புத்திபோதனையிலும், சுவாமியின் ஊழியத்தில் காண்பித்த பக்திவைராக்கிய சிந்தையிலும், பிறரை நேசிக்கும் குணத்திலும் நாம் கற்றுக்கொள்ள



வேண்டிய அநேக நன்மாதிரிகளைக் கவனித்து அதின்படி நடக்க தேவன் தம்முடைய ஆவியைக் கொடுக்கும்படி ஜெபத்தோடு வாசித்து முடிக்கவும் தயவாய் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து, உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து அவர்கள் நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்கள் விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.” (எபி. 13. 7.)

S. P. C. K. Press, Vepery, Madras—1899.

# ERRATA.

## பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 31 | 1885-௵ | 1886-௵. |
| 37 | 6,7 | சுதேசியாயிருக்கிற | சுதேசியாயிருக்கிற ஒருவருடைய. |
| 65 | 33 | நான் | நாங்கள். |
| 66 | 13 | அவர் | அவர்கள். |
| 67 | 2,3 | அவர்களின் | அவர்களுடைய. |
| ,, | 29 | இந்த பிள்ளை | அவர். |
| 68 | 2 | தகப்பனும் | தகப்பனுடைய. |
| ,, | 4 | அவர்கள் விசுவாசத்தையும் | அவர்கள் தகப்பனுடைய விசுவாசத்தையும். |
| 76 | 30 | 1887-௵ | 1886-௵. |